## கோகிலா மகேந்திரன்



# துயிலும் ஒருநாள் கலையும்

educer Demo

PDF Reducer

educer Demo

# துயிலும் ஒரு நாள் கலையும்

*

கோகிலா மகேந்திரன்

*

சிவன் கல்வி நிலைய வெளியீடு - 4

PDF Reducer

**Thuyilum Oru Nal Kalaiyum**

A Novel in Tamil by

KOHILA MAHENDRAN (C)

*First Edition :* April, 1986

*Published by :-* Sivan Kalvi Nilayam,
Viliciddy, Tellippalai.

*Printed at :-* Kugan Press, Tellippalai

*Price Rs. :-* **20/-**

# ஒரு நிமிடம்

இது என்னுடைய முதல் நாவல்!

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கம்பீரமாய் உயர்ந்து நிற்கும் பாவலர் துரையப்பாபிள்ளையின் சிலை அருகே சிவப்பும் பச்சையுமாய் நெளிந்து நிற்கும் வரிசைக் குரோட்டன்களுக்கு முன்னால், ஒரு நாள் —

வீரகேசரிக்கு ஒரு தொடர்கதை எழுதுமாறு அதன் பிரதம ஆசிரியர் திரு. ஆ. சிவநேசச்செல்வன் அவர்கள் கேட்டுக் கொண்டார். யாழ்ப்பாணத்தின் educer Demo ஒரு சராசரிக் கல்லூரி — அதன் பலங்கள், பலவீனங்கள் — அதன் சிறப்புகள், குழப்பங்கள் — அங்கு நடமாடும் மனிதர்களின் குறைகள், நிறைகள் இவற்றைக் களமாகக் கொண்டு ஒரு நாவல் எழுதலாம் என்ற சிந்தனை அந்தக் கணத்தில் எனக்குள் முளைத்தது. அந்த முளையைக் கருகிப்போக விட்டிருப்பேன் எனது சோம்பேறித்தனத்தால்! ஆனால் ஆசிச் செல்வன் அவர்களின் கடிதங்கள் இது குறித்து அடிக்கடி நினைவுபடுத்தி வந்தன. இறுதியில் அவரது வற்புறுத்தலுக்கு ஈடுகொடுக்க முடியாமலே ஒரு நாள் அமர்ந்து இந்த நாவலை எழுதத் தொடங்கினேன்.

சில அத்தியாயங்களை எழுதி முடித்து அனுப்பினேன். திருமதி அன்னலட்சுமி இராஜதுரை அவர்களின் பெரு விருப்பத்தினால் இது மித்திரன் வார மலரில் பிரசுரமாகியது. பின்னர் வாரந்தோறும் ஒவ்வொரு அத்தியாயமாய் எழுதி முடித்தேன்.

வாரம் ஒரு அத்தியாயம் எழுதிய அவசர நிர்ப் பந்தத்தினுல் இதில் அப்போது மிக அதிக கவனஞ் செலுத்த என்னுல் முடியாமல் போயிற்று; பின்னர் எனக்குக் கிடைத்த பல விமர்சனங்களின் அடிப்ப டையில்—முக்கியமாய் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் தம்பதிகளின் அபிப்பிராயப்படி — இந்த நாவ லில் சில மாற்றங்களைச் செய்து இப்போது நூலுரு வில் தருகிறேன்;

சமுதாயத்தில் நான் சந்தித்த பல பூரணிகளின் கலவையே இந்தப் பூரணி. அது போலவேதான் ஒவ் வொரு பாத்திரமும்! சமுதாயத்தில் வாழும் எந்த ஒரு தனி நபருக்கும் இங்கு பிரத்தியேக தளம் ஒதுக் கப்படவில்லை; ஆயினும் உங்களில் பலர் '' இது நான் தானே?'' என்று நினைத்தால் அது எனது வெற்றியே!

PDF Reducer

இதைவிட எனக்குத் திருப்தி தரக்கூடிய நாவல் ஒன்றை நான் விரைவில் எழுதலாம் என்றே எனக் குத் தோன்றுகிறது. இந்த நாவலுக்கு நீங்கள் சொல் லப்போகும் கருத்துக்கள் அதற்கு உதவலாம்.

இந்த நாவலின் ஊடாகத் தொனிக்கும் எதி ரொலி, ஒரு சில மனிதர்களையாவது மெதுவாய்த் தானும் உரசிச் செல்லாதா என்ற ஏக்கம் எனக்குள் உண்டு. தமிழ் மக்களின் விடுதலையுணர்வுகள் போலவே இன்று பெண்களின் உணர்வுகளும் விழிப் பெய்துகின்றன என்பதற்கு இது ஒரு கோடு காட் டலாய் அமையலாம். இங்கு என்னுல் சொல்ல முடிந் தவை இருப்பது போலவே சொல்ல முடியாதனவும், சொல்ல விரும்பாதனவும் உள.

இந்த நாவல் வெளிவருவது தொடர்பாய் என் நன்றிக்குரியவர்கள் இவர்கள்.

திரு. ஆ; சிவநேசச்செல்வன் அவர்கள்
திருமதி அன்னலட்சுமி இராஜதுரை அவர்கள்
கலாநிதி நா; சுப்பிரமணியஐயர் அவர்கள்
புலோலியூர் ஆ; இரத்தினவேலோன் அவர்கள்
ஓவியர் லங்கா அவர்கள்
தெல்லிப்பழை குகன் அச்சகத்தினர்

யாழ்ப்பாணத்தின் மிக நெருக்கடியானதோர் காலகட்டத்திலும் இது வெளிவர முடிந்துள்ளமையை எண்ணி மகிழ்கிறேன்;

விழிசிட்டி,
தெல்லிப்பழை;
17 - 4 - 86

கோகிலா மகேந்திரன்

educer Demo

# அணிந்துரை

கலாநிதி நா. சுப்பிரமணியன்
தமிழ் விரிவுரையாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கோகிலா மகேந்திரன் அவர்களுக்கு அறிமுகம் அவசியமில்லை. கடந்த பத்தாண்டுக் காலப் பகுதியிலே எழுத்துலகப் பிரவேசம் செய்து அயராது தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பதன்மூலம் இலக்கிய உலகில் நன்கு அறிமுகமாகிவிட்டவர் அவர். பெருந்தொகையான சிறுகதைகளை எழுதியுள்ள இவர் 'விழி' என்ற புனைபெயரில் கவிதைகளும் புனைந்தவர்; துயிலும் ஒரு நாள் கலையும் என்ற இப்படைப்பின் மூலம் நாவலுலகிலும் பிரவேசிக்கிறார்.

இந்நாவல் அகமும் புறமும் ஆகிய இரு கதைகளின் இணைப்பாகும். ஒன்று கணவனின் தாழ்வுச்சிக்கலாலும் அன்பில்லாத 'செக்ஸ்' ஆலும் பாதிக்கப்பட்டு அச் சிறைவாழ்விலிருந்து விடுதலை பெறத்துடிக்கும் ஒரு மனைவியின் கதை. இன்னொன்று கல்லூரிச் சூழலின் பொய்மைகளுக்கும் பொய்ம்முகங்களுக்குமிடையில் உண்மையான நட்பையும் நல்ல உள்ளங்களையும் காண விழையும் ஒரு ஆசிரியையின் கதை. இவ்விரு கதைகளையும் இணைத்து நிற்பது நாவலின் தலைவியாக அமையும் பூரணி என்ற பாத்திரம். விஞ்ஞானக் கல்வி மூலம் 'எதையும் அறிவு பூர்வமாக அணுகும்' நோக்கும், டேல்கார்ணகி முதலிய உளவியலாளர்களின் நூற்பயிற்சி காரணமாகப் பெற்ற உளவியல் சார்ந்த அணுகுமுறையும் பூரணியின் ஆளுமைகள். இவற்றால் அவள் தன்னையும் தன்னைச் சூழவுள்ள

வர்களையும் உரியவகையில் விளங்கிக் கொள்ளவும் விமர்சிக்கவும் முற்படுகிறாள் இவ்விளக்கம் விமர்சனம் என்பவற்றின் பேறாகத் தனது வாழ்க்கைப் பாதையைச் செப்பனிட்டுக் கொள்கிறாள்.

நாவலின் பிரதான கதையம்சமாகிய 'மனைவியின் கதை' தமிழர் சமுதாயத்திலே திருமணம் என்ற புனிதப்பிணைப்புத் தொடர்பாக நிலவும் முக்கிய குறைபாடொன்றை அடிப்படையாகக் கொண்டது. மண வாழ்க்கை என்ற மாளிகைக்கு ஆண் — பெண் இருவரதும் மனப்பொருத்தமே அத்திவாரமாக அமைய வேண்டும். ஆனால் மனப்பொருத்தம் நோக்காது பணம், அந்தஸ்து என்பவற்றை அத்திவாரமாக இட்டு மணவாழ்க்கையைக் கட்டியெழுப்ப முயல்வதே பெருவழக்கு. இவ்வாறான இணைப்பின் பின்னரும் கணவன் — மனைவி ஆகிய இருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள முற்பட்டால் வாழ்க்கை ஒருவாறு தொடரப்படும்; தவறினால் அவ்வாழ்க்கை சிறையாகவும் நரகமாகவும் மாறிவிடும். தமிழ்ப் பண்பாட்டின்படி பெண்மையே இதனாற் பெரும் பாதிப்படைகிறது. இச்சிறையிலிருந்தும் நரகத்தினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளவிரும்பும் பெண்மையின் நியாயமான உணர்வுகளைச் சமூகம் பாரம்பரியமான கற்பு எனப்படும் பண்பாட்டு விழுமியம் மூலம் கட்டுப்படுத்திவிடுகிறது. இக்கட்டுப்பாட்டை உதறித் தள்ளிவிட்டுச் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முற்படும் பெண்மையுணர்வுகளை நியாயப்படுத்துவதே இக்கதையின் தொனிப்பொருளாகும். மனப் பொருத்தமின்றிப் பெற்றோரது விருப்பத்திற்கேற்ப வியாபாரியொருவனுக்கு மனைவியாகிவிட்ட பூரணி கணவனை உரியவகையிற் புரிந்துகொண்டு வாழ முயற்சிக்கிறாள். தனது நியாயபூர்வமான உணர்வுகளை அவன் புரிந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறாள். கல்வியின் ஏற்றத்தாழ்வு கணவனுக்கு ஏற்படுத்திய தாழ்

educer Demo

வுச் சிக்கலின்முன் பூரணியின் முயற்சிகள் பலனற்றுப் போய்விடுகின்றன. பூரணியின் செயல்கள் யாவற்றிலுமே குற்றங்காணும் கணவன் அவளது ஒழுக்கத்திற் கூடக் களங்கம் காண முற்பட்டபோது அவள் துயில் ஒரு நாள் கலைகிறது; கணவனைப் பிரிந்து தனித்து வாழத் தொடங்குகிருள்.

துணைக் கதையம்சமாகிய 'ஆசிரியையின் கதை' யிலே கல்விசார் சூழலின் உளவியற் குறைபாடுகள் முக்கிய கதைப்பொருளாகின்றன. ஒழுக்கமும், வழிகாட்டித் தன்மைக்குரிய உயர்பண்புகளும் பெற்றிருக்கவேண்டிய ஆசிரியர்களிற் பலர் வஞ்சகம், சூது, பொருமை, ஏற்றத்தாழ்வுணர்வு, களவு முதலான சிறுமைத் தனங்களாற் கல்விச் சூழலைச் சீரழிப்பது இப்பகுதியிலே விமர்சிக்கப்படுகிறது. இத்தகைய சிறுமைகட்கான உளவியற் காரணிகளை ஆராய்வதிலும் அவற்ருல் தனக்கு ஏற்படும் பாதிப்புகளிலிருந்து தற்காத்துக் கொள்வதிலும் முயலும் பூரணிக்கு இந்திரன் மாஸ்டர் என்ற பண்பாளனின் நட்பு 'பாலைவனப் பசுந்தரை'யாக அமைகிறது. கல்லூரி வாழ்க்கையில் மட்டுமன்றி இல்லற வாழ்க்கையிலும் அவள் எய்தும் மனப் புண்களுக்கு இந்திரனின் நட்பு மருந்தாக அமைகின்றது. இந்த நட்பு சூழ உள்ளவர்களால் வேறு நோக்கில் 'அர்த்தம்' செய்து கொள்ளவும்படுகிறது. எனினும் நாவலின் இறுதிவரை இருவரது தொடர்பும் தூயநட்பாகவே சித்திரிக்கப்பட்டுள்ளமை கவனத்திற்குரியது.

PDF Reducer

பூரணி — இந்திரன் நட்புக்கும் பூரணி கணவனைப் பிரிந்துவாழ மேற்கொண்ட முடிவுக்கும் காரணகாரியத் தொடர்பு காட்ட முடியாத வகையிலே நாவலை ஆசிரியர் நிறைவு செய்துள்ளார். அதாவது அன்பில்லாத கணவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் பூரணியின் முனைப்பு ஒரு சுதந்திர வேட்கை

மட்டுமே என்பதை அவளது தனித்து வாழும் முடிவு புலப்படுத்துகிறது. அவளுக்குப் புதுவாழ்வு கொடுக்கும் அளவுக்கு விசாலமான தனது உளப்பாங்கினை இந்திரன் புலப்படுத்திய வேளையில் (அந்த அன்புக்கு அவள் ஏங்கியவளானாலும்) அவ்வாழ்வை ஏற்க அவள் தயாராக இல்லை என்றதன் மூலம் ஆசிரியர் அவளது சுதந்திர வேட்கைக்கு ஒழுக்கநிலை சார்ந்த அவப்பெயர் ஏற்படாமல் காப்பாற்றியுள்ளார் என்றே கொள்ளவேண்டியுளது: பூரணியின் தனித்து வாழும் முடிவு அவளே சிந்தித்துக் கொள்வதுபோல நடுநிலையான விமர்சகர்களின் பாராட்டுக்குரியதுதான்.

தமிழர் சமூகம் வாழும் பல்வேறு பிரதேசங்கட்கும் பொருந்தக்கூடிய மேற்படி நாவலின் 'கதையம்சம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒரு கிராமத்புறக் களத்திற் சித்திரிக்கப்பட்டுள்ளது. சமகால அரசியல் சமூகச் சூழ்நிலைகள் கதை நிகழ்ச்சிகளுக்கான பகைப்புலங்களாக அமைகின்றன. ஆயுதப் படைகளின் அட்டகாசம், தீவிரவாதிகளாக மாறிக் கொண்டிருக்கும் இளைஞர்களின் செயற்பாடுகள் தொடர்பான செய்திகள் என்பன இந்நாவலின் கதையம்சத்தின் சமகாலத் தன்மையைக் காட்டும் வகையில் இடம்பெற்றுள்ளன: இன்றைய விடுதலைப் போராட்டச் சூழலும் நீறுபூத்த நெருப்பாக உள்ள சாதி ஏற்றத் தாழ்வுணர்வின் சாயலும் இந்நாவலிலே புலப்படுகின்றது: அன்பில்லாத கணவனின் அடக்குமுறையிலிருந்து விடுபடத் துடிக்கும் பெண்மையுணர்வுகள் இன்று தனிக்கவனத்தினைப் பெற்றுவரும் ' பெண்நிலைவாத ' உணர்வுப் பகைப்புலத்தையும் நினைவுக்கு இட்டுவருகின்றன: இன்னும் ஆழ்ந்து சிந்தித்தால் ' விடுதலை பெற்றுத் தனித்து வாழும் ' நோக்கிலான இன்றைய அரசியற் சூழலின் உருவகமாக இந்நாவலை நோக்கவும் இடமுண்டு.

educer Demo

சம்பவங்கள், அவற்றின் விளைவான உணர்ச்சி முனைப்புக்கள் என்பவற்றைவிட அவற்றுக்கான உளவியல் அடிப்படைகளை நுணுகி நோக்கும் பண்பு கோகிலாவின் சிறுகதைகள் பலவற்றிற் காணப்பட்ட சிறப்பியல்பாகும். அவ்வியல்பு இந்த நாவலிலே மிகுந்து காணப்படுகின்றது. கதைத் தலைவியான பூரணியின் உணர்வோட்டங்களிலும் அவள் பிற பாத்திரங்களுடன் நிகழ்த்தும் உரையாடல்களிலுமே நாவலின் பெரும்பகுதிக் கதைப்போக்கு அமைகின்றது. சிந்தனைக்கு விருந்தாக நிறையப் 'பொன்மொழிகள்' இடம்பெறுகின்றன. கதையம்சத்தை விளக்கம் செய்யும் வகையிலேயே அவை அமைவதால் கதையோட்டம் அவற்றால் தடைப்படவில்லை.

ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றிலே பொருத்தி நோக்கும்போது இந்நாவல் ஒரு புதுவகை முயற்சி என்றே கொள்ளவேண்டியுள்ளது. நாவலின் பிரதான கதையம்சமும் கதைகூறும் முறையும் முன்னைய நாவல்கள் பலவற்றினின்றும் வேறுபட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. கோகிலா அவர்கள் தொடர்ந்து முயன்றால் ஈழத்துத் தமிழ் நாவலிலக்கியத் துறைக்குப் புதிய பரிமாணங்களை அவரால் தரமுடியும் என்ற நம்பிக்கையை இந்நாவல் தருகிறது.

PDF Reducer

# துயிலும் ஒரு நாள் கலையும்

## 1

எங்கள் இதயக் குளத்தில்
பூத்திருப்பது,
தாமரை மலர்களல்ல.
துன்பக் கதிரவனின்
வருடலில்
பூத்திருக்கும் சோக மலர்கள்!

—முல்லை அமுதன்

"நான் பக்கத்திலை வந்திருந்தது உனக்கு இவ்வளவு நேரமாத் தெரியேல்லை; என்ன?" — கேதிஸ்வரன் ரீச்சர்.

"பக்கத்திலை இருக்கிறவையைத் தெரிஞ்சு கொள்ளாமல் இருக்கிற அளவுக்கு எனக்கு ஏதும் பெரிய உத்தியோகம் அல்லது பெரிய அந்தஸ்து வந்ததாத் தெரியேல்லை......"

educer Demo

"நீ எதைக் கேட்டாலும் பெரிய தத்துவம் கதைப்பாய்; ஆனா அதுக்குள்ளையும் உனக்குப் பெரிய உத்தியோகம் வரேல்லை; பெரிய அந்தஸ்து வரேல்லை எண்ட கவலை பளிச்சிடுது......"

"சரிதான்...... நீ கிட்டடியிலைதான் 'ரெயினிங் கொலீச்'சிலை 'சைக்கோலஜி' படிச்சனி எண்டு எனக்குத் தெரியும். என்ரை மறுமொழிக்குள்ளை என்ன பளிச்சிடுது எண்டு இப்ப நான் உன்னட்டைக் கேட்கேல்லை. நீ என்ன கேட்டு நான் மறுமொழி சொல்லாமல் இருந்தனான் எண்டு சொல்லு......"

"நான் ஒண்டும் கேட்கேல்லை. ஆனால் உனக்குப் பக்கத்திலை வந்திருந்து பத்து நிமிசமாகுது. நீ பேப்பரிலை என்னத்தையோ பாத்து அதுக்குள்ளை முழுகிப் போய் இருக்கிறாய்......"

பூரணி, தான் முழுகிப் போயிருந்த பகுதியைக் கேதீஸ்வரன் ரீச்சருக்குக் காட்டினாள்.

"பெண்கள் தம் கணவரின் மனதைக் கவருவது எப்படி?"

"மெய்யேடி...... ஆண்கள் தம் மனைவியின் மனதைக் கவர்வது எப்படி எண்டு எனக்கு ஒரு நாளும் ஒரு பத்திரிகையிலும் பாத்த ஞாபகம் இல்லையே..."

"அதுதானே நானும் சொல்லுறன். சம உரிமை, சம உரிமை எண்டு சொல்லுறம். ஆனால் இன்னும் இந்த உலகம் பொம்பிளையள் தான் தங்கடை கணவன் மாரின்ரை மனதைக் கவரவேணும் எண்டு எதிர்பாக்குது; ஆம்பிளையள் தங்கடை மனிசிமாரைக் கவர வேண்டிய தேவை இல்லை எண்ட மாதிரி......"

பூரணியின் ஆத்திரம் வசனங்களில் கனலாய்த் தெறித்தது.

PDF Reducer

"சரி... சரி... இஞ்சை கொண்டா...... உதிலை என்ன எழுதியிருக்கெண்டு பாப்பம்......"

என்று கூறிக் கேதீஸ்வரன் ரீச்சர் அந்தப் பேப்பரைப் பறித்துப் பார்த்தாள்.

"எந்த வயதிலும் மனைவி பொலிவோடு இருப்பதையே கணவன் விரும்புகிறான். எனவே கணவனின் கண்களில் படும்போது சுத்தமாக உடுத்தி அழகோடு இருங்கள்......"

அதை வாசித்துக் கொண்டே,

"முதல் 'பொயிண்டி'லையே நீ 'அவுற்' பூரணி. பொலிவோடை இருக்க வேணுமாம். நீ எங்கை...... காய்ஞ்சு... கறுத்துக் கருவாடு மாதிரி... அதுதானே நாங்கள் முந்திப் படிக்கிற காலத்திலை உனக்கு ஊசி எண்டு பட்டம் வைச்சனுங்கள்......"

educer Demo

பூரணியின் மூக்கின் இதழ்கள் விரிந்ததைக் கவனித்த கேதீஸ்வரன் ரீச்சர், தனது சொற்கள் அவளைப் புண்படுத்தித் தாக்கிவிட்டனவோ என்று அஞ்சித் தன் வார்த்தைகளைப் பாதியில் நிறுத்தி அவளை ஏறிட்டுப் பார்த்தாள்.

"மனதிலை வேதனை இருக்கிறதாலை உடம்பு மெலியுது. உடம்பு மெலியிறதாலை பல வகையிலும் வேதனையள், கஷ்டங்கள் கூடுது. இது ஒரு 'விசியஸ் சேர்க்கிள். எண்ட்லெஸ் சேர்க்கிள்'........"

"சரி, சரி இந்த 'எண்ட்லெஸ் சேர்க்கிளைப்' பற்றிப் பிறகேன் நெடுகக் கதைச்சுக் கொண்டிருப்பான்... வாவன் போவம்... அங்கை ரீ எல்லாம் றெடி எல்லாரும் போயிட்டினம்........"

இருவரும் மௌனமாக எழுந்து பிரியாவிடை நடைபெறும் இடத்தைநோக்கிச் சென்றனர். போகும் போது,

"நீங்களே அவனின் காதலி. கணவன் விரும்பி அழைத்தால் கைகோர்த்துச் செல்லவும் பின்வாங்காதீர்கள்......"

என்ற இரண்டாவது "பொயின்ற்" இல் பூரணியின் மனம் ஓடிக்கொண்டிருந்தது.

"அந்தக் காலத்திலே பாரதியார் கூட, ரோட்டிலே எல்லாரும் பாக்கத் தக்கதாய் மனிசியின்ரை கையைப் பிடிச்சுக் கொண்டு உலாவித் திரிவராம். இது... ஒரு கோயிலுக்குப் போவம் எண்டு நான் கேட்டால் கூட வள்ளெண்டு அல்சேஷன் மாதிரிப் பாயிற வரோடை... சில வேளேலே அவற்றை பேச்சுக்குக் குறுக்கை நாய் கூடப் போகாது. அப்பிடி வசனங்கள்......"

எண்ணப் பற்றைக்குள் மேய்ந்து கொண்டு சென்றவளை,

"பூரணி ரீச்சர் இண்டைக்குப் பேசேல்லையோ?" என்ற குரல், உயிரைக் கௌவும் குழைவுடன் மீட்டெடுத்தது.

"இதைப்போலை ஒரு குழைவு என்ரை மனுசன்ரை குரலிலை இருந்தால்......"

என்று நினைத்துக் கொண்டே, இரண்டுக்குமாய்ச் சேர்த்து,

"இல்லை" என்றாள் பூரணி.

"அப்ப...., இண்டைக்கு நாங்கள் ஒரு நல்ல பேச்சை 'மிஸ்' பண்ணப் போறம்........."

PDF Reducer

அவளுடைய பேச்சு நல்ல பேச்சென்று இந்திரன் மாஸ்டருக்கு யார் சொன்னது?

"பேசாமல் இருக்கிறவன் தான் மிகப் பெரிய பேச்சாளன் எண்டு நான் நினைக்கிறன்"

"பூரணி ரீச்சரிட்டைத் தத்துவங்களுக்கு மட்டும் குறைவில்லை......"

"............? ...... ......"

ஏனைய சில ஆசிரியைகளைப் போல், கேதீஸ்வரன் ரீச்சர், தர்மராஜா ரீச்சர் என்று ஆண்களின் பெயருக்குள் அவளை மறைத்து விடாமல்... பூரணி ரீச்சர் என்று பூரணமாக எல்லாரும் அழைப்பதில் ஒரு திருப்தி கொண்டு, அதற்கு மேல் கதையை வளர்த்துக் கொள்ளாமல் ஒரு மெல்லிய புன் சிரிப்புடன் சென்றவள் கேதீஸ்வரன் ரீச்சருக்கும் கமலா ரீச்சருக்கும் இடையில் அமர்ந்து கொண்டாள்.

educer Demo

"உணவு ஊட்டுவதில் தாயைப் போலவும், ஆலோசனை கூறுவதில் அமைச்சரைப் போலவும், இன்பம் தருவதில் தாசியைப் போலவும் இருங்கள்"

"என்ன இது?"

ஓ...! பேப்பரிலை வாசிச்ச மூண்டாவது 'பொயின்ற்'!

சீ... இந்த நினைவை மறக்கவே முடியாதோ? கல்லூரியிலையே மறக்கிறது இவ்வளவு கஷ்டமாயிருந்தா... வீட்டிலை...?"

சுவர்க் கடிகாரத்தின் ஊசலைப் போல அசைந்து கொண்டிருந்த மனதைப் பிடித்து நிறுத்திப் பிரியாவிடைப் பேச்சுக்களில் மனதைப் பதிக்க முயன்றாள் பூரணி.

"இன்டைக்கு இவர் 'செஞ்சறி' அடிக்கப் போறார். என்ன?"

"உனக்கு எங்கை போனாலும் 'கிறிக்கற்' எண்ணந்தான்"

"இல்லை மச்சான். நூறு நிமிஷம் பேசுறவையை வேறை எப்பிடி 'டிஸ்கிரைப்' பண்ணிறது சொல்லு பாப்பம்......"

"அது சரி, உந்தாள் பேசிற பேச்சிலை உனக்கு ஏதாலும் விளங்குதோ? எனக்கெண்டால் ஒண்டும் விளங்கேல்லை......"

"நீ சத்தம் போடாமல் இருந்தால் எல்லோ விளங்கும்...."

நடந்து கொண்டிருந்த சின்னையா மாஸ்டரின் பேச்சை உற்றுக் கேட்க முயற்சி செய்து கொண்டிருந்த பூரணிக்குச் சந்திரன் மாஸ்டரும், தாசன் மாஸ்டரும் கதைத்துக் கொண்டது கொஞ்சம் இடைஞ்சலாக இருந்தாலும், அவள் அவர்களது உரையாடலின் நகைச்சுவையான பகுதிகளை இரசிக்கவும் தவறவில்லை. இந்த இரசிப்பு ஒன்றுதானே இப்போது அவளிடம் எஞ்சியிருப்பது?

வீட்டை மறந்து, கணவரை மறந்து, தம்பியை மறந்து எல்லாவற்றையுமே மறந்து இருந்துவிடக் கூடிய ஒரு ஆனந்தம் இந்த ஆசிரியத் தொழிலில் இருப்பது தான். அதுதான் அவள் இன்னும் உயிருருடன் வாழ்ந்து கொண்டிருப்பதற்கான காரணம்!

"நான் இஞ்சை அடிக்கடி பகிடி விடுறதுக்கும் தத்துவம் பேசிறதுக்கும்... ஏன் மற்றவை விடுற பகிடியளுக்கு மலர்ந்து சிரிக்கிறதுக்கும் கூட... வீட்டிலை சிரிக்க முடியாமல் இருக்கிறதுதான் காரணம் எண்டிறது எத்தினை பேருக்கு விளங்கியிருக்கும்?"

PDF Reducer

தன்னுள்ளே நினைத்துப் பார்த்தாள் அவள்:

" இனி வேறை ஆற்றை பேச்சுக்கள் இருக்கு? " சந்திரன் மாஸ்டர் கேட்டார்.

" லிங்கம் மாஸ்டர் தானே எப்பவும் கடைசிப் பேச்சு— என்ன லிங்கம் நீயும் பேசப் போறியோ? "

" ஓமோம். நான் தானே திறம் மேளம். எப்பவும் கடைசி மேளம் " லிங்கம் மாஸ்டர் எழுந்தார்.

கசமுச வென்று மெலிதாகக் கேட்டுக் கொண்டிருந்த ஆசிரியர்களின் குரல்கள் இப்போது மெலிந்து விட எல்லோருடைய கண்களும் அவரை மேய்ந்தன.

educer Demo

" நான் வணக்கம் சொல்ல மாட்டன். தலைவருக்கு, அதிபருக்கு, இன்றைய விழாவின் நாயகருக்கு, '[illegible]றிக்'கு, உங்களுக்கு... எல்லாம் வணக்கம் சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் போயிடும். நான் இண்டைக்குப் பேசிறதுக்கு ஒரு 'பொயின்ற்' சொல்லித்தா எண்டு இவன் தாசனைக் கேட்டன். அவன், நீ ஒண்டும் பேசாமல் இரு. அதுதான் திறம் 'பொயின்ற்' எண்டு சொல்லிப் போட்டான்... .."

" தனக்கு எவ்வளவு பிடித்த விடயமாயினும் கணவனுக்கு அது பிடிக்காதவிடத்து விட்டுக்கொடுத்துத் தனக்குப் பிடிக்காததாயினும் கணவன் விரும்புவதை விரும்ப வேண்டும்...... "

என்ற அடுத்த அறிவுரையை நினைத்து,

" இது ஆரோ பெண்ணடிமைத்தனம் இன்னும் இருக்கவேணும் எண்டு விரும்பிற ஆம்பிளை சொன்ன அறிவுரைதான் நிச்சயமாய்... இதே அறிவுரையை ஏன் அவை ஆம்பிளையளுக்குச் சொல்லாயினமாம்? "

என்று சிந்திக்கத் தொடங்கியிருந்த பூரணியை லிங்கம் மாஸ்டரின் நகைச்சுவையான பேச்சுத் திசை திருப்பி விட்டது. சபையில் கேட்ட பலமான சிரிப் பொலியுடன் தானும் நிறைந்து வாய்விட்டுச் சிரித் தாள் அவள்.

"என்னை நானே இந்த 'கில்ட் செகிறிற்றரி' யாத் தெரிவு செய்யேக்கை பேசாமல் இருந்தவங்கள் எல்லாம், இப்ப நான் பேசப்போறன் எண்டு எழும்பப் பிடிச்சு இழுத்து இருத்திறுங்கள்......"

லிங்கம் மாஸ்டர் தொடர, மேலும் சிரிப்பலைகள்!

"கம் ரு த பொயின்ற் மிஸ்டர் லிங்கம்......" ஆங்கில ஆசிரியை திருமதி தர்மராஜா ஒரு மூலையில் இருந்து குரல் கொடுத்தார்.

"இனி என்ன 'பொயின்ற்'? இதுதான் என்ரை 'போயின்ற்'?"

"இண்டைக்கு 'ஃபெயர் வெல்' நடக்கிறது, மிஸ் டர் காங்கேயனைப்பற்றிச் சொல்லுங்கோ......"

"அவரைப் பற்றி எனக்கு ஏதும் தெரிஞ்சால் எல்லோ சொல்ல"

"தென் சிற் டவுண்......"

என்ற பூரணியின் குரலைத் தொடர்ந்து,

"சிற் டவுண், சிற் டவுண்" என்று பல குரல் கள்!

"என்னைத் தொடர்ந்து பேச அனுமதியாது விட் டமைக்கு நன்றி. 'போட்டோ' எடுத்தாச்சு. நான் அதுவரைக்குந்தான் எழும்பி நிண்டனான். இனிமேல் இருந்தாலும் பரவாயில்லை. மற்றது நான் இந்த வரு சத்தைக் கற்பித்தல் ஆண்டாப் பிரகடனம் செய்தி ருக்கிறன். இந்த வருஷம் பள்ளிக் கூடத்திலை வேறை வேலை எல்லாத்தையும் விட்டிட்டுப் படிப்பிக்கப் போறன். ஆனபடியால் இனிமேல்... பிரியாவிடைக் கூட்டங்களிலை பேச மாட்டன்......"

PDF Reducer

என்று சொல்லிக் கொண்டு லிங்கம் மாஸ்டர் அமரத் தனது சிந்தனைகளிலிருந்து முற்றாகவே விடுபட்டுத் தன்னை மறந்து சிரித்தாள் பூரணி.

“இண்டைக்குப் பூரணி ரீச்சர் பேச்சு இல்லையோ?” பக்கத்தில் இருந்த கமலா ரீச்சர் கேட்டாள்.

“இல்லை”

“என்ன? கேள்விக்கு மட்டும் பதில் எண்ட மாதிரி, 'சோட் அண்ட் சுவீற்'றாக் கதைக்கிறியள்?”

“பேச்சுப் பேசிறதெண்டால் ஆயத்தம் ஒண்டும் இல்லாமல் கண்டபடி பேசப்பிடாது. அது பிறகு பேச்சின்ரை தரத்தையே குறைச்சுப் போடும்; ஆயத்தப் படுத்திறதுக்கு, வீட்டிலை அமைதியான சூழ்நிலை இருக்க வேணும். அமைதியான மனநிலை இருக்க வேணும். ஒண்டும் இல்லாமல் இருக்கேக்கை எனக்குப் பேச விருப்பமில்லை......”

educer Demo

அவள் உதடுகள் மெதுவாக முணுமுணுத்தன. கமலா ரீச்சர் ஓரளவு புரிந்து கொண்டிருக்க வேண்டும். மேலும் தொடர்ந்து கேள்விகள் கேட்டுக் கொண்டிருப்பதைத் தவிர்த்து அவள் மௌனித்தாள்.

“இதே கேள்வியை இந்திரன் மாஸ்டர் கேக்கேக்கை ஏன் தத்துவம் கூறிச் சமாளிச்சனான்?”

“அவர் அவ்வளவு பேருக்கும் முன்னாலை கேக்கேக்கை எப்படி என்ரை நிலையை விளங்கப்படுத்திக் கொண்டு நிக்கிறது? அவைக்கெல்லாம் என்ரை பிரச்சினையள் தெரியுமோ தெரியாதோ?”

பங்குனி மாதத்து வியர்வை விழிகளுக்குள் கரித்தது. கைக்குட்டையை எடுத்துக் கண்களை அழுத்தித் துடைத்துக் கொண்டாள் பூரணி.

“உண்ணல், உயிர்த்தல், உடலியற் புணர்ச்சி, உறங்கல், உலைதல், இறந்துபடுதல்...... இதைவிட வேறை ஒண்டும் வாழ்க்கையிலை இல்லையா?”

"இதென்ன கவிதை? யாருடைய கவிதை?"

எங்கே படித்தோம் என்று சட்டென்று நினைவுக்கு வரவில்லை அவளுக்கு. ஆனல் வாழ்விலே தனது நிலையை, அல்லது தன்னைப்போல் இன்னும் பல பெண்களின் நிலையை இந்த வரிகள் மிக நன்ருகவே உணர்த்துவது போல ஒரு நினைவு!

கரிய நேர் கோடுகளாக வானத்தை நோக்கி வளர்ந்துவிட்ட பனைமரங்கள் யன்னலூடாகத் தெரிந்தன. கரிய நேர் கோடுகளாகவே அவள் மனதில் வளரும் துன்பங்களும், துயரங்களும்...... பனைமரங்களை யாரோ தறித்து விழுத்திக் கொண்டிருந்தார்கள். தனது மனத்துப் பனைகளைத் தறிக்க வழியுண்டா என அவள் மீண்டும் சிந்திக்க முனைந்தாள். சட்டென்று அந்த நினைவை மாற்றிக் கொண்டாள். எதுவுமே சாத்தியமானவை அல்ல என்று அவளுக்குத் தோன்றி விட்டது.

PDF Reducer

பிரியாவிடை வைபவம் முடிந்தபோது நேரம் ஐந்து மணி இருக்கலாம். ஆனல் திடீரென்று உண்டான மூட்டம் நேரம் இருண்டு போய் விட்டது போன்றதொரு மாயையை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

சூரியனும் கூடச் செத்துப் போய்விட்டானு? அவள் 'ஸ்ராவ் றூமுக்கு' வந்தாள். சில ஆசிரியைகள் அங்கே நின்று ஏதோ தர்க்கப்பட்டுக் கொண்டு நின்ருர்கள். அவளும் நின்ருள். வீட்டிற்கு அவசரமாகப் போவதில் அவளுக்கு எப்போதுமே அக்கறை இல்லை.

"இண்டைக்கு வீட்டிலே என்ன பிரளயமோ?" என்ற பயம் கலந்த நினைவே அவளை வீட்டிற்குப் போவதில் அக்கறையின்றி நிற்க வைத்துக் கொண்டிருந்தது.

# 2

மனித உறவுகள்
உலகெலாம் தேடினேன்
இதுவரை
ஒன்றேனும் காணவில்லை
மனிதர்களெனும் பெயரில்
நடமாடும் மிருகங்களை
நாள்தோறும் காண்கிறேன்
தூய உறவுகள்
மனிதர்களிடம் தேடினேன்
மனித மிருகங்களிடம்
தூய உறவை மட்டும்
எப்படிக் காண்பது?

—மசூறு. ஏ. மஜீட்

educer Demo

"விஞ்ஞான மன்றத்துக்கு ஆர் தலைவர்?"

"ஏன் இவன் குமரேசன்தான் தலைவர்?"

"அப்ப ஏன் இந்த விஞ்ஞான மன்றப் பட்டி மன்றத்திற்கு நீ தலைமை தாங்க வெளிக்கிட்டனி?"

"......எண்டு ஆர் கேட்டது?"

"நான் தான் கேக்கிறன். நீ சொல்லன்..."

"..................."

"என்ன? மறுமொழி சொல்லுறாய் இல்லை..."

லிங்கம் மாஸ்டரும், இந்திரன் மாஸ்டரும் பிரச்சினைப் பட்டுக்கொண்டிருந்தார்கள். அதற்குள் புகுந்த பத்மநாதன் மாஸ்டர்,

"இஞ்சை, லிங்கம் நீ இதுக்குள்ளை விஷயம் தெரியாமல் கதையாதை. அவன் குமரேசன் நான் நிக்கேக்கதான் இவரோடை வந்து கதைச்சவன்... தான் சபையிலை பேசமாட்டன் எண்டதைத்தானே ஒப்புக்கொண்டிட்டான். பிறகு... இப்ப ஆரோ தூண்டி விட்டிருக்கிறுங்கள்"

"மன்றத்துக்குத் தலைவர் எண்டு ஒருத்தர் இருக்கேக்கை, பிறகு வாத்திமார் எல்லாம் தலைவரா இருக்க PDF Reducer விரும்பினம் எண்டெல்லே...... அவங்கள் கதைக்கிறுங்கள்......"

"அவங்கள் பட்டி மன்றத்தைக் குழப்ப நினைக்கிறுங்கள். விட்டுத்தள்ளு......! இந்தக் காலத்திலை பள்ளிக்கூடம் வந்தாப் படிப்பிச்சுப்போட்டுப் போயிட வேணும். வேறை அதுகள் இதுகளிலை தலையிடப்பிடாது. விசர்வேலை... எனக்கேன் தலைமைப் பதவி...? எனக்குப் பேசிறதுக்கு எத்தினையோ மேடையள் கிடக்கு...... ஆரும் ஏதும் செய்யட்டும்... நான் வீட்டை போறன்......"

இந்திரன் மாஸ்டர் விரக்தியுடன் கூறிவிட்டு எழுந்து வெளியே வந்து சைக்கிளை எடுத்தார்.

"உண்மைதானே! அவன் முற்போக்கு எழுத்தாளர் சங்க மேடையளிலை வேண்டிய அளவு பேசலாம்; இதுக்கு என்ன ஆசை?"

பத்மநாதன் மாஸ்டரும் புறப்பட்டு விட்டார். கூட்டம் கலையத் தொடங்கியவுடன்தான் பூரணியும் தன் நினைவுக்கு வந்தாள். அவளும் இனி வீட்டிற்குப் போக வேண்டும். அந்த நினைவே மனதுள் கசந்து வாய் வரையும் தொடர்ந்தது. எட்டி எச்சிலைத் துப்பி விட்டுச் சுற்றிலும் பார்த்தாள். வழக்கமாக அவளுடன் வீட்டிற்குப் போகிற எல்லா ஆசிரியைகளுமே பிரியாவிடை முடிந்தவுடன் போய் விட்டார்கள் என்ற உண்மை உறைத்தது.

"என்னை ஒருத்தியும் வாறியோ எண்டுகூடக் கேட்கேல்லை"

"ஏன் கேட்க வேணும்? அவள் ஒரு விசர். வீட்டை போக விருப்பமில்லாத விசர் எண்டு நினைச்சுக் கொண்டு போயிருப்பினம்......"

educer Demo

"எண்டாலும் பள்ளிக்கூடத்து உறவுகள் எல்லாம் போலி உறவுகள்...... ஒருத்தருக்கும் மனம் நிறைஞ்ச விசுவாசமான மன நட்பு இல்லை"

"ஏன் பள்ளிக்கூட உறவுகளைப்பற்றி நினைப்பான்? வீட்டு உறவுகள் எண்டாப்போலை திறமே?"

ஒரு மனம் கேள்வி கேட்க, இன்னொரு மனம் சாதகமான பதிலையும் பாதகமான பதிலையும் சொல்லத் தெருவுக்கு வந்தாள் பூரணி;

"ரீச்சர்...... யாழ்ப்பாணத்திலை ஏதோ பிரச்சனையாம். சந்தி வெளிய எல்லாம் சுட்டுத் தள்ளிறுங்கள் றோட்டாலை போகாமல் ஒழுங்கையாலை இறங்கி நடவுங்கோ......"

சந்திவரை சென்று திரும்பி வந்த இந்திரன் மாஸ்டர் அவளுக்கு அருகில் சைக்கிளை நிறுத்தி இதனைக் கூறினார்:

"நான் தனிய ருேட்டாலே போகப் போறன் எண்டு நினைச்சு இவர் திரும்பி வந்திருக்கிருர். என்ரை மனுசன் இந்த 'நியூ'சைக் கேள்விப்பட்டு என்னைக் கூட்டிக்கொண்டு போக ஸ்கூட்டர் கொண்டு வருவரோ?"

அவர் வரமாட்டார் என்று தெரிந்தும், பாழாய்ப் போன மனம் வரவேண்டும் என எதிர்பார்த்தது.

' சரி, சரி எங்கடை ஊரிலே என்ன பயம்?" நான் இந்த ஒழுங்கையாலே போறன். நீங்க போயிட்டு வாங்கோ... 'நியூஸ்' வந்து சொன்னதுக்குத் 'தாங்க்ஸ்'......"

என்று சிரித்தபடி இந்திரன் மாஸ்டரைப் பார்த்துக் கூறிவிட்டு இடதுகைப் பக்க ஒழுங்கையில் இறங்கி வேகமாய் நடந்தாள் பூரணி.

PDF Reducer

வீட்டில்தான் அமைதியாக இருக்க முடியவில்லை என்ருல், வீதியிலும் கூட அமைதியாக நடக்க முடியாத காலமாகப் போய்விட்டதே!

பாதையோரத்தில் அந்த ஒற்றையடிப் பாதை நெடுகிலும், பரட்டைத் தலைபோல முட்களை நீட்டி நிற்கும் காரை, முள்ளி, கள்ளி, நாகதாளி எல்லாம் அவளைக் குத்துகின்றேன் என்று பயமுறுத்தின.

பதுங்கிக் கிடந்த ஒரு சோகத்தின் உள்ளே நடமாடும் சோகம் ஒன்று புகுந்ததுபோல அவள் வீட்டினுள் நுழைந்தாள்; மனிதர்கள் ஒருவரும் அவளை வரவேற்கவில்லை.

இரண்டு கிழமைக்கு முன்பு அந்த வீட்டுக்கு வந்திருந்த அந்தச் சிறிய நாய்க்குட்டி 'வீமன்' மட்டும் தன் சிறிய வாலை ஆட்டி அவளை வரவேற்றது.

"உனக்கு நன்றி இருக்குது எண்ட அளவிலை நீ மனிசரை விட மேலான பிறவி"

என்று அவள் நினைத்தாள். ஆனாலும் அது நோய் வாய்ப் பட்டிருந்தபடியால், எழுந்து அவளைத் தொடர்ந்து பாய்ந்து பாய்ந்து ஓடிவர முடியாமல், வாலை மட்டும் ஆட்டிவிட்டு மீண்டும் பதுங்கிக் கொண்டது. அவள் உள்ளே சென்று அதற்குச் சிறிதளவு 'நெஸ்டோமோல்ட்' கரைத்துக்கொண்டு வந்து வைத்தாள்.

"அவர் இப்ப நிண்டால், இந்தப் பால்மா வைக்க முடியாது" என்று நினைக்க அவளுக்குச் சிரிப்பு வந்தது.

"பால்மா வைச்சால் வலி வரும்...... வெறுந் தேத்தண்ணி வை" என்பது அவர் போட்டுவிட்ட சட்டம்!

educer Demo

அவளுக்குத் தெரியும் - நாயின் வருத்தத்திற்கும் பால்மாவிற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்று. ஆனால் யாரிடம் சொல்வது?

நாய்க்குட்டி பால் குடித்துக் கொண்டிருக்கும் போது, வாசலில் 'ஸ்கூட்டர்' வந்து நிற்கும் சத்தம் கேட்டது. கணவர்தான் வருகிறார் என்பதைப் புரிந்து கொண்டு நாய்க்குட்டி குடித்துக்கொண்டிருந்த பாலைத் தட்டி ஊற்றிவிட நினைத்தாள் இவள். மறுகணமே,

"நான் செய்யிறது சரியாக இருக்கேக்கை, அதை ஏன் பயந்து ஊத்த வேணும்?" என்ற நினைவில் பேசாமல் இருந்தாள்.

பாலசிங்கம் வேகமாக இறங்கி வரும்போதே, நாய்க்குட்டி பாலைக் குடித்ததைக் கண்டு நாய் போலவே பாய்ந்தார்.

" உனக்கு எப்பவும் இந்தக் கொழுப்பு இருக்குது. நான் சொல்றபடி செய்யக்கூடாது எண்ட கொழுப்பு! வலிப்பு வாற நாய்க்குட்டிக்கு இப்ப ஏன் பால் கரைச்சு வைச்சிருக்கிறுய்..... ம்... ... "

" ஐம்பதாயிரம் ரூபா டொனேசன் குடுத்து இஞ்சை ஒரு பெரிய அல்சேஷன் அவிட்டு வைச்சிருக்கினம் என்ரை அப்பாவும் அம்மாவும்! பிறகேன் நாய்க்குட்டி அது செத்தால் சாகட்டன் '' என்று இவள் மனதிற்குள்ளாகவே நினைத்தாள்.

'' அதுக்கு வலி இல்லை .. வயிற்றிலை பூச்சி. அங்கை வயிற்ருலை வெள்ளைக் கொடி கொடியாய்ப் புழு விழுகுது! அதுக்குப் பூச்சி மருந்து வாங்கிக் குடுக்க வேணும்...'' என்று வெளியில் சொல்லிக்கொண்டாள்.

" எப்ப நீ மாட்டு டாக்குத்தருக்குப் படிச்சனி? ஒரு பி. எஸ். சி. பட்டத்தோடை இவ்வளவு திமிர் எண்டால்...... பிறகு உதுகளும் படிச்சிருந்தால் நான் இஞ்சை இருக்கேலாது.... "

PDF Reducer

" நான் ஏதோ மூண்டு வருசம் பி. எஸ். ஸிக்குப் படிச்சன். நான் சொல்றது ஒவ்வொண்டும் பிழை எண்டு அடிக்கடி சொல்றதாலை நீங்கள் என்னை விட அதிகம் படிச்சதாக் கற்பனை பண்ணி மகிழ்ந்து கொள்ளிறியள். இது ஒருவகை ' இன்ஃபீரியோரிற்றிக் கொம்பிளெக்ஸ் ' ...... '' என்று கூற அவள் மீண்டும் நினைத்தாள்.

" இதெல்லாம் சொல்லி இவருக்கு ஒண்டும் புரியப் போறதில்லை. எத்தினை நாள் இந்த விளக்கமெல்லாம் சொல்லியாச்சு. இனிமேலும் அலம்பிப் பிரயோசனமில்லை " என்று நினைத்து அதையும் கூருமல் விட்டு விட்டு,

" இண்டைக்கு யாழ்ப்பாணத்திலே ஏதோ பிரச்சினையாம். நான், நீங்கள் என்னை ஏத்திறதுக்கு ஸ்கூட்டர் கொண்டு பள்ளிக்கூடம் வருவியள் எண்டு நினைச்சன் " என்ருள்.

" உனக்கு வீட்டிலை இருக்க விருப்பமில்லை. இஞ்சை வந்த உடனை மூஞ்சை நீண்டு போகுது. அங்கை நிண்டால் அவங்களோடை சந்தோஷமாய்க் கதைப்பாய் எண்டுதான் நான் வரேல்லை...... "

மிகச் சாதாரணமாய் அதைச் சொல்லிவிட்டு அவர் போய்க் கதிரையில் காலுக்கு மேல் கால் போட்டுக் கொண்டு 'பேப்பர்' படிக்கத் தொடங்கிஞர். குத்தலான அந்தக் கதைக்குப் பதில் சொல்லக் கூடாது என்று அவள் நினைத்த போதும்,

" அவங்கள் எண்டால் எவங்கள்? " என்று அடக்க மாட்டாமல் கேட்டு விட்டாள்.

educer Demo

" அவங்கள் தான் ஆங்கத்தை வாத்திமார்...... '

இவரால் எப்படி நாக்கூசாமல் இப்படிக் கூற முடிகிறது? வியாபார விஷயங்களில் நாள் தோறும் பொய் சொல்லிச் சொல்லி... பொய்யே செயலாய் பொய்யே வாழ்க்கையாய், பொய்யே சகலதுமாய்ப் போய்விட்டதோ?

" கலியாணம் செய்ததே பிழை! அதுக்குள்ளையும் ஒரு 'பிசினஸ் மான்' ஐக் கலியாணம் செய்தது ஆகப் பெரும்பிழை! "

என்ற நினைவில் அவளுக்கு அழுகை வந்தது.

தனது கல்வி நிலை அவளுடையதுக்குச் சமமில்லை என்ற தாழ்வுச் சிக்கலால் அவரது மனம் தாஞகவே அவளை அவளுக்குச் சமமான கல்வி அறிவுள்ளவர்களுடன் இணைத்துப் பார்த்து......

பின்னர் அந்த நினைவையே சொல்லாக்கி...... இன்னும் சிறிது காலத்தில் இந்த நினைவும் சொல்லுமே பெரிய சந்தேகப் பேயாகி......

இதைத் தவிர்க்கவே முடியாது?

முன்வீட்டு நாய் 'லக்கி' துள்ளிக் கொண்டு ஓடி வந்து அவளது காலடியில் படுத்து வாலையாட்டியது.

''கந்தன் இரண்டு நாய்க்குட்டி கொணந்து எங்கடை வீட்டிலை விட்டவன். இரண்டும் பத்துப் பத்து ரூபா தான். நான் கொழுப்பாய் இருந்த கறுத்தை நாய்க் குட்டியைத் தெரிந்தெடுத்துக் கொண்டு ஒல்லியாய் இருந்த மண்ணிறத்தை முன் வீட்டுப் பாக்கியம் மாமிக்குக் குடுத்தன். இப்ப......இப்ப என்ரை நாய்க் குட்டி நடக்கவும் மாட்டாமல் நிக்குது! பாக்கியம் மாமின்ரை நாய்க் குட்டி பந்து மாதிரி உருண்டு உருண்டு திரியுது எல்லாம் கடைசியிலை தலைவிதிதான்!''

PDF Reducer

நாய்க் குட்டியுடன் தனது வாழ்வையும் ஒப்பிட்டுப் பார்த்து அவள் மனம் உள்ளுக்குள் அழுதது.

மனம் அமைதியில்லாமல் தவிக்கும் நேரங்களில் வாசிப்பதற்கென்று பல நல்ல தத்துவங்களையும் எண்ணங்களையும் அவள் ஒரு 'ஃபைலில்' எழுதிச் சேர்த்து வைத்திருந்தாள். அறையினுள் சென்று மௌனமாக அதைப் பிரித்து வாசிக்கத் தொடங்கினாள்.

''மத்திய தரைக் கடல் பகுதியில் கடலின் ஆழத்தில், நன்னீர்ச் சுனைகள் இருக்கிறதாம். மனம் எனும் கடலிலும் பகையும் கோபமும் வரும்போது உப்பு நீர் சுரந்தாலும் சாந்தம், அன்பு எனும் பண்புகள் நிறையும் போது குடிநீர் சுரக்கிறது''

''யாரோ மடையன் இப்பிடிக்கூறி இருக்கிறான்! இவரைப்போல ஆக்களின்ரை மனதிலை ஒரு நாளும் குடிநீர் சுரக்குதில்லையே!''

அவள் 'ஃபைலை' மூடி வைத்தாள். உடுப்பை மாற்றி விட்டுக் கட்டிலில் படுத்தாள். அழுதால் நன்ருக இருக்கும். அமைதி வரும் போல இருந்தது. ஆனு லும் ஏனே அழுகை வரவில்லை. முகட்டின் ஒரு புள் ளியை வெறித்துப் பார்த்தபடி - செல்ஃப் ஹிப்னேசிஸ் போல - நீண்ட நேரமாய்ப் படுத்துக்கிடந்தாள் அவள்.

தொடர்ந்து ஏதேதோ சிந்தனைகளில் ஆழ்ந்து போய்ப் படுத்திருந்து விட்டு "இனிமேல் எழும்பிப் போய்ச் சாப்பிடுவம்" என்று நினைத்து எழுந்திருந்த போது இரவு ஏழு மணிக்கு மேல் ஆகிவிட்டது.

"எனக்கு ஒரு பிள்ளை இருந்தாலாவது, அம்மா எழும்பிப் போய்ச் சாப்பிடுங்கோ எண்டு வந்து இது வரை எழுப்பியிருக்கும்......"

என்று நினைத்தபோது, இதுவரை வெளிப்படாத அழுகை அவளுக்கு வெளிப் பட்டது. அதைத் தொடர்ந்து,

educer Demo

"அக்கா, எழும்பிச் சாப்பிடுங்கோ எண்டு தம்பி கூப்பிட்டிருப்பனே? எங்கை போட்டான் இவன் இண் டைக்கு......" என்ற நினைவு தொடரவே, எழுந்து வெளியில் வந்து,

"தம்பி... குமார் — டேய்... தம்பி..." என்று பலமாய்... உரப்பாய்க் கூப்பிட்டுப் பார்த்தாள். அவன் வீட்டில் நிற்கும் சந்தடி தெரியவில்லை.

"ரியூசனுக்குப் போனலும் ஆறு ஆறரைக்கு வந் திடுவன்?" என்று சிந்தித்தபோது வளவுக்குள் மோட் டரைப் போட்டு இறைத்துக் கொண்டிருந்த பால சிங்கம் சொன்னர்.

"உன்ரை தம்பி இண்டைக்குப் பின்னேரமே விட்டை வரேல்லை. பள்ளிக்கூடத்தாலை 'ரியூசனு'க்

குப் போயிட்டானுக்கும் எண்டு தான் நானும் நினைச்சன். ஏழு மணிக்கு மேலையாகுது...... இன்னும் காணேல்லை!"

"பதினேழு வயதுள்ள ஒரு இளைஞனைக் காணவில்லை என்றால்......!"

"ஒரு வேளை அப்பிடி இருக்குமோ? ஒரு வேளை இப்பிடி இருக்குமோ?" சீ...... சீ...... இப்பிடித்தான் இருக்கவேணும்......"

என்று பல்வேறு நிகழ்தகவுகளைச் சிந்தித்து மனம் அல்லற்பட்டது. வாயிலில் சைக்கிள் மணி கேட்கிறதே என்று அவள் எட்டிப் பார்த்தபோது, குமாரின் நண்பன் ரமேஷ் அவளை நோக்கி வருவது தெரிந்தது. அவன் கொண்டுவரும் செய்தியின் ஆழத்தைப் புரிந்து கொள்ள முயலுவது போல, அவள் அவன் முகத்தை உன்னிப்பாகப் பார்த்தாள்.

PDF Reducer

# 3

புல்லாகிப்
பூடாகி.....
இத்தொடரில்
கல்லாகிப்
பின்
மனிதன்
ஜனனித்ததாலா
அவன் மனமும்
கல்லாகச்
சமைவதுண்டு?

—புலோலியூர்
ஆ. இரத்தினவேலோன்

educer Demo

"மனித சுதந்திரத்தின் அதி உயர்ந்த சுதந்திரம் தோல்வி காணும் சுதந்திரந்தான்"

என எங்கோ வாசித்த நினைவு கசப்பாய் வந்தது பூரணியின் மனதில்! ஆம்! எதுவாய் இருக்கக் கூடாது என அவள் மனம் எதிர்பார்த்ததோ, அந்த எதிர் பார்ப்புத் தோல்வி கண்டுவிட்டது.

" அவன் போய்விட்டானும். அது குறித்துப் பெருமை அடையட்டுமாம் " இது தோல்வியா வெற்றியா என அவளால் நிச்சயம் செய்யவும் முடியாமல் இருந்தது.

' அவனை நான் வடிவாப் படிப்பிச்சுப் பெரிய உத்தியோகமாக்குவன் எண்ட எதிர்பார்ப்பிலைதான் அப்பா அவனை என்னோடை விட்டார். அந்த வகையிலை நான் தோல்விதான் கண்டிட்டன். இது வெற்றி எண்டு காட்டிறதுக்கு நான் எத்தினையோ ஞாயங்களை எடுத்து வைக்கலாம், ஆனால் அப்பா அதொண்டையும் ஏற்றுக் கொள்ள மாட்டார். இனிமேல் எங்கடை இன்ப துன்பங்களிலை கலந்து கொள்ளிறதுக்கு அவன் இல்லை எங்கிறதை அம்மா கடைசி வரையிலும் ஒத்துக்கொள்ள மாட்டா...... "

நினைவுகள் பல விதமாய் மனதில் ஓடியபோதும் அவள் நீண்ட நேரம் மௌனமாகவே இருந்தாள். செய்தியைச் சொல்லிவிட்டு ரமேஷ் போய்விட்டான். பாலசிங்கம் எந்த விதமான சலனமுமின்றித் தன் வேலைகளில் ஈடுபட்டிருந்தார் அவரைப் போலவே தானும் சலனப்படாமல் இருக்க வேண்டும் என்று அவள் விரும்பினாள் ஆனால் அது அவளால் முடியாதிருந்தது. அவளையு மறியாமலே நீர் கன்னங்களில் கோடு கிழித்தது. பாலசிங்கத்திற்குச் சாப்பாடு பரிமாறிய போதும் அதே நிலை நீடித்தது.

" சும்மா ஒப்பாரி வைச்சு ஊரைக் கூப்பிடாமல் பேசாமல் கிட. இது பக்கத்து வீட்டுக்கும் தெரியாமல் இருக்கிறதுதான் நல்லது. ஆரும் கேட்டால் அவன் வவுனியா மாமா வீட்டை போட்டான் எண்டு சொல்லு. நாளைக் காத்தாலை வேணுமெண்டால் கொப்பருக்குப் போய் நான் சொல்லிப் போட்டு வாறன். இப்ப ஊரடங்குச் சட்ட நேரத்திலை ஒண்டும் செய்யேலாது போய்ப்படு...... "

PDF Reducer

ஒரே 'ஃபோனில்' பல வியாபார விஷயங்களைப் பேசி முடித்து விடுவது போலப் பல்வேறு விஷயங்களையும் ஒரே கட்டளை போல அடுக்கிவிட்டுப் பாலசிங்கம் எழுந்து போய்விட்டார். அவள் அவரது சாப்பாட்டுக் கோப்பையைக் கழுவி வைத்தாள். ஒரு மனைவி சாப்பிட்டுவிட்டு வைத்துச் சென்ற எச்சில் கோப்பையை ஒரு கணவன் எடுத்துக் கழுவி வைக்கும் நிகழ்வு எந்த வீட்டிலாவது நிகழுமா என்று அவளின் அனுமதி பெருமலே அவளது உள் மனம் ஒன்று கேள்வி கேட்டுக்கொண்டது. நிலவை மேகம் மறைத்த ஒரு மங்கல்போல — அமைதியற்ற பல்வேறு சிந்தனைகளால் — அவளுக்குள்ளே மனம் இருட்டிவிட்டது.

மாலையில் கொஞ்சமாகத் தோன்றியிருந்த பசியும் இப்போது முற்ருக மறைந்து விட்டிருந்தது. மீதமாயிருந்த சோற்றுக்கு நீர் ஊற்றி வைத்துவிட்டு அவள் படுத்துக்கொண்டாள். பின்னர் ஏதோ நினைவில் எழுந்து சென்று யன்னலைத் திறந்து விட்டாள். வெளியில் நாலா பக்கமும் சுழன்றடித்த காற்ருேடு சிந்தனைகளும் சுழன்று வந்தன.

educer Demo

"நீ கீழே விழுவது மீண்டும் எழுவதற்காகவே" என்ற விவேகானந்தரின் கருத்து மனதில் முளைத்தது.

"எனக்குத் தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கிற தோல்விகள், துன்பங்களிலை இருந்து நான் எப்பிடி எழும்பப் போறன்..."

என்று நினைத்துக்கொண்டே, மன அமைதியை வேண்டி, அன்று பாடமாக்க வேண்டிய குறளைப் படுத்திருந்தபடி பாடம் செய்தாள். வழமையாக ஒரு முறை வாசித்தவுடன் பாடம் வந்துவிடுகிற குறள் அன்று ஐந்து முறை வாசித்த பின்னரும் மனதில் நிலைக்க மறுத்தது;

" துன்பத்திற்கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி ".

" என்ரை துன்பங்களுக்கும் என்ரை மனந்தான் துணையாக வேணும். வேறை ஒருத்தரும் துணை வராயினம்..." என்று திடமாகத் தீர்மானித்துக் கொண்டு, லேற்றை அணைத்துப் போர்வைக்குள் புகுந்து கொண்டாள்.

அவர் வந்து அருகில் படுத்துக் கொண்டது கட்டிலின் அசைவில் தெரிந்த போதும் அவள் நித்திரை போல அசைவின்றியே கிடந்தாள்.

" இந்தக் காலத்திலே யன்னலைத் திறந்து விட்டிட்டு ஒரு படுக்கை யன்னலுக்குள்ளாலை காட்டுவங்கள் துவக்கு..." என்று இரைந்தபடி அவர் எழுந்து யன்னலை அடித்துச் சாத்தியபோதும் அவள் கேட்காதது போலவே கிடந்தாள். கைபட்ட உணர்வு தெரிந்தவுடன் அவள் சிலிர்த்துக்கொண்டு சொன்னுள் தொனியில் சினத்தின் உள்ளீடுடன்.

PDF Reducer

" இதைவிட, நீ சாப்பிட்டியா எண்டு அன்பாய் ஒரு வார்த்தை நீங்கள் கேட்டிருந்தா நான் சந்தோஷப்பட்டிருப்பன்..."

அவர் பதில் கூறவில்லை. பதில் கூறக்கூடிய நிலையில் அவர் இல்லை என்பதை உணர்ந்த அவள் பணிந்து போனுள். எல்லாம் முடிந்தபின் — இதயக் கிணற்றில் நீர் முற்ருக வற்றிவிட்ட நிலையில் — மீண்டும் சொன்னுள்.

" நீங்கள் உங்களுக்கு வேண்டியதை எல்லாம் வலோற்காரமாய் என்னட்டை இருந்து வாங்கிடுறியள். ஆனல் எனக்குத் தேவையான அன்பை எந்த வகையிலும் உங்களிட்டை இருந்து வாங்க முடியாமல் இருக்கு; என்ரை மனதை எவ்வளவு கீறிக்கிழிக்க

முடியுமோ அவ்வளவும் புண்படுத்திப் போட்டும் உங் களுக்குத் தேவையான தெல்லாம் கிடைக்குது தானே......"

"இவள் விசரி, ஏதோ கருத்தில்லாமல் அலம்பு கிருள்" என்பது போலப் பாலசிங்கம் நித்திரையாகி விட்டார். எப்படி இவருக்கு இவ்வளவு அமைதியாக நித்திரை வருகிறது?

எழுந்து போய்த் தலேயை எங்காவது முட்டி மோதிக் கொள்ள வேண்டும் போல இருந்தது அவ ளுக்கு.

"இந்த உலகில் ஒரேயொரு நோய்தான் உண்டு. அது அன்பின்மை. அதற்கு ஒரே ஒரு மருந்துதான் உண்டு. அது அன்பு" என்று அண்மையில் ஒரு சமய சஞ்சிகையில் வாசித்த நினேவு வந்தது.

educer Demo

"என்னிடத்தில் அன்பு காட்ட ஒருத்தருமில்லே. அன்புத் தேவை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் பூர்த்தி செய்யப்படவேண்டிய கட்டாயத் தேவை. சாப்பாடு இல்லாமல் வாழ முடியாது எண்டதுபோலே, அன்பில்லாமலும் வாழமுடியாது. நான் கலியாணம் கட்டமுந்தி என்ரை அப்பா, அம்மா, சகோதரங்கள் எல்லாம் என்னேடை அன்பாய் இருந்தினம் கலியா ணம் கட்டி இஞ்சை வந்த உடனே, இனிமேல் என் னட்டை அன்பு காட்டத் தேவையில்லே எண்டு நினேச்ச மாதிரி ஒரு பிரிவு ஏற்பட்டுப் போச்சுது. முழுசா அன்பு காட்ட வேண்டிய இவர் இப்பிடி... ஒரு விலங்கு மாதிரி இருக்கிருர். ஒரு பிள்ளேயாவது இருந்தா... அது சொல்லும் மழலேயிலே இந்த வேதனே மறந்து போகுமெண்டால்... அதுகும் கிடைக்குதில்லே......"

எழுந்து மேசையில் அமர்ந்து இவ்வளவையும் 'டயரி'யில் எழுதிஞள். ஒருவரிடமும் சொல்ல முடி யாததை எழுத்திலாவது எழுதியதில் கொஞ்சம்

அமைதி வந்ததுபோல இருந்தது. அட்டவணைப்படுத் தப்பட்ட வாழ்க்கை முறையில் இருந்து விலகமுடியா தவளுக்குக் கண்ணீர் ஊன்று கோலாக வந்து உதவி செய்து மேலும் சிறிது அமைதியைத் தரமுயன்றது. நேரம் நடுநிசி என்பதைப் பன்னிரண்டு அலாரச் சத் தங்கள் உறுதி செய்தன. எங்கிருந்தோ பெருத்த ஓசையுடன் வெடித்த குண்டு ஒன்றினால் கண்ணாடி யன்னல்கள் ஒருமுறை குலுங்கி அதிர்ந்தன. எந்தப் பாலம் உடைந்ததோ? பாலசிங்கம் எதுவும் தெரியா மல் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்.

"இனிமேலும் நித்திரை முழிச்சால்... நாளைக்கு வாற தலையிடியிலை ஒரு வகுப்பிலையும் படிப்பிக்க முடி யாமல் இருக்கும்......"

என்று நினைத்துக்கொண்டே மீண்டும் போர்வைக் குள் புகுந்து கொண்டாள்.

"என்ன பூரணி? உனக்கு நித்திரை வரேல் லையோ?" என்று இப்போது யாராவது கேட்கக் கூடு மாயின் (கேட்க ஒருவருமில்லை என்பது வேறு விடயம்) அவர்களைக் கடவுள் என்று கும்பிடவும் அவள் தயா ராக இருந்தாள். ஆனால்...! ஏதோ ஒரு நெடி. இது தான் இரவின் மணமோ?

அதிகாலை நாலு மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்திருந்தபோது, உடல் முழுவதும் வலித்தது. இரவு முழுவதும் நித்திரையின்றிப் புரண்டதில் தலை 'விண்விண்' என்று பறந்தது. இருந்தும் அன்றைய காலைக்கும் மதியத்துக்குமான உணவை விறுவிறென்று செய்து முடித்தாள். பகல் உணவைக் குளிரூட்டியில் வைத்துவிட்டுத் தனது காலை உணவைப் பார்சலாகக் கட்டிக்கொண்டாள்.

காலை ஏழு மணிக்குக் கோப்பியைக் கொண்டு அறையினுள் நுழைந்த போதும் அவர் எழுந்திருக்க வில்லை. கட்டிலில் இருந்து அவரைத் தொட்டு எழுப்பிக் கோப்பியைக் கொடுக்க அவளால் முடியவில்லை இன்று. எத்தனை நாள் அவருக்கு அவள் அவ்வாறு கொடுத் திருக்கிறாள்! பதிலுக்கு......? வெறும் வாயளவிலாவது ......அன்பு? மேசையின் மேல் கோப்பியை வைத்து விட்டு,

" கோப்பி வைச்சிருக்கிறன். எழும்பிக் குடி யுங்கோ " என்று சத்தமாய்ச் சொன்னாள்.

கண்ணை விழித்து அவர் பார்த்த பார்வை அவ்வ ளவு நன்றாக இல்லை. திரும்பி விடுவோம் என்று அவள் நினைக்க முதலே,

" வைச்சிட்டாயெல்லோ, போய்த்துலையன். பிற கேன் இஞ்சை நிக்கிறாய்? " என்ற பாய்ச்சல் மிகக் கொடுமையாய், பெரீய கொடூரமாய் அவள் இதயத் தின் மென்னுணர்வுகளை ஊடுருவிப் பாய்ந்தது.

educer Demo

' போ ' என்று சொல்லியிருக்கலாம். ' போடி ' என்றால் கூடப் பரவாயில்லை. ' போய்த் துலையன் ' என்றால்......!

" உண்மையில் நான் தொலைந்துவிட வேண்டும் என்று விரும்புகிறாரா? " தனது விருப்பங்களையும் பல வீனங்களையும் இன்னொருவர்மேல் ஏற்றிப் பார்ப்பது இயல்பு என்பார்களே. தான் வேறு யாரோ ஒருத்தி யுடன் வாழ விரும்புவதால்தான் என்னை வேறு ஆண் களுடன் இணைத்துப் பேசி மகிழ்கிறாரோ? அப்படியா னால் யார் அந்த ஒருத்தி? "

" பொலிகமி " ஒரு மனிதனுக்கு இயல்பான விருப்பமாமே! சமுதாயத்தில் சுமுகநிலை நிலவவேண் டும் என்பதற்குத்தானே ஒருவன் - ஒருத்தி பண்பாடு ஏற்படுத்தப்பட்டது. அப்படியானால் அவரது விருப் பமும் இயல்பானது. தவறற்றது தானோ? "

" என்ன இது? அவர் அப்படி விரும்புகிறார் என்பதை நான் நிரூபித்து விட்டதுபோல.....? "

" நான் ஒரு படிக்காத பெண்ணாய் இருந்திருந்தால் இவ்வளவு சிந்தனைகளும் தோன்றியிருக்காது; 'போய்த்துலையன்' என்ற சொல்லை ஒருவேளை மிகச் சாதாரணமாய் எடுத்துக் கொண்டிருப்பேன். ஆக, நான் படித்தது தான் எனது துன்பத்திற்குக் காரணமா? மனமென்னும் பாலைவன வெளியில் நான் தண்ணீருக்காக ஓடிக்கொண்டிருப்பதும் படித்ததால் தானா? " சீ..சீ... அவளுடைய 'நான்' அதையும் ஏற்றுக் கொள்ளவில்லை!

கடலின் மேற்பரப்பில் அடுக்கடுக்காய் ஓய்வின்றித் தோன்றும் அலைகள் போல, அவளிடம் சிந்தனைகள் வந்து கொண்டிருந்தபோதும், உள்ளத்தில் விபரிக்க முடியாத ஒரு வேதனை தோன்றியது. தான் நினைப்பதை நேரடியாக அவரிடம்கேட்டு ஒரு [illegible]டம்' சண்டை போட்டால், இந்த 'முட்டும்' 'வேதனையும்' கொஞ்சம் குறையலாம். அப்படிப் பல தடவைகளில் அவள் செய்துமிருக்கிறாள்!

PDF Reducer

ஆனால் இன்று சண்டை பிடிக்கத் தொடங்கினால், அவர் தனது தாய் வீட்டிற்குப் போய்ச் செய்திசொல்ல மறுத்துவிடுவார் என்ற நினைவில் அவள் பேசாமலே போனாள்.

ஆராய்ச்சி மணிகள் அறுபட்ட மண்ணில் வாழ வேண்டி நேர்ந்துவிட்ட சோகம் அடிப்படையில் உறைந்து கிடக்க, அதன் மேற்பரப்பைப் பாலசிங்கம் அடிக்கடி கிண்டிக்கிளறுவது... உள்ளத்தை அழுத்தித் துடைத்து விட்டு அவள் குளிக்கப் போனாள்.

அதிகாலை வெயில் முகத்தில் சுள்ளென்று உறைத்தது. " ஜனங்கள் வருவார்கள். போவார்கள். ஆனால் நான் என்றும் போய்க்கொண்டே இருக்கிறேன் "

என்று ரெனிசனின் ஆறு சொன்னது போல, "யாரும் அழுவார்கள், சிரிப்பார்கள். நான் எப்போதும் உதித்து மறைந்து கொண்டே இருப்பேன்" என்று இந்தச் சூரியன் அவளிடம் சொல்லுகிறதா?

அவள் குளித்துக் கொண்டிருக்கும்போது முற்றத்தில் 'காஞ்சியனின்' குரல் கேட்டது.

"நான் உங்கடை அவவிட்டைத்தான் ஒரு அலுவலா வந்ததாக்கும்"

"அவ, குளிக்கிறா. உப்பிடி முத்தத்திலை இருந்து கொள்ளன்"

"சரி, சரி தாங்கள் தங்கடை வேலையைப் பாக்க, அவ வருமட்டும் நான் இதிலை குந்திறன்..."

என்ன விஷயமாய்க் காஞ்சி தன்னைத் தேடி வந்திருக்கிறார் என்று அவள் ஊகிக்க முனைந்தாள்.

educer Demo

"ஏன் காஞ்சி வெளி முத்தத்திலை? உள்ளுக்குப் போய் இருந்திருக்கலாமே?"

அவருக்கும் கேட்கட்டும் என்று அவள் உரக்கவே சொன்னாள். காஞ்சி சிரித்தான். அது மிக அர்த்தம் பொதிந்த சிரிப்பாய் இருந்தது.

"நீங்கள் போய் என்னை உள்ளுக்கை இருக்கச் சொல்லி நான் நுழைஞ்சிட்டன் எண்டால்... பிறகு வில்லங்கப்படுகிறது நீங்களெல்லோ! அப்பிடி உங்களை மாட்டி வைச்சு நான் உள்ளை வாறதிலை என்ன பிரயோசனம்?"

என்று அவன் கேட்பதாய் அந்தச் சிரிப்பு அவளுக்குள் புரிந்தது.

"அது கிடக்க... நான் வந்த சங்கதியைத் தாங்கள் கேட்கேல்லை..." சால்வையை எடுத்து, உடலை

வளைத்து, முகத்தில் பெரிதாய்ச் சிரித்து அவன் கேட்கும் அழகை அவள் ஒரு கணம் தனக்குள் ரசித்தாள். இயல்பாகவே அவனுக்குக் கண்கள் உள்ளே புதைந்திருக்கும். பெரிதாய்ச் சிரிக்கும்போது அவை இன்னும் உள்ளே சென்று மறைந்துவிடும். அப்போது, பாக்குத் தின்றுதின்று சிவந்த அதரங்களே முகத்தின் பிரதான பகுதியாய் ஒளி பெற்றுத் திகழும்.

"சரி, நான் கேட்காட்டால் நீ சொல்லப் பிடாதே? சொல்லன், என்ன விஷயம்?"

"எங்கடை உந்த நாச்சிமார் கோயில்லை... பொங்கல் வருது..."

"வரட்டன். எங்கடை வீட்டிலை வாழைக்குலை ஒண்டு பதமாய் இருக்கு. வேணுமோ?"

"இல்லையாக்கும். எங்கடை தோட்டத்திலை பத்துப் பதினைஞ்சு குலை கிடக்கு. அது ஒண்டும் வேண்டாம்."

PDF Reducer

"அப்ப......"

"தாங்கள் அண்டைக்கு வந்து எங்கடை கோயில்லை ஒரு பேச்சுப் பேசவேணும்"

"அட... இதே விஷயம் இது சுகமான விஷயம் எல்லோ? அதுக்கென்ன நான் வாறன். நீ அப்ப போட்டு வாவன்"

"அப்ப நான் வாறனுக்கும்"

காஞ்சி படலையைத் தாண்டமுதல், உள்ளே பாலசிங்கத்தின் குரல் நெருப்பைக் கக்கியது.

"கண்ட சாதியளின்ரை கோயிலுக்குப் போக... என்னைக் கூட்டிக்கொண்டு போகச் சொல்லிக்கேள்... அப்ப உவக்குச் சரியான மறுமழி சொல்லுறன்..."

அந்தச் சொற்கள் 'கறள்' ஊசியெனப் பாய்ந்து உள்ளத்தை ஊடறுக்க, அவள் பாடசாலைக்குப் போகவும் மனமின்றி நின்றாள்.

# 4

பெண்ணை அடிமை செய்யும்
ஓரவஞ்சக
ஆணாதிக்கச் சமுதாயத்தில்
எனக் கேற்படப் போகும்
துன்பங்களின் நினைவு
உங்களை அழ வைக்கிறது.

—யோ. பெனடிக்ற்பாலன்—

educer Demo

"நெருப்புச் சுடும். எனவே உபயோகிக்காதே. காற்று மரங்களை முறிக்கும். ஆகவே சுவாசிக்காதே. நீர் உன்னை அமிழ்த்திச் சாகடிக்கும். குடிக்காதே"

ஒரு முட்டாள் இவ்வாறு சொன்னான் என்பதற்காக அவ்வாறு செய்துவிட முடியுமா?

கணவர் இவ்வாறு சொல்லிவிட்டார் என்பதற்காக இங்குள்ள ஆசிரியர்களுடன் கதையாமல் இருப்பதும் இப்படிப்பட்ட வேலைதான் என்று நினைக்கப் பூரணிக்குச் சிரிப்பு வந்தது. வழக்கம் போலவே கலகலப்பாக இருக்க அவள் முயன்றாள்.

கல்லூரி அபிவிருத்திச் சபைப் பொருளாளரான அவள் அதன் செயலரான கேதீஸ்வரன் ரீச்சரையும் கூட்டிக்கொண்டு, அடுத்த மாதக் கூட்டம் எப்போது என்பது பற்றிக் கலந்துரையாட அதிபரின் அறைக்குச் சென்முள்.

"எக்ஸ்கியூஸ்மி சேர்......"

"கம் இன்... ரேக் யுவர் சீற்...... நான் இவையோடை கதைச்சிட்டு வாறன். இருங்கோ..."

கிள்ளினுல் இரத்தம் கன்றிவிடக்கூடிய நிறத்தில் ஒரு பிள்ளையும் அதன் தந்தைபோல் தோன்றிய ஒருவரும் இருந்தனர்.

"இவை இரண்டு பேரும்தான் எங்கடை எஸ். டி. எஸ். செகிறிற்றறியும் ரெசறரும் நாங்கள் போன கூட்டத்திலை ஒவ்வொரு அட்மிசனுக்கும் ஆயிரம் ரூபா வாங்கிறதெண்டு 'டிசைட்' பண்ணியிருக்கிறம். பள்ளிக்கூடக் கட்டிடமெல்லாம் பழுதாப் போச்சு. திருத்த நிறையக் காசுவேணும். இப்ப அரசாங்கமும் எங்களைக் கவனிக்கிறேல்லை..."

அதிபர் மேலே தொடர்ந்து சென்றது அவள் காதில் விழவில்லை. மூளையின் சிந்தனைப்பகுதி 'சுருக்' கென்று அறுந்து எல்லாம் வெறுமையாகிய உணர்வுடன் கேதீஸ்வரன் ரீச்சரைப் பார்க்க அவள் இவளைப் பார்த்தாள்.

"எப்போது இப்படி ஒரு தீர்மானம் வந்தது? ஏன் அதிபர் இப்படி ஒரு அப்பட்டமான பொய்யைச் சொல்கிமுர்?"

என்ற கேள்வி இருவர் கண்களிலும் தேங்கி நின்றது.

PDF Reducer

"அதுக்கென்ன? பள்ளிக்கூடத்துக்குத் தரத் தானே வேணும். நான் நாளைக்கு... அப்ப எல்லாம் ஆயத்தமாய் வாறன்......"

அவர் பிள்ளையுடன் வெளியேறினர்.

"நான் எதைச் செய்தாலும் அது பள்ளிக்கூட நன்மைக்குத்தான்; இப்பிடிக் கொஞ்சம் வாங்கினல்... எவ்வளவோ வேலை செய்யலாம்......" — அதிபர்

இப்படி ஒரு அதிபரைப் பெற இந்தக் கல்லூரி "என்ன புண்ணியம்" செய்திருக்கும் என்று அவள் நினைத்துக்கொண்ட போதும், இப்போது அவர்களுக் கும் மௌனத்திற்கும் கூடிய நெருக்கம் ஏற்பட்டிருந் தது. சென்ற விடயத்தைக் கதைத்துவிட்டு இருவரும் வெளியேறினர்.

educer Demo

"என்ன பூரணி, இவர் லஞ்சம் வாங்கிருர் எண்டு வெளியில சனம் கதைக்கேக்கை நான் பொய் எண்டு நினைச்சன். இப்ப கண்ணுக்கு முன்னமே துணிவா......" — கேதீஸ்வரன் ரீச்சர்.

"அதுதான். எஸ். டி. எஸ் பொருளர் எண்ட முறையிலை இது எனக்கும் தலையிடிதான்; பாப்பம் நாளைக்கு. அந்தக் காசை என்ன செய்யிருர் எண்டு..."

வகுப்பறைக்குச் சென்ருல் சொந்தப் பிரச்சினைக ளும், கல்லூரிப் பிரச்சினைகளும், கவலைகளும் பெரு மளவு மறைந்து போகும் என்ற உணர்வில் மணி அடிப்பதற்குப் பத்து நிமிடங்கள் இருக்கும்போதே வகுப்பினுள் நுழைந்தாள் பூரணி. மாணவர்கள் இவ ளைப் புரியாத புதிராய், புதிதான புதிராய்ப் பார்த் தனர். மணி அடித்துப் பத்து நிமிடம் கழிந்த பின் னரும் வகுப்பிற்குச் செல்லாத ஆசிரியர்கள் அவர்க ளுக்கு அதிகம்! ஆனல் மணி அடிக்கு முன்னர் வகுப் புக்கு வந்துவிடும் 'பூரணி ரீச்சர்" ஒரு புதிர்!

" ஒன்பது பீ " இல் அன்றைய பாடம் நியூற்ற னின் மூன்றும் விதி. மிகப் பரபரப்பாகப் பரிசோத னைகளை ஆரம்பித்துவிட்டால், நினைவுகள் மாறிவிடும் என்று பரிசோதனைப் பொருள்களை மேசைமீது பரப்பி விட்டுத் தனது சிங்காசனமான கதிரைக்கு அருகில் நின்ற போது, மாணவி ' ஜஸ்மின் ' மிக அருகில் நின்று ' ரீச்சர் ' என்றாள்.

" என்ன? " என்பது போல் பூரணி ஏறிட்டுப் பார்க்க முதல்,

" ரீச்சர், என்ரை டெஸ்க்கிலை ராஜன்ரை பேரை எப்பவும் எழுதிவிடினம் ரீச்சர்; நான் அதை அழிச் சாலும் பகிடி பண்ணினம். அழிக்காட்டிலும் பகிடி பண்ணினம் " என்றாள்.

பொருள்களை எல்லாம் மேசைமேல் அப்படியே இருக்க விட்டுவிட்டு, ஜஸ்மினை வகுப்புக்கு வெளியே அழைத்துச் சென்றாள்.

" கட்டிளமைப் பருவம் மன எழுச்சிகளும், தகைப்புக்களும் அதிகமான காலம். காஞ்சிபுரம் பட் டுச் சேலையில் தைத்துவிட்ட முள்ளை அகற்றுவது போல, இவர்களது பிரச்சினையை மிக நுணுக்கமாகக் கவனித்து அகற்ற வேண்டும் "

உளவியல் பாடத்தில் படித்தது நினைவுக்கு வர,

" சரி, இந்தப் பிரச்சினையளை வகுப்பிலை ஐம்பது பேருக்கு முன்னாலை நான் விசாரிச்சுப் பெரிசு படுத் தப் பிடாது; இப்ப சொல்லும். உம்மடை பிரச்சினை என்ன? " என்றாள்.

பெரும் இரைச்சலுடன் பறந்து வந்த ' ஹெலி காப்டர் ' ஒன்று, கல்லூரி மைதானத்துக்கு மேலே வந்ததும் தாழப் பறந்து அவதானித்து விட்டு, மீண் டும் மேலே எழுந்து பறந்து சென்றது.

"டெஸ்க்கிலே எழுதிறது காணுது எண்டு நேற்று பிளாக் போட்டிலேயும் எழுதினம்......"

"இவங்கள் இப்ப கல்லூரியையும் சந்தேகப்படுருங்கள்" என்று பூரணி நினைக்க முன்னர், கதைக்கத் தொடங்கிவிட்ட ஜஸ்மினுக்குக் கண்கள் குளம் கட்டிவிட்டன. சென்ற வாரத்தில் ஒரு நாள், மாணவர்களுக்கிடையில், அப்பியாசக் கொப்பிகளே மாற்றித் திருத்தக் கொடுத்தபோது, ஜஸ்மினுடைய கொப்பியை ராஜன் திருத்தியதும், அவன் தவறுதலாய் பிழையான ஒரு விடைக்குச் சரிபோட்டு விட்டதும், அவள் நினைவுத் தடத்தில் மீண்டும் வந்தன. அன்றிலிருந்துதான் இந்தப் 'பகிடி' ஆரம்பித்திருக்க வேண்டுமெனத் தன்னுள் ஊகித்துக் கொண்டாள்.

"அப்ப இதுக்கு நான் என்ன செய்ய வேணும் எண்டு நீர் விரும்பிறீர்?"

"....................."

"என்னுடைய கேள்விக்கு நீர் இலேசா மறுமொழி சொல்ல முடியாமல் இருக்கிறதிலே இருந்து, இது சுலபமாய்த் தீர்க்கக் கூடிய பிரச்சினை இல்லே எண்டு உமக்கு விளங்கியிருக்கும். அதே நேரம் இதை நாங்கள் சிக்கல் படுத்தப்பிடாது"

"அப்ப நான் என்ன செய்யிறது ரீச்சர்?"

"நீர் ஒண்டும் செய்ய வேண்டாம். இப்பிடி எண்டு எழுதியிருக்கிறதைக் கவனிக்காதமாதிரி இரும். யாருக் காட்டினுலும்—— யூ ஜஸ்ற் இக்னோர் இற். அப்ப எழுதிறவையே களேச்சுப்போய் விட்டிடுவினம்"

தனது அழகான பெரிய விழிகளேச் சுழற்றி ஒரு முறை யோசித்த ஜஸ்மின் 'சரிமிஸ்' என்ருள்.

" நாச்சிமார் கோயில்லே தங்கடை பொங்கலுக்குப் பூரணி ரீச்சர் பேசிறு எண்டு காஞ்சி சொன்னன். நானும் கட்டாயம் வந்து கேக்க வேணும் "

அவர்களைத் தாண்டி அடுத்த வகுப்பிற்குச் சென்று கொண்டிருந்த இந்திரன் மாஸ்டர் ஒரு சிரிப்புடன் சொன்னார்.

" நீங்கள் ஒரு சிறந்த பேச்சாளர். பிறகு என்னுடைய பேச்சைக் கேக்க வேணும். 'மிஸ்' பண்ணிப்போட்டன். அப்பிடி எண்டு நெடுகச் சொல்றது எனக்கு ஆச்சரியமாயிருக்குது...... "

" ஒரு பேச்சாளனாலேதான் இன்னொருவனுடைய சிறந்த பேச்சைச் சொல்லுக்குச் சொல்லு ரசிக்க முடியும்...... "

சொல்லிக் கொண்டே சென்று தன் வகுப்பினுள் நுழைந்துவிட்ட இந்திரன் மாஸ்டரைச் சில கணங்கள் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டுத் தன் வகுப்பினுள் நுழைந்தாள் பூரணி.

வகுப்பு மாணவர்களை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தாள். பின்னர் எண்ணிப் பார்த்தாள்.

" என்ன? நேற்று இருபத்தேழு பேர் இருந்தீங்கள்; இண்டைக்கு இருபத்து மூண்டு...... "

" ரஞ்சித்தும், தேவனும் போட்டினம்...... "

" ம்...... "

" மகேசன் கொக்குவிலிலே இருந்து வாறவன். சீசன் ரிக்கற். இண்டைக்கு பஸ் ஓடேல்லே; டீசல் இல்லையாம்...... "

" மற்றது......? "

" மற்றது... ஈசன்... அவற்றை அப்பா அநுராத புரத்திலே சரியாம்......" வருட ஆரம்பத்தில் 'ஐம்பது பேர்' நெருக்கடியாய் இருந்த வகுப்பு! என்ன வேகமாய் மெலிந்து போகிறது?

சோகக் கூர்கள் மனதைக் கீறி அழியா ரணத்தை உருவாக்கின அவளுக்குள்.

" சரி நாங்கள் படிப்பம் "

" எந்த ஒரு தாக்கத்திற்கும் சமமும் எதிருமான மறுதாக்கம் இருக்கும் " என்ற நியூட்டனின் மூன்றும் விதியைப் பல்வேறு பரிசோதனைகள் மூலமும் அன்றாட அநுபவங்கள் மூலமும் விளக்கினாள்;

" ரீச்சர், இந்த விதி சடப் பொருள்களின்ரை தாக்கத்துக்கு மட்டுந்தான் பொருத்தமா, இல்லாட்டி உயிர்ப் பொருள்களுக்கும் பொருத்தமா?"

ராஜன் எழுந்து நின்று இப்படிக் கேட்டபோது தான் முதன் முறையாக அவளும் அதுபற்றிச் சிந்தித்தாள்.

" ஏன், இப்பிடி ஒரு சந்தேகம் உமக்கு வந்தது? நியூட்டன் இதைச் சடப் பொருள்களுக்குத் தான் விதித்தார் "

" இல்லே ரீச்சர். 'கடிதம் கொடுத்தல்' என்ற ஒரு உயிர்த்தாக்கத்திற்குச் சமமும் எதிருமான மறு தாக்கம் கட்டாயம் இருக்குமோ எண்டு ராஜன் அறிய விரும்பிறுன்...... "

கடைசி வாங்கின் மூலேயில் இருந்து மதியழகன் இவ்வாறு சொன்னபோது, அவள் ஜஸ்மினைப் பார்த்தாள்;

சிறிது நேரத்திற்கு முன்னால் கண்களில் கரை முட்டிநின்ற நீர் இப்போது அவளது கதுப்புக் கன்னங்களில் மெதுவாக வடிந்து காய்ந்தது.

தன்னுடைய கல்லூரி வாழ்க்கைக் காலங்களில் இதேபோலத் தன்னையும் தன் வகுப்பு மாணவன் இளங்கோவையும் இணைத்து ஏனைய மாணவர்கள் கேலி செய்வதை இரைமீட்டுப் பார்த்தாள் பூரணி.

" என்னதான் பரம்பரை இடைவெளி, பரம்பரை இடைவெளி என்று கோஷமிட்ட போதிலும், ஒரு சில பிரச்சினைகள் எல்லாப் பரம்பரையிலும் ஒரே மாதிரித்தான் இருக்கிறது ..... " என்று நினைத்துக் கொண்டாள்.

இந்த ஆம்பிளையளுக்குப் பொம்பிளையளிலை ' செக்ஸ் ' சம்பந்தப்பட்ட விருப்பம் இருக்கிற வரையிலையும், அந்த விருப்பத்தை நேரை ஒப்புக்கொள்ளிற நேர்மையும் துணிவும் இல்லாமல் இருக்கிற வரையிலையும், இப்பிடித்தான் அவை மற்றவை இணைச்சுப் பேசிற சந்தர்ப்பங்களிலை ஏற்படுகிற மகிழ்ச்சிக்காக, அந்தப் பகிடியளைத் தூண்டிக் கொண்டிருப்பினம் "

இந்த நினைவு கரைய முதலே, இளங்கோவைப் பற்றிய நினைவு எட்டிப் பார்த்தது.

" எங்கடை வீட்டுக்கு வந்த இரண்டு நாய்க் குட்டியிலை, நான் தெரிவு செய்தது நோய் பிடிச்சுக் கிடக்கிறதைப் போலத்தான், எனக்கு வந்த இரண்டு மாப்பிளையளிலை அப்பா தெரிவு செய்தது மனநோய் பிடிச்சதாகக் கிடக்கு... "

" இளங்கோ என்னைக் காதலிச்சார் எண்டு சொல்லேலாது. எங்கடை வகுப்பிலை மற்றப் பிள்ளையள் எங்களை இணைச்சுப் பகிடி பண்ணினதைக் கேட்ட

குற்றம் தவிர, வேறை 'தொடசல்கள்' எங்களுக்குள்ளை இருக்கேல்லை. ஆனாலும் அவர் என்னைக் கலியாணம் செய்ய விருப்பிறதா அப்பாவைக் கேட்டவர்தானே! ''

'' வடிவையும் நிறத்தையும் பாத்து நான் நாய்க்குட்டி பிடிச்ச மாதிரித்தான், சாதியையும் பணத்தையும் பாத்து அப்பா பாலசிங்கத்தைப் பிடிச்சார் ''

மணி அடித்தது தெரியாமல் சிந்தனையில் இருந்தவளை,

'' ரீச்சர், பெல் அடிச்சிட்டுது. எங்களுக்கு இப்ப சுகாதாரம் இந்திரன் மாஸ்டர் வந்திட்டார். ''

என்ற மாணவரின் குரல் எழுப்பியது. அடுத்த பாட நேரந் தனக்கு ஓய்வு என்பதை நினைத்துக் கொண்டு அவள் 'ஸ்ராவ் றூம்' பக்கமாக நகர்ந்தாள்;

பத்து 'சி' வகுப்பைத் தாண்டிக் கொண்டிருந்த போது,

'' அண்டைக்கு நான் அடிச்சு நீ முட்டைக் கண்ணீர் வடிச்சனியெல்லே...... ''

என்று பாலு மாஸ்டர் 'செல்லமாக'க் கேட்பதும், ஒரு மாணவி, '' நான் எங்கை அழுதனான்; அது இவ 'சுசி' எல்லோ...... நான் ஒரு நாளும் அழேல்லை '' என்று சிணுங்குவதும் கேட்டன.

சில ஆண் ஆசிரியர்கள் மாணவிகளைத் தண்டிப்பதுகூடப் பின்னர் அதை வைத்துக் 'கொஞ்சு'வதற்கே என்று நினைத்த போது, மனதில் எரிச்சல் மூண்டது பூரணிக்கு; அந்த நிகழ்வைக் கவனிக்காதவள் போல 'ஸ்ராவ் றூமுக்கு' வந்து சேர்ந்தாள்;

" பூரணி ரீச்சரைப் போலை எண்டால், மோனிங்கிலை ஒரு மணித்தியாலத்திலை சமையல் முடியும். வீட்டிலை சகல வசதியளும் இருக்கு. நாங்கள் விறகு அடுப்பை ஊதிறதிலையே நேரம் போயிடும்... "

கமலா ரீச்சரின் வார்த்தைகள் குழம்பியிருந்த அவள் மனதில் மேலும் எரிச்சலை ஊட்டின.

" எல்லா வசதியளும் இருக்கு. நிம்மதியைத் தவிர... " என்று நினைத்துக் கொண்டவள், கமலா ரீச்சருக்குப் பதில் சொல்லாமலே அன்றைய தினசரியை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

" என்ன பூரணி, உம்மடை தம்பியைப் பற்றி ஏதோ ' நியூஸ் ' எண்டு கதைக்கினம். உண்மை தானே? "

பலர் குசுகுசுத்த விடயத்தைத் [illegible] PDF Reducer
ராஜா நேரடியாகவே கேட்டார். அவளைப் பேசாமல் இருக்க விடுவதில்லை என்று அவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டது போலத் தோன்றியது.

" இல்லை. அப்பிடி ஒண்டும் ' ஸ்பெஷல் நியூஸ் ' இல்லை. அவன் வவுனியாக்குப் போட்டான், வந்திடுவன் "

தினசரியைப் பிடித்திருந்த கை விரல்களின் நடுக்கத்தைத் தவிர வேறெந்த இயக்கமும் அவளிடம் இருக்கவில்லை; அதையும் சுருக்கமாய் முடித்துக் கொண்டு அவள் மீண்டும் முகத்தைப் பத்திரிகையினுள் புதைத்துக் கொண்டாள்.

அந்தப் பத்திரிகையில் ஒரு பக்கத்தில் காணப்பட்ட அந்த மணி மொழியில் அவளது கண்கள் மேய்ந்து சென்று நிலைகுத்தி நின்றன;

முதல் தரமான மனிதர்கள் கருத்துக்களை விவாதிக்கிறார்கள்.

நடுத்தரமான மனிதர்கள் நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசுகிறார்கள்.

மட்டரக மனிதர்கள் தனி நபர்களைப் பற்றியே கதைக்கிறார்கள்.

வந்தநேரம் முதல் இந்தப் பூரணியையும் அவளது தம்பியையும் பற்றியே பேசிக் கொண்டிருக்கும் இந்த ஆசிரியைகள் எவ்வளவு படித்தவர்களாக இருந்தாலும், மட்டரகமான மனிதர்களே என்ற நினைவு அவளுக்குள்ளே ஒரு திருப்தியையும் ஏற்படுத்தியது:

" நான் போன வருசமே சொன்னனான். தகுதியில்லாத ஆக்கள் எல்லாம் 'ஸ்போட்ஸ் கொமிற்றி' யிலை இருந்து ரிசைன் பண்ண வேணும் எண்டு ":

educer Demo

லிங்கம் மாஸ்டர் உள்ளே வந்தவுடன் பூரணியைப் பிய்த்துக் கொண்டிருந்தவர்களின் கவனம் திசை திரும்பிவிட்டது.

" நாங்கள் ஸ்போட்ஸ் கொமிற்றியாலை ரிசைன் பண்ணமுதல், நீ ஹவுஸ் மாஸ்டர் பதவியாலை ரிசைன் பண்ணு "

ஏதோ சிந்தனையில் இருந்த தாசன் மாஸ்டர் இப்படிச் சொன்னார்.

" ஸ்போட்சைப்பற்றி ஒண்டும் தெரியாதவன் ஸ்போட்ஸ் கொமிற்றியிலை இருக்கப்பிடாது "

" ஹவுஸைப் பற்றித் தெரியாதவன் ஹவுஸ் மாஸ்டராய் இருக்கப்பிடாது "

" அப்ப...... ஊரை ஏமாத்திறவனும், கொள்ளையடிக்கிறவனும சமய விருத்திச் சங்கம நடத்தலாமோ? "

இது மூர்த்தி மாஸ்டருக்கான கிண்டல் என்பதைப் புரிந்துகொண்ட அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர். இன்று அந்தச் சிரிப்பிலே பூரணமாகக் கலந்து கொள்ளப பூரணியால் முடியவில்லை.

" இந்த முறை நாடு இருக்கிற நிலையிலை, 'ஸ்போட்ஸ்' வைக்கிறேல்லையாம் எண்டு பிரின்சிப்பல் சொல்ருர். பிறகேன் ஸ்போட்ஸ் கொமிற்றி? " என்று கூறியபடி எழுந்தார் 'டெபியூற்றி பிரின்சிப்பல்'

" என்ன எல்லாரும் சிரிக்கினம். பூரணி ரீச்சர் மட்டும்...... " அப்போதுதான் 'ஸ்ராவ்றூமு'க்குள் நுழைந்த இந்திரன் மாஸ்டர் இப்படிக் கேட்டதும் திகைத்துத்தான போனுள் இவள்.

PDF Reducer

" இல்லை. நான் ஏதோ யோசினையிலை இருந்திட்டன் " சமாளித்தபடி எழுந்து அடுத்தபாட வேலைக்கான வகுப்பை நோக்கி விரைந்தாள்.

வழியில் மூர்த்தி மாஸ்டர் ஒரு பிரசுரத்தை அவளிடம் கொடுத்துவிட்டுச் சென்ருர். நடந்துகொண்டே பிரித்துப் பார்த்தாள்.

கால் நூற்றுண்டு காலம்

எமது சமய வளர்ச்சிக்கு அரும்பணி செய்த

திரு. கே. எஸ். மூர்த்தி அவர்களுக்குப்

பாராட்டு விழா

" வாற ஞாயிற்றுக்கிழமை வேறை ஏதும் அலுவல் இருந்தாலும் நிப்பாட்டிப்போட்டு, இதை ஒருக்காப் போய்ப் பாக்கத்தான் வேணும் "

என்று நினைத்தபடி திரும்ப,

"நான் சொன்ன புத்தகம் கொணந்தனீங்களே?" — என்று கேதீஸ்வரன் ரீச்சர் கேட்டார்.

இப்போது எந்தப் புத்தக சாலையிலும் பெற்றுக் கொள்ள முடியாத அருமையானதோர் இலக்கணப் புத்தகம்!

" ஓமோம். கொணந்தனான். பாத்திட்டு வாற கிழமை திருப்பித் தந்திடும். என்ன? "

சொல்லிக் கொண்டே, கைப்பையத் திறந்தாள்; அங்கே புத்தகம் இல்லை!

educer Demo

# 5

புனிதமானவள் நீ — பலருக்கும்
புதிரானவளும் நீ
சீதனப் புயலில் சிதைந்து
சாதி அலையில் நசிந்து
பாதகச் செயலில் கசங்கியும் — நீ
வாசஞ் செய்வதாலோ,
மலரும் மங்கையும்
ஒரே சாதி என்றார்.

—ஜனகமகள் சிவஞானம்—

PDF Reducer

" என்னப்பா, காலமை அவசரம் அவசரமாகப் புத்தகம் எடுத்து வைச்சனான்; காணேல்லை "

" ஹாண்ட் பாக் எங்கை வைச்சனீங்கள்? "

" ஸ்ராவ் றூமிலைதான் வைச்சனான்; இப்பதான் எடுத்துக் கொண்டு வாறன் "

பூரணி இவ்வாறு பதற்ற மடைந்திருக்கையில், அவளது வகுப்பின் ' மொனிற்றர் ' ரமேஷ் ஓடி வந்தான்;

"ரீச்சர் எங்கடை வகுப்பு றிஜிஸ்டரையும் காணேல்லை. றெக்கோட் புக்கையும் காணேல்லை."

"எங்கை வைச்சனீங்கள்?"

"வழக்கம் போலை ஒஃபீசிலை தான் வைச்சனாங்கள் ரீச்சர்"

அவளுடைய புத்தகம், அவளுடைய வகுப்பு இடாப்பு, அவளுடைய வகுப்புப் பாடப் பதிவுப் புத்தகம்...... ஏதோ ஒரு திட்டத்தின் அடிப்படையிலேயே இவை செய்யப்பட்டிருக்கலாம் என்று அவளுக்குத் தோன்றியது.

"ரோசாப்பூவின் கண்ணீர் துடைக்க நீளும் சூரியக் கதிர்கள் போல......"

"இதைவைச்சு ஒரு வசனம் அமைக்க வேணும்..." பக்கத்து வகுப்பில் கேதீஸ்வரன் ரீச்சர் தமிழ் கற்பிக்கிறார்.

"என்ரை பிரச்சினையைத் தீர்க்கிறதுக்கு வெளியிலை இருந்து ஆரும் வரவேணுமெண்டு நான் எதிர்பார்க்கப்பிடாது. என்ரை சொந்த அறிவுக்கதிர்களை நீட்டித்தான் என்ரை கண்ணீரை நான் துடைக்க வேணும்......"

"சுவரிலை இருக்கிற ஒரு பூச்சியைப் பிடிக்கப் பல்லி ஒண்டு துரத்திக்கொண்டு வந்தால், ஒரு விஞ்ஞான மாணவன் எண்ட முறையிலை நீங்கள் வெறும் பார்வையாளராய் இருக்க வேண்டியது தான். அதிலை ஒன்றுக்கு உதவி செய்யிறது இயற்கைச் சமநிலையைக் குழப்பிற செயல்"

மறுபக்கத்து வகுப்பில் இந்திரன் மாஸ்டர் விஞ்ஞான பாடத்தில் சாகியத் தொடர்புகள் கற்பிக்கிறார்.

" அப்ப ஒரு மனுசன் இன்னொரு மனுசனைக் கொல்ல வந்தாலும் நாங்கள் வெறும பார்வையாள ராய்த்தான இருக்க வேணுமோ? "

ஒரு மாணவன் இவ்வாறு கேட்பதும் பூரணிக்குக் கேட்கிறது. இக் கேள்விககு இந்திரன மாஸ்டர் என்ன பதில சொலகிறா என்பதை அறிய அவளது காது கள் கூர்மை அடைகின்றன.

" அதுககுப் இதுக்குமட கொஞ்சம் வித்தியாசமிருக்கு. பல்லி பூச்சியைப பிடிககிறது ஒரு இயறகை நிகழவு. மனிதன் மனிதனைப் பிடிககிறது அதைப் போன்ற இயற்கை நிகழ்ச்சி இல்லை என்றாலும் ஒரு இனத்துககிடையிலை பலவேறு காரணங்களுககாகவும் இனவகப் போட்டி நடக்கிறது இயற்கைதான். அந்த போட்டியிலை வல்லமை உள்ளது பிழைக்கிறதும், வல்லமை அற்றது அழியிறதும வழக்கம. இந்த வகையிலை பார்த்தால், நாங்கள் விஞ்ஞான மாணவர் என்ற முறையிலை வெறும பார்வையாளராயும இருக்கலாம "

PDF Reducer

அவள் வகுப்பில் ஒன்றுமே படிப்பிக்கவில்லை. மனம மிகவும் குழப்பம அடைந்திருந்தது.

" என்னைச் சுற்றியிருக்கிற உயிர்ப் பொருள்கள், சடப்பொருள்கள் எல்லாம் துலைஞ்சு போகுது. இதுவும இயற்கை என்று நான் வெறும பார்வையாள ராக இருப்பதா? அல்லது மனித இனத்துக்கு இடையிலை நடக்கிற இனவகப் போட்டியிலை வல்லமை கூடிய மனிதர்கள் என்னை வென்று விடுகிறார்களா? "

" என்ன? வகுப்பிலை பூரணி ரீச்சர் படிப்பிச்ச சத்தமே இண்டைக்குக் கேட்கேல்லை...... "

வகுப்பைவிட்டு வெளியேறிய போது இந்திரன் மாஸ்டர் கேட்டார்.

" நான் இண்டைக்கு ஒண்டும் படிப்பிக்கேல்லை..."

" ஏன்? "

பூரணி ஒரு நாளும் வகுப்பில் வெறும் பொழுது போக்குபவளல்ல என்பதால், அவளுடைய பதிலை நம்ப முடியாதவராய், விழிகள் விரிய வியப்புடன் கேட்டார் இந்திரன் மாஸ்டர்.

" சும்மா...... என்னவோ படிப்பிக்க மனம் வரேல்லை "

" ம்...... "

நெற்றியைச் சுருக்கிச் சிரித்தார் அவர்.

" ஏன் சிரிக்கிறியள்? "

" இல்லை. உங்கடை இதயத்தின்ரை கதவை உங்கள் ஒருத்தராலைதான் திறக்க முடியும். ஏனெண்டால் அது வெளிப் பக்கமாகப் பூட்டப்படேல்லை. உள்ளையிருந்து தாழ் போடப்பட்டிருக்கு "

educer Demo

என்று சுவாமி சின்மயானந்தர் சொன்னது நினைவுக்கு வந்தது. ' அதுதான் சிரிச்சன்...... '

அவளுக்குச் சமாந்தரமாக நடந்து கொண்டே அவர் இதைக் கூறினார். வரிசையாய் நிற்கும் மாமர இலைகளில் உரசும் காற்றின் இனிமை அவளையும் மெல்லத் தொட்டது.

" நான் தான் தத்துவம் கதைக்கிற தெண்டு சொல்லுவீங்கள் இப்ப நீங்கள் நல்லாத் தத்துவம் கதைக்கிறீங்கள்...... "

" ஒரு வேளை உங்கடை வகுப்புக்குப் பக்கத்து வகுப்பிலை நெடுகலும் படிப்பிக்கிறதாலை, அந்தத் தத்துவக் காற்று எனக்கும் வீசிட்டுது போலை இருக்கு... "

இப்போது பூரணி சிரித்தாள். கணந்தோறும் கலாபோதையில் சுழலும் அவள் விழிகளும் சிரித்தது போல இந்திரன் மாஸ்டருக்குத் தோன்றியது.

"எண்டாலும் கதவு இன்னும் திறக்கேல்லை"

"நீங்கள் என்ன சொல்லுறியள்?"

"உங்கடை மனக் குழப்பததுக்குக் காரணம் என்னவெண்டு நீங்கள் இன்னும் சொல்லேல்லை"

"சரி, நீங்கள் வற்புறுத்திக் கேட்கிறதாலை சொல்லுறன். என்னைச் சுற்றியிருந்த உயிர்ப் பொருள்களும், சடப்பொருள்களும் ஒவ்வொண்டாத் துலைஞ்சு போகுது......"

"எனக்கு ஒண்டும் விளங்கேல்லை"

"வீட்டிலை தம்பியைக் காணேல்லை; பள்ளிக் கூடத்திலை புத்தகங்களையும், ரிஜிஸ்டரையும், றெக் கோட் புக்கையும் காணேல்லை......"

"ஓ... திங்ஸ் ஆர் சீறியஸ்......"

இப்போது இந்திரன் மாஸ்டரின் முகத்தில் சிரிப்புக் கோடுகள் மறைந்து விட்டன.

"தம்பி போன இடம் ஓரளவு தெரியுது; மற்றதுகள் போன இடம் தெரியேல்லை......"

"அதை நீங்கள் கண்டு பிடிக்க வேணும். கொஞ்ச நாளைக்கு முந்தி இப்பிடித்தான் எனக்கு ஸ்கூலுக்கு வாற காகிதங்கள் எல்லாம் துலைஞ்சு போச்சுது. நான் எடுத்த ஆளைக் கண்டு பிடிச்சிட்டன்......"

"......ம்......"

"எடுத்தது ஒரு ஆசிரியர் தான். நம்பிறது உங்களுக்குக் கஷ்டமாய் இருக்கும்"

PDF Reducer

"பிறகு என்ன செய்தீங்கள்?"

"அந்த ஆசிரியருக்கு வாற காயிதங்களை நான் எடுத்தன்; இப்ப என்ரை காயிதங்கள் துலையிறேல்லை"

"எண்டாலும் நீங்கள் செய்தது சரியெண்டு' நான் சொல்ல மாட்டன்"

"உங்களைப் போலை லட்சியப் பொம்பிளையா எல்லாரும் இருக்கேலாது. முள்ளை முள்ளாலைதான் எடுக்க வேணும்......"

"எங்களாலை என்ன செய்ய முடியும் என்பதை வைச்சு நாங்கள் எங்களை எடை போடுறம். ஆனல் நாங்கள் என்ன செய்தம் என்பதை வைச்சுத்தான் மற்றவை எங்களை எடை போடினம். ஆனபடியால்..."

educer Demo

"சரி, தத்துவம் வந்திட்டுது..."

"ஓ... என்ரை தத்துவங்களைக் கேட்டுக் கேட்டு உங்களுக்கு அலுத்துப் போயிட்டுது போலை இருக்கு... ஐ ஆம் சொறி......"

"நோ...... இட் இஸ் நொற் தற். உங்கடை ஃபிலோசபி கேட்கிறதிலை எனக்கு நல்ல விருப்பம்...,

கதைத்துக் கொண்டே வந்தவர்கள் பாடசாலை முகப்பைத் தாண்டி ரோட்டிலும் சிறிது தூரம் வந்து விட்டார்கள்.

பின்னல் வந்து கொண்டிருந்த 'ஸ்கூட்டர்' ஒன்று திடீரென 'பிறேக்' பிடித்து, அவளுக்கருகில் உரசினல்போல் நின்றபோது, அவள் பயந்து விலகிப் பின்னர் நிமிர்ந்து பார்த்தாள்.

பாலசிங்கம் தான்!

அவள் மௌனமாகவே, சென்று ஸ்கூட்டரின் பின்புறத்தில் ஏறிக் கொண்டாள்.

"இப்பதான் அம்மா வீட்டாலை வாறீங்களா?"

அவள் வெகு இயல்பாகக் கேட்டாள்

"இப்ப ஏன் வந்தனீங்கள் எண்டு கேளன்" பாலசிங்கம் திரும்பும் திசை அவளுக்குப் புரிந்தது. அவள் பேசாமல் இருந்தாள்.

"உவன் தானே... இந்திரன் மாஸ்டர்?"

குரல் கடுமையாகவும் இறுக்கமாகவும் இருந்தது.

"மற்றவையை நீங்கள் மரியாதை இல்லாமல் கதைக்கிறது உங்களை நீங்களே மரியாதை இல்லாத வனுக்கிற முயற்சி......"

PDF Reducer

"எனக்குத் தெரியும்...... இந்திரன் மாஸ்டரை அவன் எண்டு சொன்னு உனக்குக் கோவம் வரு மெண்டு... ."

"இந்திரன் மாஸ்டரை மாத்திரமல்ல. எந்த விதமான பிழையும் செய்யாத யாரையும் அப்பிடிச் சொன்னு எனக்குக் கோபம் வருந்தான்"

"அவன் ஒரு பிழையும் செய்யேல்லை. நீயும் ஒரு பிழையும் செய்யேல்லை. பிழை விட்டது நான் தான். உன்னை வீட்டோடை இருத்தாத பிழை. உத்தியோ கத்துக்குப் போகவிட்ட பிழை ....."

பாலசிங்கத்தின் மனதைப் போலவே ஸ்கூட்டரும் ஆவேசமாய்ப் பறந்து கொண்டிருந்தது; அது எங்காவது விபத்தில் மாட்டிக்கொண்டு விடுமோ என்று பூரணி ஒரு கணம் பயந்தாள்.

அப்படி ஏதும் விபத்து ஏற்பட்டாலும் நல்லது என்று இதயம் மறுகணம் நினைத்தது. பாலசிங்கத்தோடு இணைந்துவிட்ட வாழ்க்கை என்ற விபத்திலிருந்து எப்படித் தப்பிக் கொள்வது என்று அடுத்த கணம் உள்ளம் சிந்தித்தது.

" கிர்......ர்......ர்.....ர்...... டும்!... "

" கிர்......ர்......ர்.....ர்...... டும்!... "

செவிப்பறை மென்சவ்வு உடைந்து விட்டதோ, இதயம் துடிக்காமல் நின்றுவிட்டதோ என எண்ண வைக்கும் பயங்கர வெடி ஒலி! முன்னர் ஒருபோதும் கேட்டிராத புதுவகைச் சத்தம்!

" ஐயோ...! ஹெலிக் கோப்டரிலை இருந்து சுடுறாங்கள்...... "

educer Demo

சொல்லிக் கொண்டே ஒழுங்கையின் வலக்கைத் திருப்பத்தில் இருவர் ஓடி மறைந்தனர்.

பாலசிங்கமும் வாகனத்தை வேகமாய்ச் செலுத்தி வந்து வீட்டு வாசலில் நிறுத்தினார். வீட்டினுள்ளே நுழைந்தபோது, ஆட்டுக்குட்டிகள் இரண்டும் முற்றத்தில் நின்று பூங்கன்றுகளைத் தின்று கொண்டிருந்தன. இறங்கியதும், இறங்காததுமாய்,

" சனியனுகள் "

என்று திட்டினார் பாலசிங்கம். அது ஆட்டுக்குட்டிகளுக்கு மாத்திரம் சொல்லப்பட்டதாகப் பூரணிக்குத் தோன்றவில்லை.

மேய்ந்து கொண்டிருந்த இரண்டு குட்டிகளில், " அல்லி " என்று பூரணியால் செல்லமாக அழைக்கப்படுகிற மறிக்குட்டியைக் காதைப் பிடித்துக்

'கொற கொற' வென்று இழுத்துப் போய்க் கட்டிப் போட்டார் அவர். 'ஆதவன்' எனப்படும் கிடாய்க்குட்டி தொடர்ந்து சுயாதீனமாய் நின்று மேய்ந்து கொண்டிருந்தது.

உடுப்பை மாற்றிக் கொண்டு வெளியே வந்த பூரணி ஆதவன் மட்டும் தனியே சுதந்திரமாய் உலா வருவதையும், அல்லி கட்டப்பட்டு நின்று அழுவதையும் கவனித்தாள். ஆதவனின் காதில் பிடித்து இழுத்துக்கொண்டு போய், அல்லிக்கு அருகில் அதனையும் கட்டிப் போட்டாள்.

அம்மா, அப்பா, தங்கச்சி ஆகியோர் தம்பியின் விஷயம் பற்றி என்ன சொன்னார்கள், எப்படித் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தினார்கள், எப்படித் தம்பியைப்பற்றி அறிய முயற்சி எடுக்கிறார்கள் என்றெல்லாம் அறியப் பூரணி ஆவலாய் இருந்தாள். ஆனால் அதைப்பற்றிக் கேட்கக் கூடிய சூழ்நிலையோ, மனநிலையோ உருவாகவில்லை.

PDF Reducer

'' ஹெலிகோப்டர் சூட்டிலை 'கோப்பிரட்'டிக்கை ஒரு மனுசன் செத்துப் போச்சாம் ''

யாரோ ஒழுங்கையில் கதைத்துக்கொண்டு சென்றனர். அதைப் பற்றிக் கூடக் கலந்துரையாடலோ, விமர்சனமோ இல்லாமல், அவரவர் தங்கள் தங்கள் வேலையைப் பார்த்துவிட்டுப் படுக்கும் அந்தகாரச் சூழ்நிலையே அன்றும் அந்த வீட்டில் நிலைகொண்டது.

வழக்கம் போலத் திருக்குறளைப் பாடமாக்கிவிட்டு, டயரியைப் புரட்டியபோது 'நாளைக்குக் கிளினிக்' என்பது திடீரென அவளுக்கு நினைவு வந்தது. அதை அவருக்கு நினைவு படுத்துவோமா வேண்டாமா என்று ஒரு கணம் சிந்தித்தாள். நான் அவரை விட்டுப் பிரியாத வரையில் — அவர் தன்னை அந்த ஒரு

வகையிலாவது மனைவியாக வைத்திருக்கும் வரையில்— அதை நினைவு படுத்துவது தன் கடமையே என நினைத்து முடிவுக்கு வந்தாள்.

"நாளைக்கு நீங்கள் ஆஸ்பத்திரிக்குப் போக வேணும்" — பாலசிங்கம் திரும்பி அவளது பக்கம் பார்த்துப் படுத்தார்.

"நான் ஆம்பிளை. நான் என்னத்துக்குப் போக வேணும்?"

"ஆம்பிளை எண்டா... ஒரு குறையும், ஒரு பல வீனமும் இல்லாதவன் எண்ட மாதிரித்தான் நீங்கள் எப்பவும் நினைக்கிறியள். ஆனால்......"

"சொல்லு......"

"எங்களுக்குப் பிள்ளையள் இல்லாமல் இருக்கிற துக்கு, என்னைப் பரிசோதிச்ச வரையிலை, என்னிலை ஒரு குறையும் தெரியேல்லை எண்டு டொக்டர் சொல் லிப் போட்டா; உங்களைத்தான் நாளைக்கு அனுப்பச் சொன்னவ......"

"....................."

பாலசிங்கத்தின் மௌனம் அவர் அதை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதை அவளுக்குத் தெளிவுபடுத்தியது. ஆனாலும் அவளுக்குக் குழந்தை வேண்டும் என்ற ஆவல் இருந்தது.

"அப்ப...... என்ன போறியளோ?"

"...... பாப்பம் ......"

"பாப்பம் எண்டா...... கட்டாயம் போக வேணும்......"

"நீ சொல்லி நான் போக மாட்டன்; எனக்கு விருப்பம் இருந்தால் போவன்... இப்பத்தை நிலையிலை யாழ்ப்பாணப் பக்கம் போறதும் பயம்......"

educer Demo

இதற்குமேல் கதையை வளர்க்க விரும்பாமல் அவள் கண்களை மூடிக் கொண்டாள்.

மறுநாள் காலையில் அவள் கல்லூரிக்குப் புறப்பட முன்னரே அவர் புறப்பட்டது அவளுக்கு ஒரு புறம் மகிழ்ச்சியாயும் மறுபுறம் ஆச்சரியமாயும் இருந்தது.

" ஆஸ்பத்திரிக்குத் தானே போறீங்கள்? "

" ம்...... ம்...... "

" டொக்டர் கேக்கிற கேள்விகளுக்கு உண்மையா, நேர்மையா மறுமொழி சொல்லுங்கோ...... அவ சொல்லுறதை வடிவாக் கேட்டுக் கொண்டு வாங்கோ..... "

" எக்செசிவ் இண்டர் கோஸ் தான் உங்களுக்குப் பிள்ளை இல்லாததுக்குப் பெரும்பாலும் காரணமாயிருக்கும். அல்லது உங்கடை எக்செசிவ் ரென்சன் ருகாவ் எ சைல்ட் " என்று தனக்கு டொக்டர் சொன்னது இப்போது நினைவுக்கு வந்தபடியால் இப்படி அவரிடம் சொன்னாள்.

PDF Reducer

" அதெல்லாம் எனக்குத் தெரியும். நீ உன்ரை அலுவலைப் பார் " அவர் போய் விட்டார்!

திருமணம் செய்து ஐந்து நீண்ட ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும், தனக்கு ஒரு குழந்தை பிறப்பதாய்க் கற்பனை செய்து, அந்தக் கற்பனை தந்த சுகத்தில் சிறிது நேரம் தன்னை மறந்திருந்த பூரணி, நேரம் எட்டு மணி அடித்ததைக் கேட்டு, அவசரமாய்ப் புறப்பட்டுக் கல்லூரிக்கு வந்தாள்.

" பூரணி ரீச்சர், குட்மோனிங்! நான் உங்கடை 'றெஜிஸ்டரை'யும் 'றெக்கோட் புக்'கையும் கண்டு பிடிச்சிட்டன் "

முகமெலாம் மர்ந்து சிரிக்க அவளை வரவேற்றார் இந்திரன் மாஸ்டர்.

" எங்கை இருந்தது? "

நம்ப முடியாமல் கேட்டாள் அவள்.

# 6

எத்தனை யுகங்கள் இவள்
இப்படிக் கிடப்பாள்......
தனியுடைமைத் தர்பார்கள்
தந்த சிலுவையில் !
educer Demo
ஆணதிகார ஆணவ ஆணிகளின்
கூர்முனைகள் தானா
மானிடத் தொடர்ச்சியின்
மேனிக்குத் தளை
தேவ குமாரனுக்குத்
திரும்பவும் உயிர் பிரிந்தது
யார் இவளின் மீட்பர் ?

— சாருமதி —

" நான் அண்டைக்குச் சொன்னனே ! என்ரை காயிதங்கள் எடுத்ததெண்டு.. ... அந்த ஆசிரியற்றை ' கப்பேட் 'டுக் குள்ளைதான் இருந்தது...... "

" யார் அது?...... "

" அவர்தான்... மூர்த்தி மாஸ்டர்......! "

உலகத்தில் எதையுமே, யாரையுமே நம்ப முடியாது என்பது போல விழித்துப் பார்த்தாள் பூரணி.

" உண்மையாகத் தானே? "

" அந்தாள் எவ்வளவு தொண்டுகள், சேவையள் எல்லாம் செய்யுது. இப்பிடியும் செய்யுமோ எண்டு உங்களாலை நம்ப முடியேல்லை. என்ன? "

" அவற்றை 'கப்பேட்' எப்பிடித் திறந்தனீங்கள்? "

" கள்ளத் திறப்புப் போட்டுத் திறந்தனான்... "

" ஐயோ நீங்கள் செய்யிறது சரியான பிழை... "

" என்ன பிழை? எனக்கு ஒரு ஐமிச்சம் இருந்தது. திறந்து பாத்தன். இருந்தபடியால் எடுத்து வைச்சிருக்கிறன். இல்லாட்டி, ஒண்டும் நடவாத மாதிரி அப்பிடியே திருப்பிப் பூட்டியிருப்பன்...... "

" அண்டைக்கு— இரண்டு கிழமைக்கு முந்தி சந்PDF Reducerகச்சந்திரன் மாஸ்டரின்ரை காசு மெல்லே களவு போனது...? அப்ப அதுவும்...? "

" அதைப்பற்றி எனக்குத் தெரியாது. தெரியாத விஷயங்களை நாங்கள் ஊகத்திலை ஒரு நாளும் கதைக்கப்பிடாது ..... "

இந்திரன் மாஸ்டரின் நிதானத்தை மனதிற்குள் வியந்தபடியே, அவர் கொடுத்த 'றெஜிஸ்டரை'யும், 'றெக்கோட் புக்'கையும் அவள் வாங்கிக் கொண்டாள். இலக்கணப் புத்தகம் அங்கு இருக்கவில்லையா என்று கேட்க நினைத்தாள். அதைக் கேட்கப் போய், இந்திரன் மாஸ்டர் மீண்டும் ஒருமுறை அந்த அலுமாரியைத் திறக்க—— ஒரு வேளை அதை வேறு ஆசிரியர்கள் கவனிக்க— அது பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கும் என உணர்ந்து அதைப்பற்றிக் கேட்காமலே நின்றாள். இதைத்தான் எடுத்துக் கொண்டது பற்றி; " பேச்சு மூச்சு " இல்லாமல் இருப்பதுதான் நல்லது என்று நினைத்தாள்.

" இப்பிடி ஒண்டு துலேஞ்சது பற்றியோ, இதை நீங்கள் எடுத்ததைப் பற்றியோ ஒருத்தருக்கும் சொல்லாதேங்கோ! கதையிலே பயனில்லே. எதிரியை விட நீங்கள் ஐ. கியூ கூடின ஆள் எண்டு தெரிஞ்ச உடனே, எதிரி நண்பனுயிடுவான்...... "

இந்திரன் மாஸ்டர் சிரித்துக்கொண்டே கூறினுர்.

" இதிலே வேலே செய்தது உங்கடை ஐ. கியூ எல்லோ. என்னுடையதில்லேயே? "

இப்போது பூரணியும் சிரித்தாள்

" அது சரி, உங்கடை தம்பியின்ரை விசயம் என்ன மாதிரி? "

" அவனிட்டையிருந்து ஒரு தகவலும் இல்லே. தகவல் வரும் எண்டு நான் எதிர்பார்க்கவும் இல்லே. ஆனுல்... இனி, இஞ்சை என்னென்ன கரைச்சல் வருமோ எண்டுதான் பயமாயிருக்கு...... "

educer Demo

" சீ... அப்பிடி ஒண்டும் நடக்காது. யாரும் தகவல் குடுத்தாச் சரி, இல்லாட்டி அவங்கள் கண்டுபிடிக்க மாட்டாங்கள். நீங்கள் கலவரப்படாமல் இருங்கோ...... "

இந்திரன் மாஸ்டரின் வார்த்தைகள் புண்பட்டுப் போய்க்கிடந்த அவளது மனதிற்குப் பெரும் ஆறுதலாய் இருந்தன.

" தாங்க்யூ வெரிமச்... " என்றுள் எல்லாவற்றிற்கும் சேர்த்து !

" இது சரியான போமாலிற்றி! நீங்கள் எனக்கு உதவி செய்யிற சந்தர்ப்பங்கள் நிறைய வரலாம். நான் உங்களுக்குக் ' கெல்ப் ' பண்ண வேண்டியும் வரலாம்; இதுக்கெல்லாம் ' தாங்க்ஸ் ' சொல்லிறது ' நச்சுரல் ' ஆ இல்லே...... "

"சரி, சரி... இனிமேல் சொல்ல மாட்டன்..."

பூரணி தன் வகுப்பை நோக்கி நடந்தாள்.

"மூர்த்தி மாஸ்டர் ஏன் இப்படிச் செய்ய வேண்டும்?"

என்ற ஆராய்ச்சியில் அவள் மனம் தீவிரமாய் ஈடுபட்டிருந்தது. இரண்டு வாரத்திற்கு முன் களவு போன கனகச்சந்திரன் மாஸ்டரின் சம்பளம் - மூர்த்தி மாஸ்டரின் காணியில் உருவாகும் புதிய வீடு - இரண்டையும் சேர்த்து மனம் முடிச்சுப் போட்டுப் பார்ப்பதையும் எவ்வளவோ முயன்றும் தடுக்கமுடியவில்லை.

காலை நேரத்தின் மெல்லிய பனிக்காற்று அவள் உடலை வருடிச் சென்றது.

"இந்தா பூரணி, நாடகத்திலை நீ நடிக்க வேண்டிய பங்கு......"

மறுபக்கத்தால் வந்துகொண்டிருந்த கமலா ரீச்சர் சில கடதாசித் தாள்களைப் பூரணியிடம் நீட்டினாள்.

கல்லூரியில் நடைபெற இருக்கும் 'வெள்ளி விழா' தொடர்பாக ஆசிரியர்கள் ஒரு நாடகம் போடுவதெனத் தீர்மானித்ததும், அதில் நடிப்பதற்குத் தான் ஒரு வாரத்திற்கு முன்னர் ஒப்புக் கொண்டதும் பூரணியின் நினைவில் குமிழியிட்டன.

"முழு நாடகத்தையும் தாவன்... வாசிச்சிட்டுத் தாறன்......"

கமலா ரீச்சரிடம் நாடகப் பிரதியை வாங்கிக் கொண்டாள்.

நாடகம் நல்லதுதான். தனது மகளிடம் மிகுந்த அன்பு செலுத்தும் ஒரு அப்பா பாத்திரத்தில் இந்தி

ரன் மாஸ்டர்! அவரது அன்புக்குரிய அந்த மகளாகப் பூரணி! பூரணியின் அம்மாவாகக் கேதீஸ்வரன் ரீச்சர்...! இன்னும் சில பாத்திரங்கள்......

" அம்மா... ஜீவகி! என்னவோ தெரியேல்லை. எந்த ஒரு தகப்பனும் தன்னுடைய பிள்ளையிலை வைக்க முடியாத அளவு அன்பை நான் உன்னிலை வைச்சிட்டன்...... "

" அதுக்கென்னப்பா... நீங்கள் கவலைப்படாமல் படுங்கோ.....! "

" பிள்ளை... நீ என்னை விட்டிட்டுப் போக மாட்டியோ......? "

" இல்லை; நான் ஒரு நாளும் உங்களை விட்டிட்டுப் போகமாட்டன்...... "

" கலியாணம் செய்த பிறகு.... ? "

" அதைப்பற்றி எல்லாம் இப்ப என்னத்துக்கு? நீங்கள் கவலைப்படாமல் படுங்கோ அப்பா...... "

நாடக வசனங்களை ஒரு முறை வாசித்த உடனேயே, அவை அவள் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்து கொள்கின்றன.

" துலைஞ்சுபோன இலக்கணப் புத்தகம் எடுத்திட்டியே, பூரணி? "

மதிய உணவுப் பொதியைப் பிரித்தபடி கேதீஸ்வரன் ரீச்சர் கேட்டாள்.

" எடுக்கேல்லை. ஆனல் எடுத்தாளை ஓரளவு தெரிஞ்சிட்டுது? "

" ஆர்? "

" மூர்த்தி மாஸ்டர்! "

" அப்பிடியே? அந்தாள் ஏன் இதுகளை எடுத்தது?"

" இது மாத்திரமில்லை; என்ரை றெஜிஸ்டர், றெக்கோட்புக்...... "

" நீதானே எல்லாத்துக்கும் உளவியல் ரீதியாக் காரணம் சொல்லுவாய். இதுக்கு என்ன சொல்லுறாய்? "

" நானும் யோசிச்சுப் பாத்தன்: அந்தாளுக்குத் தன்னெடுப்பூக்கம் கொஞ்சம் அதிகமாயே தொழிற்படுது. தான் எதிலையும் ஆதிக்கம் செலுத்தவேணும் எண்டு விரும்புது. அதுக்கு இடைஞ்சலா இன்னொருத்தருக்குச் சில பதவியள் போயிட்டால், அல்லது அவைக்கு ஏதோ ஒரு வகையிலை புகழ் வந்திட்டால், அவைக்குக் குழிபறிக்க வேணும் எண்டு ஆசைப்படுது... அதோடை... திரட்டூக்கம் நிறைய இருக்குது. ஒருத்தரிட்டையும் இல்லாத பொருள்கள், புத்தகங்கள் தன்னட்டை இருக்க வேணும் எண்ட விருப்பம்...... ஆரெண்டாலும் எந்தப் பொருளையும் தன்னைக் கேட்டுத்தான் பெற்றுக்கொள்ள வேணும் எண்ட ஆசை... இதுகள் அதிகப்படுறபோது, களவெடுக்கிறது பிழை எண்டும் தெரியேல்லை...... "

பூரணியின் நீண்ட பிரசங்கத்தை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தாள் கேதீஸ்வரன் ரீச்சர். பின்னர்,

" உன்ரை விளக்கம் சரியோ, பிழையோ எண்டு எனக்குத் தெரியேல்லை; ஆனல் இந்த விஷயத்தைப் பற்றி நீ நல்லா யோசிச்சிருக்கிறுய்... " என்றுள்.

சிறிது நேரச் சிந்தனையின்பின் பூரணி மீண்டும் சொன்னுள்.

'' இந்த மூர்த்தி மாஸ்டர் பலபேரைப் பற்றியும் பல தவருன கதையளையும் கதைச்சுக் கொண்டு திரியுது. உன்னைப் பற்றியுந்தான் ...... ''

'' என்ன? என்னைப் பற்றியோ? என்னைப் பற்றி என்ன சொல்ருர்? பிடிச்சனெண்டால் பல்லுக் கொட்டி அனுப்புவன் ...... ''

என்று கேதீஸ்வரன் ரீச்சர் பாய, பூரணி நிதானித்தாள்.

'' இஞ்சைவா, அவசரப்படாதை ..., உன்னைப் பற்றி முழுதும் தவருன சில விஷயங்களை இந்தாள் போய் அதிபரிட்டைச் சொல்லியிருக்கெண்டு நான் நிச்சயமா அறியிறன். ஆனல் நீ கோபப் படவேணும் எண்டதுக்காண்டி நான் இதைச் சொல்லேல்லை. உன்ரை எதிரியைப் பற்றியும், எதிரியின்ரை விமர்சனத்தைப் பற்றியும் 'டேல் கார்னெகி' சொல்லியிருக்கிற உளவியல் தத்துவங்களை இந்தக் கொப்பியிலை எழுதி வைச்சிருக்கிறன். படிச்சுப்பார்!

என்று கூறி தனது கொப்பியின் பக்கமொன்றைப் பிரித்து அவளிடம் நீட்டினுள் பூரணி.

'' தடிகளும் கல்லுகளும் உன் எலும்புகளை முறிக்கலாம். ஆனல் சொற்கள் உன்னைப் புண்படுத்த முடியாதே? ''

' ஒருவரும் உங்களைக் குழப்பவோ வேதனைப்படுத்தவோ முடியாது — நீங்கள் இடம் விட்டால் ஒழிய!'

'கோபிக்கத் தெரியாதவன் முட்டாள்! ஆனல் கோபிக்கா திருப்பவன் புத்திசாலி!'

'உனக்குப் பிடிக்காதவர்களைப் பற்றி நினைத்து நீ ஏன் உனது நேரத்தை விரயம் செய்து கொள்கிருய்?'

' எங்கள் எதிரிகளை விரும்பும் அளவிற்கு நாங்கள் ஞானிகளாய் இல்லாதிருக்கலாம். ஆனல் எங்கள் சொந்த உடல், உள, ஆரோக்கியம் கருதி, எங்கள் நிம்மதியும் சந்தோஷமும் கருதி நாங்கள் அவர்களை மன்னிப்போம். மறப்போம்.'

' எங்கள் எதிரிகளை வெறுப்பதற்குப் பதிலாக அவர்களுக்காக அநுதாபப்படுவோம். இறைவன் எங்களை அவர்களைப்போல் படைக்கவில்லை என்பதற்காய் இறைவனுக்கு நன்றி சொல்வோம். அவர்களை விமர்சிப்பதற்கு அல்லது அவர்களைப் பழி வாங்குவதற்குப் பதிலாய் அவர்களுக்காய் அநுதாபப்படுவோம். அவர்களை விளங்கிக் கொள்வோம். அவர்களுக்கு உதவுவோம். அவர்களை மன்னிப்போம். அவர்களுக்காய் வேண்டுதல் செய்வோம்.'

ஒன்றுக்கு இரண்டு முறை இதை ஆறுதலாய்ப் படித்து முடித்த கேதீஸ்வரன் ரீச்சர்,

" அப்ப, இவ்வளவு செய்தும் உனக்கு அந்தாளிலை கோபம் வரேல்லையோ? " என்ருள்.

" வந்ததுதான்; ஆனல் கட்டுப்படுத்திப் போட்டன்; நீயும் அப்பிடித்தான் முதிர்ச்சி அடையவேணும்; இல்லாட்டி எங்களை ஆசிரியர் எண்டு நாங்களே சொல்லேலாது...... "

" என்னவோ... உன்ரை தத்துவத்தின்ரை உயரம் பெரிசடி... பெல் அடிச்சிட்டுது. எழும்பு... தேத்தண்ணி குடிக்கப்போவம்... இன்ரேவல் இப்ப...... "

" இண்டைக்குக் கன்ரீனுக்குப் போகவேண்டாம். நான் ஃபிளாஸ்க்கிலை ரீ கொணந்தனன்... லேடீஸ் றூமுக்குப் போவம்...... "

இருவரும் ' லேடீஸ் றூமை ' அடைந்தனர்.

அங்கு வழமையாகத் தேநீர் அருந்துகிற ஐந்து ஆசிரியைகளும் இவர்கள் இருவரையும் கண்டவுடன் மெதுவாக எழுந்து, தேநீர் குடித்த குறை குடியாத குறையாக விலகிக் கொண்டனர். அவர்கள் வெளியேறியபின் பூரணி கேட்டாள்.

"நாங்கள் வழக்கமா 'லேடீஸ் றாமுக்கு' வாறேல்லைதான். ஆனால் இண்டைக்கு வந்த உடனை இவை ஏன் இவ்வளவு அவசரமாய் இடத்தைக் காலி பண்ணினம்......?"

"நாங்கள் ஏதும் சாதி... கீதி குறைவோ...?"

கேதீஸ்வரன் ரீச்சர் நகைச்சுவையாய் பதில் கேள்வி கேட்கப் பூரணி சிந்தித்தபடி சொன்னாள்.

"இல்லை. இதிலை ஏதோ விஷயம் இருக்கு. என்னண்டு கண்டு பிடிக்க வேணும்......"

"இந்திரன் மாஸ்டர், செல்லையா ரீச்சர் போலை சாதி குறைஞ்ச ஆக்களோடை எல்லாம் நீ சமபந்தி போசனம் செய்யிறனி...... நான் உன்னோடை கன்ரீனுக்கு ஒண்டா வாறனன்...... ஆனபடியால் எங்கள் இரண்டு பேரையும் கழிச்சு விட்டிட்டினம் போலத்தான் இருக்கு..."

"சீ... நான் அப்பிடி நினைக்கேல்லை...... அந்தளவுக்கு எங்கடை ரீச்சர்ஸ் பிற்போக்கானவை இல்லை. ஆனால் இது இன்னொரு சாதிப் பிரச்சினையாயிருக்கலாம்... நீ யோசிச்சுப்பார்... இப்ப உதிலை எழும்பிப் போனவை எல்லாம் டிப்ளோமா முடிச்ச பட்டதாரியள்... நாங்கள் குறைவுதானே? ஒப்புக் கொள்ளிறியா?"

சிரித்துக் கொண்டிருந்த கேதீஸ்வரன் ரீச்சரின் முகத்திலும் இப்போது சிந்தனைக் கோடுகள்.

"இப்பிடி ஒரு சாதிப் பிரிவினையும் இருக்கே? நான் இதை இவ்வளவு நாளும் உணரேல்லை......!"

மாலையில் அவள் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது, வழியில் காஞ்சி சந்தித்தான்.

"நாளைக்காக்கும் எங்கடை கோயில்லை பேச்சு... மறந்து கிறந்து போடாதேங்கோ...."

"இல்லை; நான் மறக்கமாட்டன். எத்தினை மணிக்கு வரோணும்?"

"ஏழு மணி போலை, செக்கல் நேரமா வாருங்கோவன்...... எங்கடை தம்பி இந்திரனும் வாறண்டது......"

"ஏன் நீங்கள் இந்திரன் மாஸ்டரைக் கேட்டிருக்கலாமே பேசிறதுக்கு... அவர் நல்லாப் பேசுவார்..."

"அவன் எங்கடை ஆள்; எத்தினையோ தரம் பேசிட்டான். நீங்கள் வந்து பேசிறது எங்களுக்கும் ஒரு மதிப்பாக்கும்"

"சரி... வேறை என்ன?"

"ஆ... இந்த இவங்கள் உங்கடை வீட்டுப் பக்கமாப் போறுங்களாம். எல்லா வீடுகளும் தேடிறுங்களாம். போய்ப் பாக்க...."

அவள் எட்டி அடி வைத்து நடந்தாள்.

காஞ்சி சொன்னது போலவே சீருடை அணிந்தவர்கள் பலர் வீட்டிலே நின்றார்கள். அவளுக்கு ஒரு கணம் குருதியே உறைந்து விட்டதுபோல் இருந்தது. சமாளித்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

PDF Reducer

நீட்டிய துப்பாக்கிகளுடன் வீட்டிற்குள் புகுந்து சோதனை செய்தவர்கள், வெளியே வெறுங்கையோடு வந்து, பாலசிங்கத்தின் அடையாள அட்டையைக் கேட்டனர். அதை வாங்கிப் பார்த்துவிட்டு அப்பால் அகன்று போயினர். அவர்கள் அடுத்த வீட்டினுள் செல்வதைப் பார்த்தபோது, தங்கள் வீட்டை மட்டும் குறி வைத்து அவர்கள் வரவில்லை என்பதைப் பூரணி புரிந்து கொண்டாள்.

"அவங்கள் எல்லா வீடும் பாக்கிறாங்கள். நீ போய் உன்ரை அலுவலைப்பார்" என்றார் பாலசிங்கம்

அவரைக் கடந்து உள்ளே செல்லும்போது,

"ஆஸ்பத்திரிலை என்ன சொன்னவை?" என்று கேட்டாள் பூரணி.

educer Demo

"என்னிலையும் ஒரு குறைபாடும் இல்லையாம்: மேலதிக ஆலோசனைக்கு இரண்டு பேரையும் வாற சனிக்கிழமை வரட்டாம்......"

கூறிக்கொண்டே தோட்டப்பக்கம் போனார் பால சிங்கம். அவளது நம்பிக்கை மரத்தில் மேலும் ஒரு புதிய தளிர் உருவானது. அந்த நம்பிக்கை தந்த மகிழ்வில் அன்று நேரத்துடனேயே உறங்கிப் போனாள் அவள்.

ஒரு மேசைக்கு ஒரு பக்கத்தில் இந்திரன் மாஸ்டரும் மறுபக்கத்தில் பூரணியும் நின்றுகொண்டிருக்கிறார்கள். மேசைக்குக் கீழே குனிந்து அதன் கால்களுக்கிடையில் தன் கைகளை நீட்டி, அவற்றைப் பற்றிக் கொள்ளுமாறு இந்திரன் மாஸ்டர் கேட்கிறார். அவள் சிந்தித்தவாறே ஒன்றும் பேசாது நிற்கிறாள். பின்னர் பார்த்தால், மேடையில் நாடகம் நடிக்கப்படுகிறது. அவள் தனது வசனங்களைப் பேசுகிறாள்.

" இல்லை; நான் ஒரு நாளும் உங்களை விட்டிட்டுப் போக மாட்டன் "

சத்தம் போதாது என்றும், பலமாகச் சொல்லும் படியும் நாடகத்தை நெறிப்படுத்தும் தாசன் மாஸ்டர் சொல்லுகிறார். அவள் உரத்து, இன்னும் உரத்து.

" இல்லை. நான் ஒரு நாளும் உங்களை விட்டிட்டுப் போக மாட்டன் "

" இல்லை. நான் ஒரு நாளும் உங்களை விட்டிட்டுப் போக மாட்டன் " என்று சொல்லுகிறாள்;

பாலசிங்கம் அவளது முகத்திலே கிள்ளி அவளை எழுப்பினார்.

" என்ன? ஒரு நாளும் இல்லாமல் இண்டைக்குக் கனவிலை சத்தம் போடுறாய்? "

அவள் கண்களைக் கசக்கிக் கொண்டு விழித்துப் பார்த்தாள்.

" என்ன கனவு கண்டனி? "

" ஏதோ, நாடகம் நடிக்கிறது போலை...... "

" நான் ஒரு நாளும் உங்களை 'விட்டுட்டுப் போக மாட்டன் எண்டு சொன்னாய். ஆரை? "

" நாடகத்திலை வாற என்ரை அப்பாவை...... "

" உது பொய்; நீ ஆரையோ மனதிலை வைச்சிருக்கிறாய். அதுதான் கனவிலையும் அவனோடை கதைக்கிறாய். ஆர் அது? இந்திரன் தானே? வேறை ஆருமோ?"

" இல்லை. அப்பிடி ஒண்டும் இல்லை. நான் சொன்னது உண்மை; நீங்கள் நம்பினால் நம்புங்கோ. இல்லாட்டி விடுங்கோ; இந்த நடுச் சாமத்திலை எழும்பியிருந்து உங்களோடை சண்டை பிடிச்சுக் கொண்டிருக்க என்னாலை ஏலாது...... "

அவள் மறுபக்கம் திரும்பிப் படுத்தாள்.

அடுத்த நாள் மாலை காஞ்சியின் கோயிலில் என்ன பேசலாம் என்பதே அடுத்த நாள் பகல் பொழுது முழுவதும் அவளது சிந்தனையாக இருந்தது.

'சமய வாழ்வில் பெண்கள்' என்பது பற்றிப் பேசலாம் என்று நினைத்தாள். தனது குடும்ப அங்கத்தவர்களில் ஒருவர், கணவனாக இருந்தாலும் சரி அல்லது சகோதரனாக இருந்தாலும் சரி, தவறான பாதையிலே செல்லும்போது, அவர்களைச் சரியான பாதைக்கு மீட்டெடுக்கும் ஆற்றல் உள்ள வீரப் பெண்ணாகக் குடும்பத்துப் பெண் விளங்க வேண்டு மென்ற கருத்தை ஆணித்தரமாகச் சொல்ல வேண்டுமென்று நினைத்தாள். இந்த விடயத்திற்கு அனுசரணையாகச் சமயத்திலிருந்து, சேக்கிழார் காட்டிய மங்கையர்க்கரசியாரையும், திலகவதியாரையும், திருநீலகண்டர் மனைவியையும் கூறவேண்டும் என்று சிந்தித்தாள்.

'எம்மைத் தீண்டுவீராகில் திருநீல கண்டம்' என்ற ஒரே வார்த்தையால் கணவனைத் திசைதிருப்பி நெறிப்படுத்திய திருநீலகண்டர் மனைவியை மனதுக்குள்ளே பாராட்டி ரசித்தாள்.

இவ்வளவு சிந்தித்து முன் ஆயத்தம் செய்தபோதும், அடுத்த நாள் அவளது பேச்சு எதிர்பார்த்த அளவு சிறப்பாக அமையவில்லை. அதன் காரணத்தை எண்ணியபோது...... அவளுக்கு இதயம் நொந்து வலித்தது.

# 7

நறுமணம் கமழும்
வாழ்க்கைப் பூங்காவில்
தேன்சுவை பருகி
வாழ்ந்திட
எண்ணியவளுக்குச்
சுவைத்த
பின்னர்தான் தெரிந்தது
வாழ்க்கை
இதயத்தில் விஷமேற்றும்
அலரிப்பூ......

— ஒலுவில் அமுதன் —

கல்லூரியில் இருந்து வந்து குளித்துவிட்டு அவள் உடை மாற்றிக் கொண்டாள். இரவுச் சமையலை வேகமாக முடிக்கவேண்டுமே என்ற அவதியில் 'உப்புமா' செய்தாள். பாலசிங்கம் முற்றத்தில் இருந்து 'பேப்பர்' வாசித்துக் கொண்டும், காலாட்டிக் கொண்டும்......

"என்ன இண்டைக்குத் தேத்தண்ணியைக் காணேல்லை...... "

முற்றத்தில் தெறித்து வந்த வார்த்தைகள் குசினியை எட்டின.

" நான் இண்டைக்குக் காலமையிலையிருந்து பள்ளிக்கூடத்திலே வேலைசெய்து களைச்சுப்போய் வந்திருக்கிறன். என்ரை உழைப்புக்குப் பெறுமதி இல்லையா? என்னை யார் தேத்தண்ணி வேணுமோவெண்டு கேக்கினம்? "

மன மேடையில்தான் அவளது வாதங்கள் எல்லாம்!

' ஹீற்றிங் கொயிலை ' நீரில் அமிழ்த்தி, 'சுவிச்' சைப் போட்டாள்.

நீர் சிறிது நேரத்தில் குமிழிவிட்டுக் கொதிக்கத் தொடங்கியது. அவளது இதயமுந்தான்!

" சீதையை அவளின்ரை விருப்பத்துக்கு மாருத் தூக்கிக்கொண்டு போனுன் இராவணன். ஆண்கள் நிறைந்திருந்த அரசவையிலே திரௌபதியைத் துகிலுரிய முயன்ருன் துச்சாதனன். அவளைத்தன் தொடைமீது இருத்தும்படி கேட்டான் துரியோதனன்...... புராண காலத்திலையிருந்தே இந்த அவலம் நடந்து வருது...... இன்னுந்தான் ஒரு முடிவு வருதில்லை......"

வெளியே கோடைக் காற்றில் மரங்கள் சிலிர்த்தன. மோனச் சிந்தனை தொடர்ந்தது.

" இவர் இண்டைக்குக் காலமையிலையிருந்து ஒரு வேலையுமில்லாமல் ஓய்வெடுக்கிருர். எனக்குக் கொஞ்சம் உதவி செய்யப்பிடாதோ? " ஆண் அநுபவிக்கப் பிறந்தவன்; பெண் பெருமூச்சுக்களை வீசப் பிறந்தவள் " எண்டு ஏதும் சட்டம் இருக்கா? "

இதை அவள் வெளியே சொல்ல முடியாது. வேலைக் காரரைக் கொணர்வது பாலசிங்கத்திற்குச் ' சிம்பிள் அலுவல் '. அவரது வியாபாரத்தைக் கவ

னிக்க ஐந்தாறு பேர் இருக்கிறார்கள். வீட்டிலே வேலை கஷ்டம் என்று அவள் 'புறுபுறுத்'தால் வீட்டிற்கும் வேலையாள் வரும். ஆனால் பூரணிக்கு அது இஷ்டமில்லை. தமது குடும்ப வேலையைத் தானும் கணவரும் பங்கு போடலாம். இன்னொரு மனிதன் அதைச் செய்ய தாங்கள் காலாட்டிக் கொண்டு இருக்கக் கூடாது என்பது அவள் கொள்கை! இந்தக் கொள்கை வேறுபாட்டினால், அவளே எல்லாவற்றையும் மூட்டையாகச் சுமக்க வேண்டியிருக்கிறது!

சமையல் வேலைகளை முடித்துவிட்டுத் தேநீர் தயாரித்துப் பாலசிங்கத்திற்கு முன்னால் கொண்டுசென்று வைத்தபோது, சூரியன் மறைந்துவிட்டது போன்றதொரு உணர்வு அவளுக்குள் ஏற்பட்டது. ஓடிச்சென்று நேரத்தைப் பார்த்தாள்!

நேரம் 6-20!

நீண்ட நேரமாய்த் தொடர்ந்து வந்த மௌனத்தை மௌனமாக்கிவிட்டு, அவள் மெதுவாய்க் கேட்டாள்.

"நல்லா நேரம் போயிட்டுது. நான் ஏழு மணிக்குப் பேச்சுக்குப் போகவேணும்... என்னை ஒருக்காக் கொண்டுபோய் விடுறீங்களா?"

முற்றத்தில் பேப்பரில் மூழ்கிப்போயிருந்த பாலசிங்கம் விசுக்கெனத் தலையை விசிறித் திரும்பினார். ஏளனம் கலந்த புன்னகை ஒன்று முகத்தில் நர்த்தனமிட்டது. பூரணிக்கோ காஞ்சியின் கள்ளம் கபடமற்ற புன்னகையே மனதில் வந்தது.

"கடவுளே! காஞ்சி என்னைப்பற்றி எவ்வளவு குறைவா நினைக்கப் போறார்?"

"உனக்கு நான் அண்டைக்கே சொன்னனான். கண்ட சாதியளின்ரை கோயிலுக்குப் போறதுக்கு என்னைக் கேக்கப்பிடாது எண்டு......"

"நான் வாறன் எண்டு சொல்லிப் போட்டன்..."

"என்னைக் கேட்டே சொன்னனி?"

"உங்கடை பெண்சாதி சொன்ன சொல்லைக் காப்பாற்றேல்லை எண்டால், அதாலை வாற 'பரிசு கேடு' உங்களுக்குந் தானே!"

"உந்தக் களிசறைக் கோயிலுக்கு நீ போகாமல் விடுறதாலை ஒரு மானக்கேடும் இல்லை. போனாத்தான் மரியாதைக்கேடு......"

மாதவிடாய்ப் பெண்ணின் சோர்வு முகம்போல மேற்கே அந்திவானம் தென்பட்டது. பூரணியின் மனதில் சூனியமயமான வேதனை!

"இதுக்கு மேலையும் இவரோடை பறைஞ்சு கொண்டு நிக்கிறதிலை பிரயோசனமில்லை"

கொடியில் காய்ந்து கொண்டிருந்த 'இந்தியன் வோயில்' சேலையை எடுத்து உடுத்திக்கொண்டு அவள் புறப்பட்டபோது நேரம் ஆறரைக்குமேல் ஆகியிருந்தது.

அவசரத்தில் திணறிக் கொண்டிருந்த தெருவில் அவளும் இறங்கி வேகமாய் நடந்தாள்: விபரிக்க இயலாத ஒரு உணர்வுக் கலவை மனதில் நிரம்பி, பேச வேண்டிய சிந்தனைகளைக் குழப்பிக் கொண்டிருந்தது. ஓடி ஓடி நடந்தாள். வேகமாக வீசிய காற்றில் வெறி பிடித்த தலைகளாய் மரங்கள் அசைந்து கொண்டிருந்தன.

"என்ன, பேச்சாளருக்குக் 'கார்' இல்லையா?" பின்னாலிருந்து ஒரு குரல்!

திரும்பிப் பார்த்தாள் !

இந்திரன் மாஸ்டர் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்.

" நான் பேச வாறதெண்டா, எனக்குக் கார் அனுப்பவேணும் எண்டு நான் ஒரு நாளும் நிபந்தனை போடுறேல்லை...... "

" அது நல்ல பண்புதான். எண்டாலும் நீங்கள் இந்த நேரத்திலை இப்பிடித் தனிய நடந்து போறதைப் பாக்க அந்தரமாயிருக்குது...... "

மின்னல் ஒளியில் சில மேகக் கருமைகள் பளிச்சிட்டன.

" ஒரு ஆண் பேச்சாளர் இதேபோலை நடந்து போனால், இப்பிடிச் சொல்லுவியளா? "

" இல்லை "

" அப்ப...... ஏன் எங்களுக்கு மட்டும் இந்தப் பரிதாபக் குரல்? "

PDF Reducer

" ஒரு ஆணை ஒருத்தரும் ஒண்டும் செய்யேலாது. உங்களை வழியிலை யாரும் எதுவும் செய்யலாம்! "

" ஒரு பெண் ஒரு வீதியிலை தனியப் போகமுடியாமல் இருந்தால் அது இந்தச் சமுதாயத்தின்ரை பிழை. என்னுடைய பிழை இல்லை. சமுதாயத்தைத் திருத்தப் பாருங்கோ...... "

" உங்களோடை கதைச்சு ஒரு நாளும் வெல்ல முடியாது...... "

இப்போது இருவரும் கோயிலை அண்மித்து விட்டனர்.

திடீரென எங்கிருந்தோ ஏழெட்டுத் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன !

'' அது...... 'பிரக்கிஸ் வெடி' யாயிருக்கும். பயப்பிடாதேங்கோ!'' இந்திரன் மாஸ்டர் ஆறுதல் கூறினர்.

நிம்மதியற்ற நிகழ்காலமும், நிச்சயமற்ற எதிர் காலமும் பரிச்சயமாகிப்போன யாழ்ப்பாணத்து மண்!

பூரணி அவசரமாக நேரத்தைப் பார்த்தாள்!

'6-55'

'' அப்பாடா! ஒரு மாதிரிச் சொன்ன நேரத்துக்கு வந்திட்டன் ''

அன்று மிக இயல்பாகப் பேச அவள் மிக முனைந்து பார்த்தாள்! ஆயினும் நெஞ்சில் இருந்த குழப்பமும் வேதனையும் அவளது பேச்சின் தரத்தை அன்று வெகு வாகப் பாதித்திருந்தன.

educer Demo

'' தங்கடை பேச்சு மிச்சம் திறமாய் இருந்து தாக்கும்...... ''

காஞ்சிக்கு மனம் நிறைந்த திருப்தி.

அவள் மனதில் அடுக்கிக் கொண்டு வந்திருந்த சிறு தலைப்புகள் - போயின்ற்ஸ் எல்லாம் நடுவில் மறைந்து - உள்ளம் முழுவதும் வெறுமை ஆகி...ப் பின்னர் வேறு ஏதோ விடயங்களைப் பேசி முடித்ததும் - மனதில் உறைத்த அந்தரமும் வேதனையும்... அவை காஞ்சிக்கு எப்படித் தெரியும் ?

'' நீ முந்தி ஒரு நாளும் ரீச்சரின்ரை பேச்சைக் கேட்கேல்லைப் போலை இருக்கு...... ''

இந்திரன் மாஸ்டர் கேட்டார், அதன் பொருள் அவளுக்கு விளங்கியது;

" இண்டைக்கு வழக்கமான தரம் இல்லை " என்பதைத்தான் இவர் சொல்லாமல் சொல்கிறார். ஆனாலும் புரிந்து கொள்ளாதது போல் நின்றாள்.

" அப்ப தாங்கள் எப்பிடியாக்கும் போறது? "

" அது, நான் வந்த மாதிரியே நடந்து போவன் "

" இந்த நேரத்திலையோ? தனியவோ! சீ...சீ...... நான் போய் உதிலை கந்தன்ரை காரைப் பிடிச்சுக் கொண்டு வாறன்...... "

அவள் எவ்வளவோ தடுத்தும் கேளாமல், காஞ்சி பிடித்துக்கொண்டு வந்த 'காரில்' அவள் வீடுதிரும்ப வேண்டியதாயிற்று.

காஞ்சியும், இந்திரன் மாஸ்டரும் கூட வந்தனர். வீதி எங்கும் புழுதியை எழுப்பிக்கொண்டு அந்தக் 'கார்' வீட்டிற்கு வந்தபோது இரவு 8-30 மணி இருக்கும்.

ஒரு யுகப் பிரளய முன்னறிவிப்பாய் வானத்தில் இடியும் மின்னலும் தோன்றின.

மூக்குக் கண்ணாடிக்குப் பின்னே பாலசிங்கத்தின் கண்கள் ஆத்திரமாய் விழித்தன; அவரது முகம் இறுகியிருந்தது.

" காரிலை கொணந்து விட்டிருக்கிறுங்கள் போலை, மகாராணியை... ... "

" கோயிலுக்குப் போறதுக்கு என்னோடை ஒரு துணை வந்திருந்தா, அவை காரிலை கொணந்திருக்கத் தேவையில்லை...... "

" ஓமோம். உனக்குத் துணை இல்லை எண்ட உடனை துணை வாறதுக்குக் கனபேர் இருக்கினம்; நான் ஒருத்தன் இருக்கிறதுதான் இடைஞ்சலாய் இருக்குது... ... இப்ப ஆர் கொணந்து விட்டது? "

" ......... "

" என்ன நான் கேட்கிறன். நீ பேசாமல் போருய்? யார் இப்ப கொணந்து விட்டது? "

" காஞ்சியும்...... "

" காஞ்சியும்......ம்! "

" இந்திரன் மாஸ்டரும்...... "

" ஓகோ எண்டாளும். நான் சொன்னன் பாத்தியே! புதுக் கரியைவிட ஒருக்கா எரிஞ்ச கரி கெதியாப் பிடிக்கும் எண்டு அவன் இந்திரனுக்கு நல்லாத் தெரிஞ்சிருக்குது ..... "

இயல்பாகவே கறுத்து மெலிந்த உடம்பு, மேலும் குறுகி இருக்குமிடம் தெரியாமல் மறைந்து விட்டது போலிருந்தது பூரணிக்கு. உடல் தகித்து விறைத்துக் கொண்டது. முகத்திலும் கழுத்திலும் இரத்தம் ஏறியது. இதயத்தில் ஆயிரம் ஆணிகள் அடித்துக்கொண்டன. உமிழ் நீரை மிகக் கஷ்டப்பட்டு விழுங்கிக் கொண்டாள்.

" நீங்கள் எப்பவும் இப்பிடிச் சொல்லிக் கொண்டிருக்க நானும் எப்பவும் கேட்டுக் கொண்டிருப்பன் எண்டு நினைக்காதையுங்கோ? "

" நான் அப்பிடிச் சொல்லத்தக்கதா நீ ஏன் நடக்க வேணும்? "

" நான் இப்ப என்ன செய்தனுன்? கோயிலுக்குப் பேச்சுக்குப் போனன் "

" பொம்பிளையள் ஏன் உந்த அலுவல்களுக்கு வெளிக்கிடவேணும்? வீட்டிலை இருக்கமுடியாத வருத்தந்தானே......! "

இமை ஏரிகளில் கண்ணீர் மழை நிறைந்தாலும் இப்போது அவள் பேசவில்லை !

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற பாரதியின் விந்தை மனிதர்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களென்ற உண்மை நன்றாகவே உறைத்தது !

ஒரு பெண்ணுக்குத் திறமைகள் இருக்கக்கூடாது! இருந்தாலும் அவள் அவற்றைப் பயன்படுத்தக் கூடாது!

" எனக்கு முந்தி வாழ்ந்த பல பொம்பிளையளும், இப்ப என்னோடை வாழ்ந்து கொண்டிருக்கிற பல பொம்பிளையளும் இந்தக் கட்டுப்பாடுகளுக்கு அடங்கி, ஆசையளை விழிகளிலை மட்டும் தேக்கி, பெருமூச்சுக்களிலை தங்களைக் கரைச்சுக் கொண்டு, எப்பிடியோ வாழ்ந்திட்டுச் செத்துப் போயினம்... இந்த நித்திரையிலையிருந்து எல்லாப் பொம்பிளையளும் எழும்ப வேணும்... நான் முதலிலை எழும்ப வேணும்...... "

கரும்பூனையாய் முகத்தைக் கறுத்துக் கொண்டு பாலசிங்கம் படுத்துவிட்டார்.

ஒரு கோப்பையில் தண்ணீர் வார்த்து, அந்தத் தண்ணீருடன் தனது கண்ணீரையும் சேர்த்து விழுங்கிக் கொண்டாள் பூரணி.

எல்லா இடமும் இருளாய்த் தெரிந்தது !

அடம்பிடித்து நகரும் இரவின் ஒவ்வொரு கணநிசப்தத்திலும் அவளுக்குப் பலப்பல சிந்தனைகள் தோன்றின. மிக விரைவில் இந்த அடிமை வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும் என்ற எண்ணம் மிக முனைப்பாய் நின்றது. ஆனால் அதை எந்தவகையில் செயல்படுத்துவது என்பது பற்றி மாத்திரம் ஒரு தெளிவு ஏற்படவில்லை.

பின் வீட்டில் ' இராசாத்தி அன்ரி 'யின் அழுகுரல் கேட்டது. அவர்களின் மகன் 'பூஸா'வுக்குப் போன நாளிலிருந்து அந்த வீட்டில் அடிக்கடி ' அழுகுரல் ' கேட்பதே வழமையாகிவிட்டது.

'' மற்றவர்களோடு கூடி வாழும்போது நான் அரை மனிதனாகிறேன்; என் அறையில் தனி மனிதனாயிருக்கும்போது முழு மனிதனாகிறேன்...... '' என்று எங்கோ வாசித்த நினைவு வந்து, எங்காவது தனியே ஓரிடத்தில் போய் வாழவேண்டும் என்ற விசித்திரமான ஆசை ஏற்பட்டது.

அந்த ஆசையுடனே அவள் ஒருவாறு உறங்கிப் போனாள்! காலையில் எழுந்தபோது ஏழு மணியாகிவிட்டது! திருமணம் செய்து, இந்த ஆறுவருடகாலத்தில், அவள் ஒரு நாளும் இவ்வளவு தாமதமாய் எழுந்ததில்லை;

'' எப்பிடி இவ்வளவு நேரமாய் நித்திரை கொண்டன்? '' என்று சிந்தித்தாள்.

பாலசிங்கத்தை விட்டுப் பிரிந்து விடுவது என்ற திடமான தீர்மானம் தந்த ஒரு வகை நிம்மதியிலும், அசதியின் சதியிலுந்தான், தான் அவ்வாறு படுத்திருக்கக் கூடும் என்று நினைத்தாள்;

சூரியப் பிரகாசம் உலகம் மீது வியாபிப்போமா வேண்டாமா என்று நினைத்த போது, பாலசிங்கம் எங்கோ புறப்படத் தயாராய் வெளியேறினார்.

'' நான் பிஸினஸ் அலுவலாய் யாழ்ப்பாணம் போறன் '' என்று தனக்குத்தானே சொல்வது போலக் கூறிக்கொண்டு, அவர் ஸ்கூட்டரைத் தள்ளிக்கொண்டு போனார்.

# 8

உன் உறங்குகாலம்
முடிவுறும் வேளை
இதோ-
மிக அருகில்
கனவுகள் வேஷங்களைக் கலைத்து
விரைவில் விழித்தெழு
நிஜத்தை எதிர்கொள்
நின் பங்களிப்பைச் செய்.

— ஈழமகள் —

அன்று சனிக்கிழமையாய் இருந்த போதிலும், காலை ஒன்பது மணிக்குத்தான் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு விசேட வகுப்பு வைப்பதாய் உறுதி கூறியிருந்ததையும், காலை பத்து மணிக்குப் பாடசாலை அபிவிருத்திச் சபைக் கூட்டம் இருப்பதையும் நினைத்துக் கொண்டாள்.

கூடையைத் தூக்கிக்கொண்டு தெருவில் இறங்கி நடந்தாள். மெல்லிய குளிர் காற்றில் உடல் சில்லிட்டது. கடைக்குப் போய்ப் பாண் வாங்கி வந்தாள்.

அலுமாரியில் இருந்த 'ஜாமை' எடுத்துப் பூசிச்சாப் பிட்டுவிட்டுக் கல்லூரிக்கு வந்தாள்.

கல்லூரி 'சனிக்கிழமைத் தோற்றம்' காட்ட வில்லை! முன்பக்கமிருந்த விரிவுரை மண்டபத்தில் 'முதலுதவி வகுப்பு' நடைபெற்றுக் கொண்டிருந்தது: மண்டபம் நிறைய மாணவர்கள்!

கடந்து சென்ருள்! கலை மண்டபத்தில் இன்னு மொரு வகுப்பு. அவள் அதைத் தாண்டிச் செல்கை யில் அந்தவிரிவுரையாளர், ' அப்ப, நாங்கள் மாக்சி சம் என்ற சொல்லின்ரை பொருளைத் தெளிவா விளங்கிக் கொள்ள வேணும்... என்ன? அரைகுறை விளக்கத்தாலை தான் எல்லாப் பிரச்சினையும் வாறது... என்ன?...'' என்று சொல்லிக் கொண்டிருந்தது கேட் டது.

மேற்குப் புறமாக மாமர நிழலில் இருந்த ஒரு வகுப்பறைக்குத் தனது மாணவர்களை அழைத்துக் கற் பிக்கத் தொடங்கினுள்.

'' இப்போது நுளம்புகளை அழிப்பதற்கு டி: டி. ரி. அடிக்கப்படுவதில்லை. எங்கே... அதின்ரை விஞ்ஞான விளக்கத்தை கௌசி வாசியும் பாப்பம்...''

என்று கேட்டாள்.

கௌசி எழுந்து நின்று தனது விடையை வாசித் தாள்.

சில வருடங்களுக்கு முன்னர் டி: டி. ரி: அடித்த போது பெரும்பாலான நுளம்புகள் இறந்தன. ஒரு சில தப்பிப் பிழைத்தன. அவ்வாறு பிழைத்தவை டி: டி: ரி. யை எதிர்த்து வாழக்கூடிய வல்லமை பெற்றி ருந்தன. அந்த விகாரம் அவற்றின் சந்ததிக்குக் கடத் தப் பட்டிருக்கலாம். இப்போது வாழும் நுளம்புகள்

கூர்ப்படைந்த அந்த நுளம்புகளின் சந்ததியாக இருப்பதால் அவை டி. டி. ரி. யால் பாதிக்கப்படுவதில்லை......"

கௌசி இருப்பதற்கு முதலே கேதீஸ் கேட்டான்.

"ரீச்சர்... இது எங்களுக்கும் பொருந்தும் என்ன? இண்டைக்குத் தப்பிப் பிழைக்கிற எங்கடை அடுத்த சந்ததி எந்த அக்கிரமத்தையும் எதிர்த்து நிக்கிற வல்லமை பெற்றிடும் என்ன......?"

அவள் சிரித்துக் கேதீஸ் சொன்னதை ஏற்றுக் கொண்டாள். "சரி... அது போகட்டும். இப்ப...... கௌசியின்ரை விடையிலை இன்னுமொரு 'பொயின்ற்' சொல்லவேணும். அது என்ன எண்டு சொல்லுங்கோ... பாப்பம்... ஜோய்... சொல்லும் பாப்பம்..."

'ஜோய்' தனது விடையை வாசித்தான்.

"டி. டி. ரி. அடிப்பதனல் சூழல் மாசடைகிறது. டி. டி. ரி. உணவுச் சங்கிலிகள் மூலமாக மனித உடலை அடைந்துவிடுகிறது. ஆனல் அது உடலில் பிரிந்து அழிவதில்லை. ஆகவே அதனல் ஏற்படக்கூடிய இத்தகைய ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்காகவும் டி. டி. ரி. அடிப்பது நிறுத்தப் பட்டிருக்கலாம்......"

"தற்ஸ் றைற்...... " என்று அவள் ஜோயின் விடையை ஏற்றுக் கொண்டபோது ஒரு இளைஞன் வேகமாய் வகுப்பினுள் வந்தான்.

"எக்ஸ்கியூஸ் மீ... ரீச்சர்......" என்முன். அவள் தலையசைத்தாள்.

"நாங்கள் இவையோடை கொஞ்சம் கதைக்கப் போறம்......" என்முன்.

PDF Reducer

பின்னர் மாணவர்களைப் பார்த்து, "மேலே போங்கோ......" என்றான். மேய்ப்பனுக்குப் பணிந்த ஆடுகளைப் போல எல்லா மாணவர்களும் எழுந்து வரிசையாக அவனைப் பின்தொடர்ந்து சென்றனர்.

"இண்டைக்கு வகுப்பு இவ்வளவுந்தான்" என நினைத்தவாறே அவள் 'ஸ்ராவ் றூமுக்கு' வந்தாள்.

யன்னலூடாகத் தற்செயலாக வெளியே பார்த்த போது, முன்பக்கம் இருந்த பூந்தோட்டத்தில் மூர்த்தி மாஸ்டர் இரண்டு மூன்று செவ்வரத்தம் பூக்களையும் இலைகளையும் பறிப்பது தெரிந்தது.

"என்ன பாக்கிறியள்?" எஸ். டி. எஸ். கூட்டத்திற்கென வந்திருந்த 'மதி' ரீச்சர் கேட்டார்.

"இல்லை. மூர்த்தி மாஸ்டர் செவ்வரத்தம்பூ ஆயிறார். என்னத்துக்கோ தெரியேல்லை..." — மிகச் சாதாரணமாய் அவள் தொடர்ந்தாள்.

educer Demo

"பத்து மணிக்குத் தானே எஸ்; டி. எஸ்....?"

"ஓம்; நான் 'ஸ்பெசல் கிளாஸ்' எடுக்கவெண்டு வெள்ளென வந்தனான். அதுவும் குழப்பிட்டுது..."

'மதி' ரீச்சருக்கு ஒரு சில தினங்களுக்கு முன்னர் தான் திருமணம் ஆகியிருந்தது. பூரணி தன் சொந்தப் பிரச்சினைகளை மறந்து கலகலப்பாய் இருக்க விரும்பினாள்.

"என்ன புதுப் பொம்பிளை மாப்பிளை... ஹனிமூன் போறதை விட்டிட்டு.. எஸ். டி. எஸ். கூட்டத்துக்கு வந்திருக்கிறீங்கள்?"

"இந்தக் காலத்திலை எங்கை 'ஹனிமூன்' போறது? 'வெடிங்' நடந்து முடிஞ்சதே பெரிய காரியம்..."

நாணச் சிறைக்குள் மூடிக்கொண்ட விழிகளை மெல்லத் திறந்து மதி சிரித்ததைப் பூரணி ரசித்தாள்.

இப்போது கையில் 'பூக்கள் இலைகளுடன்' உள்ளே வந்த மூர்த்தி மாஸ்டர், மதி ரீச்சரைப் பார்த்து.

"எனக்கு உங்கடை திருமணத்துக்கு வர முடியாமல் போயிட்டுது. அதுதான் காலமை இதுக்கெண்டு மினக்கெட்டுத் துர்க்கை அம்மன் கோயிலுக்குப் போய் உங்கடை பேரிலை ஒரு அர்ச்சனை செய்விச்சனான். இந்தாருங்கோ பிரசாதம்......"

என்று 'பூக்களை' மதி ரீச்சரிடம் கொடுத்தார். சிரித்தவாறே மதி அதைப் பெற்றுக் கொண்டாள்.

"'இவர் நிச்சயம் 'பாராட்டு விழா' எடுக்கப்பட வேண்டிய மனிதர்தான்' என்று உள்ளுக்குள் நினைத்துக் கொண்டாள் பூரணி.

எஸ். டி. எஸ் கூட்டத்தில் தேவாரம் நடந்த போதும், செயலர் அறிக்கை வாசித்த போதும் அவள் நினைவுகள் அவளை அறியாமலே வீட்டிற்குச் சென்று விட்டன.

சட்டரீதியாக பாலசிங்கத்தை விட்டுப்பிரிவதாக இருந்தால், 'தகுந்த காரணம்' கூற வேண்டும் நீதி மன்றில்! குடும்பத் தலைவன் ஆண். ஆகவே தனது மனைவியை உடல் ரீதியாகவோ, உள ரீதியாகவோ தண்டிக்க அவனுக்குப் பூரண உரிமை உண்டு என்று கருதும் சமுதாயம்! ஆகவே சட்டமோ சமுதாயமோ தனக்கு எந்த வகையிலும் உதவப் போவதில்லை எனப் பூரணி உணர்ந்தாள்.

அப்பா அம்மாவுடன் போய் இருக்கலாம். ஆனல் அவர்களும் அவளை முழு மனதால் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்: "என்னதான் நடந்தாலும் ஒரு

பொம்பிளை புருசனை விட்டுப் பிரிஞ்சு 'வாழப்பிடாது'' என்ற நம்பிக்கையில் முழுதாய் ஊறிப்போனவர்கள் அவர்கள். ''ஒரு மாதிரிச் சமாளிக்க வேணும் பிள்ளை'' என்று தான் அம்மா கூறுவாள்.

தனக்குத் தெரியக் கிராமத்தில் எத்தனையோ பெண்கள் பட்ட கஷ்டங்களைக் கதை கதையாய்க் கூறுவாள்.

''உவன் ராமுவின்ரை மனிசி வாங்கிற அடி எம் மளவெண்டு தெரியுமே உனக்கு?''

''ஏன் களக்க? முன்வீட்டு முத்தம்மாவை அந்த மனிசன் கேக்கிற கேள்வி......!''

''உன்னுடை படிச்ச... அந்தச் சரோ... அவ ளின்ரை மனுசனுக்கு ஊர் முழுதும் பொம்பிளை இருக்கு......''

''அவள் அந்தத் தடிச்சி...... என்ன பேர்...... கமலம்...... அவளின்ரை மனுசன் ஒரு சதமும் வீட் டிலே குடுக்கிறேல்லை. முழுதும் குடி......''

அம்மாவின் பரிசோதனையில் இவ்வளவு அவதா னங்களும் முடிய இறுதி முடிவு தீர்க்கமாய் வரும்.

''இதை எல்லாம் பாக்கேக்கை உன்ரை விஷயம் சின்னப் பிரச்சினை மோனை...... ஒரு மாதிரி அவர் சொல்றபடி நட...... அதுக்கென்ன அவர் விடச் சொன்ன வேலையை விடன்......''

அம்மாவுடன் போய் இருக்கும் நினைவு அவள் மனதைவிட்டு முற்றாக விடை பெற்றுவிட்டது. தனி யாக ஒரு வீடு வாடகைக்குப் பார்த்தால் என்ன?

''எங்களது அதிபரை நிரந்தர அதிபராக ஆக்க வேண்டும் என்று கல்விப் பணிப்பாளரைக் கேட்கி

றதா நான் ஒரு பிரேரணை கொணர்ந்தனன். செயலாளர் அதை அறிக்கையில் எழுதேல்லை......''

கந்தசாமி எழுந்து நின்று உரப்பாய்க் கதைத்த போதுதான் பூரணியின் சிந்தனைகள் கலைந்தன.

'' அதிபரை மாத்திற பிரேரணை எண்டா உடனை எழுதிப் போடுவியள்......'' ராமசாமி கந்தசாமிக்கு ஆதரவாய்க் கதைத்தார்.

ஒரே நேரத்தில் பலர் எழுந்து பலவித கருத்துக்களைக் கூறி அமளிப்பட்ட பின்னர்,

அந்தப் பிரேரணை செயலர் அறிக்கையில் திருத்தமாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

எஸ். டி. எஸ். பொருளர் என்ற முறையில் தொடர்ந்து பூரணி தனது வரவு செலவு விபரங்களை வாசித்தாள்.

'' பண்டத்தரிப்பைச் சேர்ந்த எஸ். நகுலாசலபதி என்பவர் மூன்று மாதத்திற்கு முன்னர் எஸ். டி. எஸ்ஸுக்கு அன்பளிப்பாய் ஆயிரம் ரூபா கொடுத்திருக்கிறார். ஆனால் அவருக்கு இன்னும் ' றிசீற் ' வழங்கப்படவில்லை. இதற்குப் பொருளர் என்ன பதில் கூறுகிறார்? ''

நாகலிங்கம் என்ற பெற்றார் திடீரென்று இப்படிக் கேட்டபோது பூரணி திகைத்துத்தான் போனாள்.

ஒருநாள்......! கிள்ளினால் இரத்தம் கன்றிவிடக்கூடிய நிறத்தில் ஒரு பிள்ளையும் அதன் தந்தைபோல் தோன்றிய ஒருவரும் அதிபர் அறையில் இருந்த நிகழ்வு — அவளுக்குப் 'பளிச்' சென்று நினைவு வந்தது.

"என்னிடம் வந்த பணம் எதற்கும் 'றிசீத்' கொடுத்திருக்கிறேன். நீங்கள் குறிப்பிடும் எஸ். நகுலாசலபதி என்பவர் என்னிடம் பணம் தரவில்லை"

என்று துணிவுடன் கூறிவிட்டு அமர்ந்தாள். ஆனாலும் இந்த நிகழ்வு அவளை மிகவும் பாதித்தது!

யாரோ செய்யும் தவறுகள்... பொருளர் என்ற முறையில் அவளைத்தான் பாதிக்கப் போகிறதா? அவளை நேர்மையற்றவள் என்று சமுதாயம் கணித்து விடுமா? அதிபர் அந்தப் பணத்தை அவளிடம் கொடுத்து விட்டதாகக் கூறிவிடுவாரா?

"அதிபர் இதற்கு என்ன பதில் கூறுகிறார்?"

நாகலிங்கம் தொடர்ந்து கேட்டார். அதிபர் எழுந்தார்.

"எஸ். நகுலாசலபதி என்பவர் என்னிடம் ஆயிரம் ரூபா தந்தது உண்மை. ஆனால் நான் அதை உடனே பொருளரிடம் கொடுத்து விட்டேன்"

ஆத்திரத்தில் பூரணியின் உடல் நடுங்கியது. என்ன செய்வது என்று அவள் மனதிற்குள் தீர்மானிக்க முதல், இந்திரன் மாஸ்டர் எழுந்தார்:

"அதிபர் அதை எஸ். நகுலாசலபதி என்பவருக்கு முன்னால் பொருளரிடம் கொடுத்தாரா?"

"இல்லை. பின்னர் கொடுத்தேன்"

"சாட்சி?"

"சாட்சி இல்லை. நம்பிக்கை தான்"

"கோயில் ஒன்றில் சத்தியம் செய்ய அதிபர் தயாரா?"

"உண்மையைச் சொல்கிறேன். சத்தியம் எதற்கு?"

அவையில் இருந்த எல்லோரும் மெதுவாகச் சிரித்தனர். உண்மை நிலையைச் சபை புரிந்து கொண்டது என்பது பூரணிக்கு விளங்கியது. ஆனாலும் மனக்குழப்பமும் ஆத்திரமும் தீரவில்லை.

"இந்தப் பதவியை இன்றுடன் நான் ராஜினாமாச் செய்கிறேன். என்னிடம் அந்தப் பணம் தரப்படவில்லை என்பதைப்பற்றி எந்த இடத்திலும் சத்தியம் செய்ய நான் தயார்...... அந்தப் பணத்திற்கு நானே பொறுப்பு என்று சபை தீர்மானிக்குமாயின் அதைக் கட்டவும் நான் தயார்......"

என்று கூறிவிட்டுக் கூட்டத்தை விட்டு வெளியேறினாள் பூரணி.

அவள் வெளியேறும்போது ஒருவர் வேகமாக உள்ளே வந்தார்.

"உங்கை எல்லாம் சரியான பிரச்சினையாம். என்ரை பிள்ளையைக் கூட்டிக் கொண்டு போப்போறன்......" என்று சொல்லிக்கொண்டே 'முதலுதவி வகுப்பு' நடைபெற்றுக் கொண்டிருந்த வகுப்பினுள் நுழைந்தார்.

தொடர்ந்து இன்னொருவர்... பின்னர் வேறொருவர்...... அரைமணி நேரத்துக்கிடையில் கல்லூரியில் ஒருவரும் இல்லை.

வீதியில் சனங்கள் நடக்கவில்லை. ஓடிக்கொண்டிருந்தார்கள்.

"யாழ்ப்பாணத்திலை நாப்பது ஐம்பது சரியாம்..."

ஒரு இளைஞன் சைக்கிளில் பறக்கும்போது சொல்லிக்கொண்டு பறந்தான்.

பாலசிங்கமும் யாழ்ப்பாணம் போனார் என்ற நினைவு பூரணியின் மனதில் இன்னதென்று விபரிக்க முடியாத ஒரு உணர்வை ஏற்படுத்தியது.

# 9

நீங்கள் சிரித்தால்
முத்துதிரும் என்றவர்கள்
அழுதால் என்ன உதிரும்
என்று
சொல்ல மறந்தார்கள்
அடிக்கடி தேய்வதால்தான்
எங்களை
நில வென்றார்கள்.

— கந்தர்வன் —

வழியில் யாரோடும் பேசாமலே விடுவிடென்று வீட்டை அடைந்தாள் பூரணி. வீட்டு முற்றத்தில் ஒரு நாளும் இல்லாமல் அவளது நாய்க்குட்டி மலங் கழித்திருந்தது, அவளுக்கு அதிசயம் கலந்த அருவருப்பைத் தந்தது.

உடுப்பை மாற்ற முதலே, ''இந்த அரியண்டத்தை அப்புறப்படுத்துவம்'' என்று, மண்வெட்டி எடுத்து வந்து, அதற்கு மேல் மண்போட்டு, பின்னர் மண்வெட்டி அலகால் அள்ளித் தூர எறிந்தாள் அவள்.

அப்போது நடக்க மாட்டாத நிலையில் தள்ளாடித் தள்ளாடி வந்து அவளது கால்களை நக்கி வாலை ஆட்டியது அது. சுகயீனமாக இருந்து, இப்போது சில நாளாய்த் தேறிநின்று, மறுபடியும் கடுமையாக நோய் வாய்ப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்தபோது, அதன் மீது அருவருப்பைக் காட்ட முடியவில்லை அவளால்! எரிச்சலை மூட்டை கட்டி வைத்துவிட்டு, நாய்க் குட்டிக்குக் கொஞ்சம் பால் கரைத்து வைப்போம் என்று உள்ளே போனபோது, இலேசாகத் தலையைச் சுற்றுவது போல இருந்தது.

“இந்த முறை ‘பீரியேட்’ வாற டேற் கடந்து நாலு நாள் ஆயிட்டுது” என்று திடீரென்று நினைவு வந்தது அவளுக்கு.

“ஒரு வேளை நான்......”

என்று மங்களகரமாய் யோசிக்க நினைத்தவள்,

PDF Reducer

“சீ... ஆறு வருசமாய் இல்லாமல்... இப்ப எப்பிடித் திடீரெண்டு... எனக்கும் விசர்......”

என்று அந்தச் சிந்தனையை அலட்சியம் செய்து— மறுதலித்து— மீண்டும், “ஏன்? என்னிலும் ஒரு குறையுமில்லையாம். அவருக்கும் ஒரு குறையும் இல்லையெண்டு... அண்டைக்கு டொக்டர் சொன்னவவாம். அப்ப... ஒரு வேளை......” என்று சாதகமாக நினைத்தாள்.

‘பொசிற்றிவ்’ ஆன சிந்தனையள் தான் மனிதன் உயிர் வாழுறதுக்கே உயிர்நாடி... ஆனபடியால் எப்பவும் ‘பொசிற்றிவ்’ ஆக நினைக்கிறது பிழையில்லை” என்று தனக்குத்தானே சான்றிதழ் வழங்கிக் கொண்டாள்.

நாய்க் குட்டிக்காகச் சிரட்டையில் பாலை வார்க்கும்போது,

" பிள்ளை ஒண்டு வேணும் என்ற ஆசை மிகப் பெரிய ' ரென்சன் ' ஆக இருக்கிறதாலே, கலியாணம் செய்த முதல் சில வருசங்களிலே சிலருக்குப் பிள்ளை கிடைக்கிறதில்லை. சில வருசங்கள் போனப்பிறகு, ' இனிப்பிள்ளை இல்லை ' என்ற முடிவு வந்து, இந்த ' ரென்சன் ' இல்லாமல் போன உடனே அவை கர்ப்பம் தரிக்கினம்...... "

என்று அண்மையில் ஒரு ஆங்கில சஞ்சிகையில் வாசித்த நினைவு வந்ததால், அந்தச் சஞ்சிகையைத் தேடி எடுத்து, அந்தப் பகுதியை மீண்டும் ஒருமுறை வாசித்துப் பார்த்தாள் பூரணி.

" இந்தக் கருத்துப் படியும் நான் ' பொசிட்டிவ் ' வாகத்தான் யோசிக்க வேண்டியிருக்கு... "

educer Demo

என்று சுற்றிச்சுற்றி அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டே வெளிக் கண்ணால் நாய்க் குட்டியைப் பார்த்துக் கொண்டிருக்கையில், படலையில் முன்வீட்டுப் பங்கஜம் மாமி கூப்பிடும் குரல் கேட்டது.

" வாருங்கோ மாமி... என்ன விசேஷம்? "

" ஒண்டுமில்லை...... உங்கை யாழ்ப்பாணத்திலை பெரிய கலம்பகமாம். அதுதான் உம்மடை அவர் வந்திட்டாரோ எண்டு பாத்திட்டுப் போவமெண்டு—"

" இல்லை மாமி. அவரும் காலமை யாழ்ப்பாணந் தான் போனவர். இன்னும் காணேல்லை. " என்று கூறிக்கொண்டே, பங்கயம் மாமியுடன் அவளும் வெளித் திண்ணையில் குந்திக் கொண்டாள்.

வீட்டை விட்டுப் புறப்பட்டு விடவேண்டும் என்ற எண்ணம் நேற்று இருந்த அளவு உக்கிரமாய் இன்று மனதில் தோன்றாதது அவளுக்கே விசித்திரமாய் இருந்தது. காலம் எத்தனையோ முடிவுகளை மாற்றிவிடுகி

றது! காலம் எத்தனையோ மனப்புண்களை ஆற்றியும் விடுகிறது! பாலசிங்கத்தை விட்டுப்பிரிந்து தனியாக வாழும்போது ஏற்படக்கூடிய எத்தனையோ பிரச்சினைகளை, யதார்த்தமாக மனம் இதற்குள் சிந்தித்துப் பார்த்துக் கொண்டதும்... அந்த உக்கிரம் குறைந்ததற்குக் காரணமாய் இருக்கலாம்.

நிமிடங்கள் நிறைந்து மணித்தியாலங்களை முத்தமிட்டன.

"அவர் சிலவேளை ஏழெட்டு மணிக்கும் வாறவர் தானே என்ன?"

"ஓம். சிலவேளை ஒன்பது பத்து மணிக்கும் வாறவர். எண்டாலும் இண்டைக்கு மத்தியானத்தோடை சன நடமாட்டமே இல்லையாம். கடையள் எல்லாம் பூட்டிப் போட்டாங்களாம். இவர் என்ன செய்கிருரோ தெரியேல்லை"

என்னதான் கருத்து வேற்றுமைகளும் மனக் கசப்புகளும் இருந்த போதிலும் பாலசிங்கத்தைக் காணவில்லை என்றதும் தன் மனதில் இயல்பாகவே ஒரு துடிப்பு ஏற்படுவதைப் பூரணி உணர்ந்தாள். இது தான் 'தாலி' தந்த உறவின் மகிமையோ என்று நினைத்தாள்.

நேரம் மாலையாகி விட்டது. வானத் தடியனின் கொடூரப்பிடியில் பூமிக்கன்னி அகப்பட்டதில், அவள் மார்பெங்கும் இரத்தச் சிவப்பு!

பாலைக் குடித்து முடித்த நாய்க்குட்டி திடீரென நிலத்தில் விழுந்து கால்களைப் போட்டு அடித்து மிகுந்த வேதனைப்பட்டது.

"இண்டைக்கு இதுக்கும் கடுமையா இருக்கு" என்று பூரணி சொல்லிக் கொண்டிருக்கையிலேயே,

அதன் ஆட்டம் ஒய்ந்து விட்டது. அதற்கு அண்மையில் சென்று தொட்டுப் பார்த்த பூரணி, "போயிட்டுது மாமி" என்ருள்.

"இதோடை வந்த எங்கடை வீட்டு நாய்க்குட்டி லக்கி அங்கை துள்ளிக் கொண்டு திரியுது... பாவம் இது... அதுக்குள்ளை வருத்தம் வந்து செத்திட்டுது... இதின்ரை விதி அப்பிடியாய் போயிட்டுது......"

பங்கயம் மாமி இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கையில், பாதையால் சென்று கொண்டிருந்த காஞ்சியும் அவன் மனைவி குஞ்சியும் இவர்கள் இருவரும் பதட்ட நிலையில் ஏதோ பேசிக் கொண்டிருப்பதை அவதானித்து உள்ளே நுழைந்து விடயத்தை விளங்கிக் கொண்டனர்.

ஒன்று, பாலசிங்கத்தை இன்னும் காணவில்லை!

educer Demo

மற்றது, நாய்க்குட்டி இறந்து போய்விட்டது!

"அப்ப, உதிலை எங்கடை ஆலடிப் பிள்ளையாரிட்டை ஒருக்காப் போய்க் கற்பூரம் கொழுத்திக் கும்பிட்டிட்டு வரவாக்கும்... நான் நாய்க்குட்டின்ரை அலுவலைப் பாக்கிறன்......"

காஞ்சி ஆலோசனை தந்தான்.

"இந்த மனுசனை ஒருநாள் பனையிலை வைச்சுப் பாம்பு கொத்தாமல் அந்தப் பிள்ளையார்தான் காப்பாத்தினது..." குஞ்சி ஒத்துப் பாடினுள்.

இறைவனுக்கு லஞ்சம் கொடுப்பதால் எதுவும் ஆகும் என்பதில் விஞ்ஞான ஆசிரியையான பூரணிக்குக் கொஞ்சமும் நம்பிக்கை இல்லையாயினும் காஞ்சியின் அன்புக்குப் பணிபவள் போல உள்ளே வந்து கற்பூரமும் நெருப்புப் பெட்டியும் எடுத்துக் கொண்டாள்.

முகத்தைக் கழுவித் துடைத்துப் பொட்டுப் போடுவதற்காகக் குங்குமச் சிமிழை எடுத்தபோது, அது எப்படியோ கை நழுவிக் கீழே விழுந்து குங்குமம் முழுவதும் நிலத்தில் பறந்து சிந்தியது. சகுனங்களில் நம்பிக்கையற்ற அவளுக்கும் இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து உடல் நடுங்கியது.

"நான் சகுனத்தை நம்புறேல்லை எண்டு வெளியிலை சொல்லிக் கொண்டிருந்தாலும், என்ரை அடிமனம் அதையும் நம்புதுதான்..."

நினைத்துக் கொண்டே, தன்னைச் சுதாரித்துக் கொண்டு எழுந்து கோயிலுக்குப் போனாள் பூரணி.

'கொடியேற்ற வேண்டும்' என்பதற்காக மூன்றும் முறையாக அண்மையில் ஒரு இளம் பெண்ணை மணம் செய்து கொண்ட கார்த்திகேசுக் குருக்கள் அவளை அன்புடன் உபசரித்து, பாலசிங்கத்தின் பெயரால் ஓர் அர்ச்சனையே செய்து கொடுத்தார்.

சமயச் சடங்குகள் எல்லாவற்றிலும், ஏன் விவாகச் சடங்கிலே கன்னிகாதானம் செய்யும்போதுகூட— ஒரு மனிதன் தன் மனைவியுடன் காணப்படவேண்டும் என்று பழைய காலம் முதல் பெண்களுக்குப் போதிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டே வந்திருக்கிறது என்று நினைத்தபோது, ஒரு கணம் மகிழ்ந்தாள் பூரணி.

"மனைவியை உதாசீனம் செய்து, தான் நினைத்தபடி வாழ்பவனுக்கு எந்த இடத்திலும் இடமில்லை" என்ற தத்துவம் இடைக் காலத்திற்றான் மீறப்பட்டிருக்க வேண்டும் அல்லது உணரப்படா திருந்திருக்க வேண்டும் என்றும் நினைத்தாள். மறுகணமே இந்த நினைவை உதறிவிட்டு, பாலசிங்கம் சுகமே திரும்பி வரவேண்டும் என்று பிள்ளையாரைப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

வீட்டிற்குத் திரும்பி வந்தபோது, தம்பிக்கும் ஒரு அர்ச்சனை செய்வித்திருக்கலாமே என்று நினைத்தாள். எங்கே எப்படி இருக்கிருனே? இருக்கிருனே இல்லையோ?

அடி வளவில் பெரிய வெளிச்சம் தெரிந்தது.

"என்ன காஞ்சி செய்யிருய்?"

"நாய்க் குட்டி கொழுத்திருர்" — குஞ்சி சிரித்தபடி சொன்னுள்.

"இதென்ன புது வழக்கம்? அங்கை எலுமிச்சையடியிலை கிடங்கு வெட்டித் தாழ்க்கிறதுக்கு...?"

"மண்வெட்டியைக் காணேல்லையாம். சைக்கிள் ரயர் பழையதுகள் கிடந்திது. போட்டுக் கொழுத்திருர்..."

குஞ்சி சொன்னதைக் கேட்காமலே வளவினுள் சென்று பார்த்தாள் பூரணி. அவள் போன நேரம் தகனம் ஓரளவு முடிந்து விட்டது.

"உந்தப் பழைய ரயர்களை வைச்சு என்ன செய்யிறது? அதுதான் கொழுத்திப் போட்டன்" தனது செயலுக்கு விளக்கம் தந்தான் காஞ்சி. பூரணிக்கு ஏனே இது அவ்வளவு திருப்தி தரவில்லை. அதே நேரம் காஞ்சியைக் குறை சொல்லவும் மனம் வரவில்லை. பேசாமல் திரும்பி வந்தாள்.

காஞ்சியும் குஞ்சியும் போய்விட்டு இரவு எட்டு மணிக்கு மேல் மீண்டும் வந்து எட்டிப் பார்த்தனர்.

பாலசிங்கம் வரவில்லை.

ஒன்பது மணியளவில் பங்கயம் மாமி வந்து பார்த்தாள்.

பாலசிங்கம் அப்போதும் வரவில்லை.

இவர்கள் மூவரும் அன்றிரவு பூரணியுடன் தங்கினர்.

மிக விரைவில் இந்த வீட்டை விட்டுப் புறப்பட்டு விடுவது — பாலசிங்கத்தை விட்டுப் பிரிந்து விடுவது— என்ற முடிவுடன் தான் இருக்கும்போது, எதிர் பாராமல் இந்தப் புதிய பிரச்சினை வந்ததை எண்ணிப் பூரணி அதிசயம் நிரம்பிய துன்பம் அடைந்தாள். அவளுக்குச் சிரிப்பும் அழுகையும் ஒருங்கே வந்தன.

இரவு முழுவதும் யாரும் சரியாக உறங்கவில்லை.

பாலசிங்கமும் வரவில்லை.

கோழி கூவியவுடன் எழுந்து குந்திக் கொண்ட குஞ்சி,

" இரவு எங்கையும் தங்கிப்போட்டு, விடிய எப்பிடியும் வந்திடுவார் " என்று பூரணிக்கு ஆறுதல் கூறுவது போலச் சொன்னாள்.

" ஸ்கூட்டருக்கு ஏதும் நடந்திருந்தா நடந்து தானே வரவேணும்; பஸ் ஒண்டும் ஓடேல்லையாம்... " என்றான் காஞ்சி.

" யாரும் தெரிஞ்சாக்கள் வீட்டிலை நிண்டாலும் அவை வர விடாயினம். நிலையைப் பாத்துத்தானே விடுவினம் " என்று பங்கயம் மாமி கூறினாள்.

மூவரும் படுக்கையை விட்டு எழுந்து குந்திக் கொண்டு கதைத்தனர். பூரணியால் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியவில்லை. தலையை நிமிர்த்தினால் உலகம் முழுவதும் சுற்றுவது போல இருந்தது.

இப்போது ' பொல பொல ' வென்று நன்றாகவே விடிந்து விட்டது.

பாலசிங்கம்...............

மிகக் கஷ்டப்பட்டுத் தலையை உயர்த்தி, எழுந்து வெளியே வந்தாள்.

வாசலைத் தாண்டி வெளி வந்தவுடன், வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது. முற்றத்தில் குந்திக் கொண்டு, மஞ்சள் மஞ்சளாய்ச் சத்தி எடுத்தாள்.

'' இரவு முழுதும் நித்திரை முழிச்சதிலை பித்தம்... அதுதான் இப்பிடிச் சத்தி எடுக்கிறு. நீ போய்ப் படு பிள்ளை! நான் போய் வீட்டிலை தேத்தண்ணி வைச்சுக் கொண்டு வாறன்......''

கூறியபடி எழுந்து தன் வீட்டிற்குப் போனுள் பங்கயம் மாமி.

'' அப்ப நான் போய் உங்கடை அப்பா வீட்டிலை விஷயத்தைச் சொல்லிப் போட்டு வாறனுக்கும். அவை ஆரேன் ஒருவேளை போய்த் தேடிப் பாப்பினம்......'' காஞ்சியும் எழுந்து போனுன்.

புதினம் ஊரில் மெதுவாகப் பரவத் தொடங்கியவுடன் ஒவ்வொருவராய்ச் சிலர் கூடிவிட்டனர்.

'' நான் ஒருக்கா மோட்டர் சைக்கிளிலை போய்ப் பாத்துக் கொண்டு வாறன் '' என்று பக்கத்து வீட்டுத் தம்பி நிர்மலன் கிளம்பினுன்.

'' தம்பி! கவனம் மேனை. கெதியாவா... பிறகு உன்னையும் தேட ஆன் அனுப்பேலாது......'' என்று அவனது தாய் அங்கலாய்த்து அனுப்பினுள்.

' காசுவல் ' லீவு எழுதி அனுப்பிவிட்டுக் கல்லூரிக்குப் போகாமல் நின்றுள் பூரணி.

அப்பாவையும் அம்மாவையும் தங்கச்சியையும் கூட்டிக்கொண்டு காஞ்சி திரும்பி வருவதற்கு ஓரிரு நிமிடங்களுக்கு முன்னர்,

பாலசிங்கம் வந்து சேர்ந்தார். நடந்து!

அவரது முகம் பேயறைந்தது போல் காணப் பட்டது!

# 10

வாழ்க்கை ஒரு போராட்டம்
ஆமாம்.
அது சாவிற்கான போராட்டம்
பரிதாபங்களின் பேருருவம்
சிக்கல்களின் வலைப்பின்னல்
நனவுகளின் கனவுநிலை.

— எஸ். வசந்தி —

PDF Reducer

சுண்ணாம்புச் சூட்டினாலோ, வெயில் வெக்கையினாலோ வெடிப்புற்ற சொண்டுகளோடு காணப்பட்ட காஞ்சிதான், பாலசிங்கத்தைக் கண்டவுடன் பதற்றத்துடன் கேட்டான்.

"என்ன வாக்கும் நடந்தது பட்டணத்திலை?"

அழு குரல்களும் வெடி முழக்கங்களும் நித்திய வாழ்வாகிவிட்ட யாழ் மண்ணின் கதையை அவர் சொல்ல எல்லோரும் வாயைத் திறந்தபடி கேட்டுக் கொண்டிருந்தனர்.

"சடசடவெண்டு சூட்டுச் சத்தம் கேக்கத் தொடங்கின உடனே... சனம் முழுதும் பறந்து ஓடிச் சுது... நானும் ஸ்கூட்டரை அப்பிடியே விட்டிட்டுப் பாஞ்சு ஓடி ஒரு கடைக்குள்ளை பூந்திட்டன்......"

"சீலைக் கடையாக்கும்......"

"இல்லை. இரும்புக்கடை! என்னையும் உள்ளுக்கு விட்டு அவங்கள் கடையை உள்பக்கம் பூட்டிப் போட்டாங்கள். வெளியே... ஒரே தொடர்ச்சியாச் சத்தங்கள் கேக்குது... நானும் கடைக்காறர் மூண்டு பேரும் பேச்சு மூச்சில்லாமல் உள்ளுக்கே இருந்தம்..."

"கடைக்குள்ளாலை வெளிக்கிட முடியேல்லைப் போலை"

"ஓ... மத்தியானம் வரைக்கும் வெளிக்கிட முடியேல்லை. இடையிலை ஒருக்காக் கடைக் கதவிலையும் வந்து உதைஞ்சாங்கள்... நல்ல காலம் கதவு திறபடேல்லை. போட்டாங்கள்......"

"அப்ப பின்னேரம் வந்திருக்கலாமே!"

"பின்னேரம் மூண்டு மணிபோலை ஓரளவு அமைதிப்பட்டாப் பிறகு மெதுவாக் கடையைத் திறந்து போட்டு வெளியிலை வந்தம். வந்து பாத்தா... தெருவிலை ஒரு ஈ, காக்காயும் இல்லை. ஸ்கூட்டரையும் காணேல்லை. சரியெண்டு ரோட்டாலை நடந்து வந்தம்......"

"பஸ் ஒண்டும் ஓடேல்லை யாக்கும்..."

"பஸ் இண்டைக்கும் ஓடேல்லைத்தானே...... கோண்டாவில் வரைக்கும் நடந்து வந்திட்டம்... அப்ப ஒரு பெடியன் சொன்னான் சந்தியிலை சூட்டிங் நடக்குது... போக வேண்டாமெண்டு......"

' ஓகோ ...... '

'' அப்ப... ஒரு கை ஒழுங்கைக்குள்ளை போய் நிண்டிட்டு... வாகனங்கள் போற சத்தம் கேட்டாப் பிறகு பேந்தும் நடந்து வந்தம்......''

'' எண்டாலும் பிள்ளையார் தங்கச்சின்ரை தாலியைக் காப்பாத்திட்டார்... '' என்று சொல்லி, 'பிள்ளையாரே!' என அழைத்துக் கை எடுத்துத் தலைமேல் வைத்துக் கும்பிட்டாள் குஞ்சி.

'' பொறு, பொறு கதை சொல்லி முடிஞ்சாப் பிறகு உன்ரை பிலாக்கணத்தைச் சொல்லு '' என்று அவளை அடக்கினான் காஞ்சி.

'' நடந்து வந்திருந்தாலும் இரவு எட்டுப் பத்து மணிக்கு வந்திருக்கலாமே '' இதுவரை மௌனமாய் இருந்த பூரணி மெதுவாகக் கேட்டாள்.

'' அதுக்குப் பிறகுதானே உன்ரை தம்பியைக் கண்டனான் ... ''

வெற்றிலைச்சாறு கசியாமலும் வெளிப்படாமலும் நிதானமாக விழுங்கிக் கொண்டிருந்த காஞ்சி முழுவதையும் வெளியே துப்பிவிட்டு,

' என்ன வாக்கும் சொல்லுது? ' என்று கேட்டபடி முன்னால் வந்தான். பூரணி விழிகள் ஆச்சரியத்தால் விரிய அவரைப் பார்த்தாள்.

'' கோண்டாவில் சந்தியிலை இரண்டு மூண்டு பேர் காயத்தோடை கிடந்தினம்... அதுக்குள்ளை ஒருத்தன் இவன்...... ''

'' கடவுளே ! ''

'' தண்ணி, தண்ணி எண்டு கேட்டான்; நான் பின்னைத் தண்ணி எடுப்பம் எண்டு கடைப்பக்கம்

போனவன். திரும்பி வாறதுக்கிடையிலே பேந்தும் வாகனச் சத்தம் கேட்டுது..."

'அப்ப அவனுக்குத் தண்ணியும் குடுக்கேல்லையே...'

" இல்லை. பிறகு வந்து பாத்தா... ஒருத்தரும் அந்த இடத்திலை இல்லை..."

" அவங்கள் தூக்கிப் போட்டுக் கொண்டு போட்டாங்கள்..."

" ஆஸ்பத்திரியிலை போட்டிருப்பங்கள் எண்டு திரும்பி நடந்துபோய் ஆஸ்பத்திரியிலை பாத்தன். அங்கையும் இல்லை..."

இவ்வளவு நேரமும் நீண்ட மௌனத்தோடு கேட்டுக் கொண்டிருந்த அம்மா இப்போது பலமாக அழுது ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டாள்.

அப்பா வேட்டித் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டு பூரணியைப் பார்த்தார். "உன்னை நம்பி அவனை விட்டேனே" என்று கேட்பதுபோல் இருந்தது அப்பார்வை. பாலசிங்கம் தொடர்ந்தார்.

" இதுக்குள்ளை நல்லா இருண்டு போச்சுது. ஒரு வேளை ஏதும் நடந்திருந்தாலும், பிறகெண்டாலும் கொணந்து ஆஸ்பத்திரிலை போடுவங்கள் எண்டு ஆஸ்பத்திரியிலை நிண்டு பாத்தன். இரவு முழுதும் அந்த ஆஸ்பத்திரி விருந்தையிலை படுத்திருந்தன்... காலமை எழும்பி... உவன் ஆஸ்பத்திரிப் பியோன் நாதன்... அவன்ரை சைக்கிளிலை தொத்திக்கொண்டு வாறன்..."

நேற்று வீட்டில் நடைபெற்ற சகுனங்களையும் சம்பவங்களையும் நெஞ்சில் சுமையோடு இரைமீட்டுப் பார்த்தாள் பூரணி.

பாலசிங்கத்திற்குத் தேநீர் கொண்டு வந்து வைக்கையில்,

" இவரிட்டையும் கொஞ்சம் மனிதத் தன்மை இருக்குது. என்ன இருந்தாலும் தம்பியைப் பற்றித் தன்னுலே முடிஞ்ச அளவுக்கு ஏதோ செய்திருக்கிருர் " என்று நினைத்துக் கொண்டாள்.

எந்த மனிதனும் முழுதாக இறைவனுமல்ல !

எந்த மனிதனும் முழுதாக மிருகமுமல்ல !

பாலசிங்கத்தை விட்டுப் பிரிவதாகிய தனது தீர மானத்தை மீளப் பரிசோதனை செய்யலாமோ என்றும் இப்போது ஒரு மனம் அவளிடம் கேட்டது.

அம்மா அழுது கொண்டே இருந்தாள்.

யாராலும் அவளை ஆறுதல் படுத்த முடியவில்லை.

ஊரிலும் கல்லூரியிலும் புதினங்கள் மிக வேக மாகப் பரவிவிட்டதை உறுதிப்படுத்துவது போல, கல்லூரி விட்ட பின்னர், தாசன் மாஸ்டர், லிங்கம் மாஸ்டர், இந்திரன் மாஸ்டர், கேதீஸ்வரன் ரீச்சர், கமலா ரீச்சர், மதி ரீச்சர் ஆகியோர் அவள் வீட்டிற்கு வந்தனர்.

அப்போது பாலசிங்கம் குளித்துக் கொண்டிருந்தார்.

பாலசிங்கம் கூறிய கதை முழுவதையும் திரும்ப அப்படியே சொல்லுக்குச் சொல் பிசகாமல் 'றெக்கோட்' போடும் வேலையை அம்மா மிகக் கச்சிதமாய்ச் செய்து முடித்து, தம்பிக்காய் ஒருமுறை அழுதும் ஓய்ந்தாள்:

நீதிக்காய் சமுதாயம் முழுதும் நின்று தவிக்கும் நிலைபற்றி எல்லோரும் ஆராய்ந்து முடிந்தபின் கதை கல்லூரிப் பக்கம் திரும்பியது:

இந்திரன் மாஸ்டர் சொன்னர்.

" நீங்கள் அண்டைக்கு எஸ். டி. எஸ். கூட்டத்திலே அந்தக் காசைக் கட்டச் சம்மதம் எண்டு சொல்லியிருக்கப்பிடாது. நீங்கள் தவறு செய்யாமல் இருக்கேக்கை நீங்கள் ஏன் காசு கட்டிற கதையைச் சொல்ல வேணும்... பிழையை எதிர்கொண்டு... நடந்த உண்மையை நிரூபிக்க வேணும். அதுதான் கெட்டித்தனம்...... "

" நான் அந்தக் காசை எடுக்கேல்லை எண்டு உங்களுக்கு எப்பிடித் தெரியும்? ஒருவேளை நானும் எடுத்திருக்கலாந்தானே! "

இந்திரன் மாஸ்டர் மெதுவாகச் சிரித்தார்:

" நாங்களும் இந்தப் பள்ளிக்கூடத்திலை ஐஞ்சாறு வருசம் படிப்பிக்கிறம். அப்பிடி ஒருத்தரை விளங்கிக் கொள்ற ஆற்றல்தானும் இல்லையெண்டா... பிறகு எங்களை வாத்தியார் எண்டு சொல்ல நாங்கள் வெக்கப்படவேணும்...... "

" நான் என்னை வாழைப்பழ யாபாரி எண்டு சொல்ல இப்பவும் வெக்கப்படுறதில்லை. ஏனெண்டால் நான் வாத்தி வேலைக்கு வரமுதல் வாழைப்பழ யாபாரம் செய்தனான். நீங்கள் உங்களை 'வாத்தி' எண்டு சொல்ல ஏன் வெக்கப்படுறியள்? "

லிங்கம் மாஸ்டர் தனது வழமையான நகைச்சுவையை உதிர்த்தபோது, குளித்துவிட்டு ஈரவேட்டியுடன் உள்ளே வந்தார் பாலசிங்கம்.

அவரது பார்வை அம்புகள் இந்திரன் மாஸ்டர் மீதும் பூரணி மீதும் மிக வேகமாய்ப் பட்டுத் தெறித்தன. முகம் திடீரென இருள் அடைந்தது. வீட்டின் உள்ளே போய் நின்று,

" பூரணி, எனக்குச் சாப்பாடு போடு... கெதியா. நான் வெளியிலை போகவேணும் " என்று சத்தமாய்ச் சொன்னார்:

அவள் எழுந்து உள்ளே வரமுதல் அவர் மீண்டும் வெளியில் வந்து, "பூரணிக்கு இப்ப உங்களோடை கதைக்க நேரமில்லே. நீங்கள் போயிட்டு வாருங்கோ...... " என்று கூறுவது அவள் காதுகளில் இடி போல விழுந்தது.

என்ன பண்பாடு? வீடு தேடி வந்தவர்களுக்கு என்ன மரியாதை? தான் அவர்களுக்கு இன்னும் தேநீர் கூடக் கொடுக்கவில்லை என்று நினைத்தபோது, அவமானம் அவளை விழுங்குவதுபோல் இருந்தது.

"இருங்கோ. தேத்தண்ணி குடிச்சிட்டுப் போலாம்...... "

எழுந்துவிட்ட விருந்தினரைச் சமாளிக்க அம்மா முனைந்தாள்.

"இல்லே. நாங்கள் போயிட்டுப் பிறகு வாறம்"

அவர்கள் வெளியேறிவிட்டார்கள். அவர்கள் என்ன சுயகௌரவம் கொஞ்சமும் இல்லாத மனிதர்களா?

நெஞ்சில் சுமையோடு மீண்டுமவள் துடித்தாள்.

அப்பா, அம்மா, தங்கைக்கும் பிரச்சினை சிறிதளவில் புரிந்திருக்கலாம். ஆனால் அவர்கள் அவளிடம் எதுவும் கேட்கவில்லை. அவளும் சொல்லவில்லை.

அதனால் அந்த வீட்டில் அன்று மீண்டும் ஒரு மௌனம் பேசியது. இம்முறை மிக நீளமாகவே அலட்டிக் கொண்டது.

வெளியே சென்ற பாலசிங்கம் இரவு ஒன்பது மணியளவில் திரும்பி வந்தார்.

வழமை போலவே... வாடைக் குளிரில் அவரது மேனித்திரி தீப்பற்றிக் கொண்டது.

இருளுக்குள் அவள் இருந்து குமைந்தாள்!

ஊடுருவிக் காதுவரையில் ஓடிய புருவங்களுக்கு வெகு ஆழத்தில் மங்கிக் களைப்புற்றுப் பதுங்கிய கண்களோடு உறங்கிப் போனாள்!

காலையில் கண்விழித்தவுடன் தன் மனவீதியில் வந்து செல்வோர் யாவரிடமும் மிக விநயமாய் முறையிட்டாள்.

'புரட்சி' ஒன்று செய்துதான் ஆகவேண்டும் என்று முதல் மனம் வலியுறுத்தியது.

"புரட்சி மனம் பெண்ணுக்குத் தேவைதான். ஆனால் அதுவே அவளை அழிக்கும் சக்தியாக அமைந்து விடக் கூடாது..." என்று பிரபல பெண் எழுத்தாளர் லட்சுமி ஒரு நாவலை முடித்திருப்பது நினைவுக்கு வந்து இரண்டாவது மனதைப் போராட வைத்தது;

பனிமழையில் குளித்துப் பாவாடை கட்டிநின்ற பூமியவளின் அழகை எவ்விதத்திலும் ரசிக்க முடியாமல் தலை சுற்றிக்கொண்டு வந்தது.

தம்பியைப் பற்றி ஏதும் தகவல் அறியும் முயற்சியாய் நிர்மலன் தனது வாகனத்தில் புறப்பட்டுச் சென்றான். அப்பாவும் சைக்கிளில் எங்கோ சென்றார்.

"போன கிழமை தானேடி ஒரு பேரிடியான செய்தியைச் சொல்லி அனுப்பினாய்... அதுக்கிடேலை அடுத்த இடியும் வந்திட்டுதேடி... பெத்த வயிறு எரியுதேடி..." என்று அம்மா அவளைக் கட்டிக்கொண்டு ஒப்பாரி வைத்தாள்.

"ஒரு சோலி சுறட்டு இல்லாத பெடியன்; நானும் முன் வீட்டிலை இருக்கிறன், ஒரு நாள் பாத்து அவன்ரை சத்தம் கேட்டதில்லை; அமைதியான

பிள்ளை...... '' என்று பங்கயம் மாமி தன் பங்கைச் செலுத்தினுள்.

பூரணிக்கு மனதிற்குள்ளே பெரும் அந்தரமாக இருந்தது. எங்காவது புறப்பட்டு ஓடவேண்டும் என்பதுபோல் ஒரு உணர்வு!

ஒவ்வொன்ருக வந்து சேர்ந்த ஊர்ப் பெண்கள் ஒப்பாரி வைக்க ஆயத்தப்படுத்திய போது, பூரணி அதைத் தடுத்து விட்டாள்.

'' அவனுக்கு என்ன நடந்தது எண்டு தெரியாமல் செத்தவீடு வைக்கப்பிடாது. ஒரு வேளை எங்கையும் ஆஸ்பத்திரியிலே சுகமாய் இருக்கிருன் எண்டால்...? '' என்பது அவளது வாதம்.

அவளது நியாயம் பலராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டதால் ஒருவரும் அழவில்லே. அம்மா மாத்திரம் விம்மிக் கொண்டே இருந்தாள்.

'தேடுதல் வேட்டை' நடத்தப் போன பலரும் தோல்வியுடன் திரும்பினர்.

# 11

இவள் ஒரு கறுப்பு மலர் - அதுவும்
இருட்டில் இருக்கும் கறுப்பு மலர்,
இவள் ஒரு செவ்வாழை
பாத்திகட்ட யாருமில்லாமல்
பாதி வழியில் பயணத்தை
முடித்துக் கொண்டவள்.
அவள் இருந்த ஆச்சிரமமும்
அவளிருப்பைச் சிரமப்படுத்தியதாம்.
என் கவிதையில் அவள்
அழுதுகொண்டேயிருக்கிருள்.

— முல்லையூரான் —

educer Demo

பூரணி எழுந்து உடுப்பை மாற்றிக் கொண்டு வெளியே வந்தாள். தேநீரை உறிஞ்சிக் கொண்டே முற்றத்தில் நின்ற முருங்கை மரத்தைப் பார்த்தாள்.

குயில் ஒன்று மரத்தின் உச்சியில் இருந்து பாடிக் கொண்டிருந்தது; அதன் குரலில் தொனித்தது,

"ஒருநாள் வாழ்வு முடிந்துவிட்ட திருப்தியும் மகிழ்வுமா அல்லது 'இந்த நாள் முடிந்துவிட்டதே' என்ற கவலையா" என்பதை அறிந்துகொள்ள அவள் மிகக் கடுமையாக முயற்சி செய்தாள்.

நீண்ட நேரமாகியும் அவளால் ஒரு தீர்மானத்திற்கு வரமுடியவில்லை.

தம்பி பற்றிய சிந்தனைகள் சற்று ஓயும் வரை அம்மாவைத் தன்னுடன் இருக்குமாறு பூரணி கேட்டுக் கொண்டபடி, அம்மா இப்போது சில மாதங்களாக இங்கு இருக்கிறாள்.

'மோர்னிங் சிக்னெஸ்' இப்போது அவளைச் சற்று அதிகமாகவே பாதிப்பதால் அம்மா இருப்பது அவளுக்கும் உதவியாக இருந்தது.

குயிலைப் பார்த்து முற்றத்தில் நின்றபோது, அப்பாவும் தங்கை ஆரணியும் திடீரென்று வந்து சேர்ந்தனர். அவர்களைக் கண்டவுடன்—

—அம்மாவுக்கு இன்னும் மேல் தாடையிலும் கீழ் தாடையிலும் ஒரு பல்லும் விழாமல் அழகான வரிசைப் பற்கள்!

"என்ன இந்த நேரத்திலை வாறியள்? வீடு கவனமாப் பூட்டிப்போட்டு வாறியளோ? ஒரு தவால் கூடப் போடாமல் வந்திருக்கிறியள்"

— அம்மா அங்கலாய்த்தாள்.

"எல்லாம் நல்ல விஷயந்தான். முந்தி ஒருக்கால் ஆரணிக்குப் பேசி வந்த ஆக்கள். அவை வாற வெள்ளிக்கிழமை பொம்பிளை பாக்க வாறதெண்டு சொல்லி அனுப்பியிருக்கினம். அதுதான் அவையை இஞ்சை வரச் சொல்லிப்போட்டு நான் ஆரணியைக் கூட்டிக் கொண்டு வந்திட்டன்."

அவர்களுக்குத் தேநீர் கொண்டுவரவென அம்மா உள்ளே சென்றபின் பூரணி கேட்டாள்.

"சீதனப் பேச்சுக்கள் எல்லாம் சரிவந்திட்டுதோ?"

"அதிலைதானே முந்திக் குழம்பிக் கிடந்தது; எனக்கொரு ஆம்பிளைப் பிள்ளையும் இருக்கேக்கை உங்களிட்டை ஒண்டும் கேக்கிறது சரியில்லை எண்டு இருந்தனான். இப்ப...... உன்னட்டைத்தான் கேக்கப் போறன். உதவி செய்வாய் எண்ட நம்பிக்கையிலை அவை கேட்டதைத் தாறன் எண்டு சொல்லிப் போட்டன்......"

அப்பா இப்படிச் சொன்னபோது ஆரணி புளகித்துச் சிரித்ததைப் பூரணி கவனிக்கத் தவறவில்லை;

கிளர்த்திக் கொண்டு வெளியேறத் துடிக்கும் உயிரின் உருவம் உள்ளே அசைந்ததனால் ஒரு கணம் இன்பம் நிறைந்த வேதனையை அனுபவித்த பூரணி அதிலிருந்து விடுபட்டபின் சொன்னாள்:

"காசு இவர் நிறையத்தான் சேத்து வைச்சிருக்கிறார். எனக்குக் குறையில்லை. ஆனபடியால் நீங்கள் எனக்குச் சீதனமாத் தந்த காணியைத் திருப்பித் தரலாம். ஆனால்......"

அவள் முடிக்க முதல்,

"ஆனால் எண்டு ஒண்டும் சொல்லாதை பிள்ளை. தம்பியும் நம்பிக்கை இல்லாமல் போயிட்டான். நீ உழைக்கிறனி. அவள் வீட்டிலை இருக்கிற பிள்ளை; நீ தான் அவளைக் கவனிக்க வேணும்......"

அப்பா உணர்ச்சி வசப்பட்டார்.

பாலசிங்கம் எங்கோ வெளியில் சென்றுவிட்டார் என்பதை உள்ளே பார்த்து உறுதி செய்தபின் பூரணி சொன்னாள்.

" அதில்லையப்பா. நீங்கள் முதலாவது மாப்பிள்ளைத் தெரிவிலை பிழை விட்டியள். அது மாதிரி இதிலையும் பிழை விடப்படாது. காசுதான் பெரிசெண்டு, நிறையக் காசு குடுத்து ஒரு பணக்கார மாப்பிள்ளையை எடுத்துப் போட்டால் எல்லாம் சரியெண்டு நினையாதேங்கோ. அதைவிட அவள் கலியாணம் செய்யாமல் இருக்கிறது திறம் "

" அக்கா, உனக்குக் காணிதர விருப்பமில்லாட்டி விடு. அதுக்காண்டி— ... "

ஆரணி புரிந்து கொள்ளாமல் பேசத் தொடங்கவே, அவள் இன்னும் கனவுகளைத் தின்று வாழும் காலத்தில் இருக்கிறாள் என்பதைப் பூரணி புரிந்து கொண்டாள்;

" நான் சொல்றது உங்கள் ஒருத்தருக்கும் விளங்கேல்லை. அவரைப் பற்றி நானே குறை சொல்லப்பிடாது. ஆனாலும் நான் சொல்றது மிகையில்லாத மெய். நல்ல சாதி. நல்ல பணம். ஆனாலும் அவரோடை நான் மகிழ்ச்சியாய் இருந்த நாள் இல்லை. ஆனபடியால் தான் சொல்லிறன். நீங்கள் பாக்க வேண்டியது வேறை விஷயங்கள்...... "

அவள் கண்ணீரை விழுங்கிக் கொண்டு சொன்ன போது அம்மாவும் தேநீர் கொண்டு வந்துவிட்டாள்

" ம்...... சொல்லு " அப்பா அரை மனதுடன் கேட்டுக் கொண்டிருந்தார்.

" சாதி பாக்கத் தேவையில்லை. சமயம் பாக்கத் தேவையில்லை. பணம் இருக்கோ எண்டும் பாக்கத் தேவையில்லை; ஆனால் படிப்பைப் பாக்க வேணும். அறிவைப் பாக்க வேணும். கட்டாயம் மாப்பிள்ளை இவளைவிடக் கூடுதலான அறிவு பெற்றிருக்க வேணும்... "

"வயதும் பாக்கத்தான் வேணும். வயது கூடுதலா இருந்தால்தான் அவை ஒரு மகளை, ஒரு தங்கையை வைச்சுப் பாக்கிற மாதிரி அன்பாய் இருப்பினம். ஒரு நாலைஞ்சு வயது கூடவாய் இருக்க வேணும்"

"மற்றது மிச்சம் கவனமாக் குணத்தைப் பாக்க வேணும். விட்டுக் குடுக்கிற மனம் இருக்க வேணும். பொம்பிளையும் தன்னைப் போலை ஒரு உயிர் எண்டு நினைக்க வேணும். பொம்பிளை தன்ரை அடிமை எண்டோ அல்லது உணர்ச்சி ஒண்டும் இல்லாத சடம் எண்டோ நினைக்கிறவரா இருக்கப்பிடாது..."

"தன்னை நம்ப வேணும். தாலி கட்டின பிறகு அதேயளவுக்குத் தன்ரை மனுசிசையும் நம்பவேணும். நிறக்கண்ணாடி போட்டு உலகத்தைப் பாத்த மாதிரி, சந்தேகக் கண்ணாடி போட்டுப் பாக்கிறவரா இருக்கப்பிடாது. குடும்ப வண்டியிலை தான் ஒரு சில்லு எண்டு உணர்ந்து கொண்டு அரைவாசி வேலையைத் தான் செய்யக் கூடியவரா இருக்க வேணும்... உலகத்துக்குப் பயப்பிடுறவரா இருக்கப்பிடாது. தன்ரை மனச் சாட்சிக்குப் பயப்பிடுறவரா இருக்கவேணும்..."

"தான் அவளிலை அன்பு காட்டினத்தான் அவளும் தன்னிலை அன்பு காட்டுவாள் என்பதை விளங்கிக் கொள்ளக் கூடிய அறிவு இருக்க வேணும்..."

தன்னை மறந்து உணர்ச்சி வசப்பட்டுப் பேசிக் கொண்டு சென்றதில் வாய் உலர்ந்து சிறிதே நிறுத்தியவள்,

"இவ்வளவும் இல்லாட்டி அவளுக்கு நீங்கள் கலியாணம் செய்ய வேண்டாம்"

என்று முடிவுரைபோல் சொல்லி நிறுத்தியபோது கண்களில் நீர் நிரம்பியிருந்தது.

அவள் பிரசங்கம் செய்த முறையில் அவள் வாழும் நிலை அவர்கள் மூவருக்கும் புரிந்திருக்க வேண்டும். சிறிதுநேர மௌன விநாடிகளின்பின் துக்கம் நிறைந்த ஆதரவுடன் அம்மா சொன்னாள்,

" இனிப் போய்ச் சாப்பிடன். இடியப்பம் ஆறிப் போனா... பிறகு சாப்பிட மாட்டாய்......"

அடுத்த நாள் கல்லூரிக் கன்ரீனில் இருந்தபோது அவ்விடம் வந்த இந்திரன் மாஸ்டர்,

" ரீயைக் குடிச்சிட்டுப் பிறகு யோசியுங்கோவன். ரீ ஆறிப்போயிட்டாப் பிறகு குடிக்க மாட்டீங்கள் " என்று சொன்னபோது, திடீரென்று இந்த அன்னை யின் பரிவு பூரணிக்கு நினைவு வந்தது.

வெளியே இளங்காற்றுச் சிலுசிலுவென்று அடித் துக்கொண்டிருந்தது. தவணைப் பரீட்சையில் அவளுக் கான ' சுப்பர்விசன் ' பதினொன்றரை மணியுடன் முடிந்து போனதால், களைப்பு மாற ஒரு ரீ குடிப் போம் என்று கன்ரீனுக்கு வந்திருந்தாள் பூரணி.

பரீட்சை மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் வேறு மனவெளி அரங்கில் கூத்தாடிக் கூத்தாடி அவளை அலையச் செய்து கொண்டிருந்தன.

இம்முறை அவளைப் பத்தாம் வகுப்புப் பரீட்சைக் குப் பிரதம மேற்பார்வையாளராய்ப் (*Chief Supevisor*) போட்டிருந்தார்கள். காலையில் எட்டரை மணிக்குப் பரீட்சை மண்டபத்திற்குப் போய்ப் பார்த்தால்... அங்கு கடமை செய்ய வேண்டிய இரண்டு ஆசிரியர் கள் ' லீவு ' என்று தெரிந்தது. சோதனை காலத்தில் ' லீவு ' எடுப்பது சில ஆசிரியர்களின் ' வழக்கம் ' என்பது அவளுக்குத் தெரியாததல்ல.

மாணவர்களை அமைதிப்படுத்திவிட்டு... எம். சி. கியூ. விடைத்தாள்களை எடுத்து, "மாஸ்டர்... இதை ஒருக்கால் குடுங்கோ..." என்று பத்மநாதன் மாஸ்டரிடம் கொடுத்து விட்டுத் தான் வினாத்தாள்களை 'விறுவிறென்று' விநியோகம் செய்தாள். திரும்பி மேற்பார்வையாளர் மேசைக்கு வந்து பார்த்தால்... எம். சி. கியூ. விடைத்தாள்கள் அப்படியே மேசையில் இருக்கின்றன.

பத்மநாதன் மாஸ்டரைப் பரீட்சை மண்டபத்திலேயே காணவில்லை... !

"பொம்பிளையள் சொல்லுற வேலையளைச் செய்து கொண்டு அங்கை ஆர் நிக்கிறது...?" என்று அவர் கீழே போகையில் லிங்கம் மாஸ்டரிடம் சொல்லிக் கொண்டு போனது தனக்குக் கேட்டதாய்ப் பின்னர் தர்மராஜா ரீச்சர் சொன்னாள்.

ஆக... பெண்ணடிமைத்தனம் என்பது... வீட்டில் மாத்திரமல்ல... எல்லா இடத்திலுந்தான்... !

மிக ஆழமாய்ச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, இந்திரன் மாஸ்டரின் பார்வை அவளை ஊடுருவிப் பாய்வதாய் இருந்தது அன்று! வழமையாய் யாருடைய கண்ணையும் நேருக்குநேர் பார்த்துக் கதைக்கும் இயல்புடைய பூரணிக்கு அன்று அது முடியாமல் இருந்தது ஆச்சரியமாக இருந்தது.

"இண்டைக்கு உங்களோடை கொஞ்சம் ஆறுதலாய்க் கதைக்க வேணும்..." என்ற பீடிகையுடன் அவர் வந்து அவளுக்கு முன்னால் அமர்ந்தார்.

"சொல்லுங்கோ. அப்பிடி என்ன விசேஷமான கதை?"

அவள் வாய் அசைந்த போதிலும் முகத்தில் உயிர்த்துடிப்புக் காணப்படாததை அவர் கவனித்திருக்கலாம்.

" உங்கடை அவரோடை நீங்கள் சந்தோஷமாத் தான் வாழ்க்கை நடத்திறீங்களா? "

எடுத்த எடுப்பில் இந்தக் கேள்வி அவளைத் தடுமாற வைத்துவிட்டது. முன்னால் இருந்த தேநீரைச் சுவை உணராமலே சுகித்தபடி அவள் கேட்டாள்.

" ஏன்..? அதைப்பற்றி இப்ப என்ன...? "

கேட்டுவிட்டு மலங்க மலங்க விழித்தாள்.

" உங்கடை தம்பியைப் பற்றி விசாரிக்க நாங்கள் உங்கடை வீட்டை வந்த நாளிலை இருந்து இந்தக் கேள்வி என்னைக் கூடுதலா அரிக்குது. அதுக்கு முந்தியும் பிந்தியும் நான் சில பல விஷயங்களை அறிஞ்சன் "

" என்ன சொல்லுறியள்? "

" உங்களுக்கும் பாலசிங்கத்துக்கும் மனக் கசப்பு இருக்கெண்டும் அதுக்கும் எனக்கும் ஏதோ முடிச்சு இருக்கெண்டும் கேள்விப்பட்டன்... "

அவள் கொஞ்ச நேரம் விறைத்துப்போய் உட்கார்ந்திருந்தாள். இரவு நடந்த நிகழ்வு மனதில் ஓடி வந்தது.

வழமையாக பாலசிங்கம் சாப்பிட்ட பின்னரே அவள் சாப்பிடுவது உண்டு. நேற்றிரவு முதல்முறையாக அந்த வழமையை மீறிவிட்டாள். அம்மாதான் வற்புறுத்தினாள்.

" பிள்ளை வயித்தோடை பசி இருக்கப்பிடாதெடி. எட்டு மணியாகுது. நீ சாப்பிடன். அவர் பிறகுவந்து சாப்பிடட்டன். அவற்றை சாப்பாட்டையே நீ தின்னப் போறாய்...... "

அவளுக்கும் நல்ல பசியாக இருந்தது. அப்பாவும் சொன்னார்,

PDF Reducer

"கொம்மா... உன்னையும் ஆரணியையும் வயித்திலே வைச்சிருக்கேக்கை ஒரு நாளைக்கு அஞ்சாறு தரம் சாப்பிடுவா...... இந்த நேரத்திலே உதைப் பாக்க ஏலாது......"

எட்டரை வரை பார்த்தாள். பாலசிங்கம் வரவில்லே. சாப்பிட்டு விட்டாள். கோப்பையைக் கழுவிக் கொண்டிருக்கும் போது ஸ்கூட்டர் முற்றத்தில் வந்து நின்றது.

முகத்தில் நெருப்பாய்ப் படர்ந்து சுடர்விட்டது, உக்கிரம். அவள் கவனித்தாள்;

ஒன்றும் பேசாமல் சாப்பிட்டவர் படுக்கைக்கு வந்தபோது கேட்டார்.

"கொப்பரும் ஆரணியும் ஏன் வந்திருக்கினம்?"

educer.Demo

"ஆரணிக்குக் கலியாணம் பொருந்தியிருக்காம்......"

"அதுக்கு...?"

"வெள்ளிக்கிழமை இஞ்சைதான் பொம்பிளே பாக்க வரினமாம்...."

"ம்......"

"என்னட்டையும் உதவி கேக்கினம்..."

"என்ன உதவி?"

"காணி, பூமி, பண உதவி....."

"நீ உழைச்ச காசிலே எத்தினை காணி பூமி வாங்கி வைச்சிருக்கிருய் குடுக்க......?"

"எனக்கு அவை தந்ததைக் குடுக்கலாந்தானே!"

" அப்பிடியும் எண்ணம் இருக்கோ? "

" தம்பியும் இல்லை. அவை ஆரை நம்பி இருக்கினம்? "

" உனக்குச் சீதனம் தந்த காணி பூமி இப்ப எனக்கு உரிமை. நான் ஓமெண்டு சொல்லாமல் குடுக்கேலாது...... "

" எங்களிட்டைப் போதிய அளவு இருக்குத் தானே. அளவுக்கு மேலை வைச்சிருந்து என்ன செய்யிறது? எவ்வளவு இருந்தாலும் மூண்டு தரம்தான் சாப்பிடலாம். ஒரு கட்டில்லைதான் படுக்கலாம்...... "

" நீ இப்ப என்னையும் பாக்காமல் ஏழெட்டுத் தரம் சாப்பிடுறாய். இரண்டு மூண்டு கட்டில்லை படுக்கிறாய்... பேந்தென்ன? "

மிருந்த கைப்புடன் அவர் கொச்சையாகத் திட்டிக் கொண்டிருந்தார். சிறிது நேரம் பொறுத்துப் பார்த்துவிட்டு அவள் சொன்னாள்.

" நான் இப்ப குழந்தை வயித்தோடை இருக்கிறன். என்னை நீங்கள் வேதனைப்படுத்திறது குழந்தையைப் பாதிக்கும். இந்தக் காலத்திலை மனம் அமைதியாயும் சந்தோஷமாயும் இருக்க வேணுமெண்டு உளவியல் அறிஞர்கள் சொல்லினம்...... "

" குழந்தையைப் பாதிச்சா எனக்கென்ன? அது என்ரை குழந்தையோ ஆருக்குத் தெரியும்...... "

அவள் ஆவேசத்துடன் கட்டிலில் எழுந்து அமர்ந்தாள்.

" திருப்பிச் சொல்லுங்கோ பாப்பம்... "

பாலசிங்கத்தின் கண்களை நேரே பார்த்தபடி சத்திய ஆவேசத்துடன் கேட்டாள்.

" ஏழு வருசமாய் எனக்கு வராத பிள்ளை இப்ப எப்பிடி வந்தது...? அதுதான் எனக்குச் சந்தேகமா யிருக்கு...... "

இதற்கு மேல் அவள் பேசவில்லை; தனக்கும் அவ ருக்குமிடையில் சிறிது சிறிதாக இருந்த விரிசல்கள் இந்த ஏழு வருட காலத்தில் கொஞ்சமும் நிரவுப் படாமல் பெரிதாகி விட்டதை ஐயமின்றி உணர்ந் தாள்.

" தற்கொலை செய்யலாம் " என்றொரு வெறி மன எழுச்சியில் ஒரு சில கணப் பொழுதுகளில் ஏற் பட்டபோதும், அறிவு மேலெழுந்து அதை மழுங் கடித்துவிட்டது.

" நான் தற்கொலை செய்து கொண்டால் அவரது சந்தேகம் சரி என்று ஆகிவிடும்...... "

நித்திரை வர மறுத்தது! யுக யுகாந்திர அவஸ் தைபோல் ஒரு உணர்வு!

பாலசிங்கம் அமைதியாக உறங்கிக் கொண்டிருந் தார்.

இரண்டு " வலியம் " அவளுக்குச் சிறிதளவு உதவி செய்தது.

# 12

பில்லியன் பில்லியன் தலைகளில்
ஏறி நின்று
உச்ச உரப்பில்
சத்தமாய்ச் சொன்னேன்.
ஏழு மலைகளில் தெறித்துத் தெறித்து
உலக சமுத்திர அலைகளை மேவி
பாலைவனங்களின் பரப்பையுங் கடந்து
எங்கும் கேட்ட இதய கீதம்
துயிலும் ஒரு நாள் கலையும்

— விழி —

கன்ரீனின் யன்னலூடாக வெளியே தெரிந்த வானத்தைப் பார்த்தாள் பூரணி;

ஒன்றுக்குள் ஒன்று புகுந்து கலந்து, நெருங்கி விரிந்து மறுபடியும் நுழைந்து சொருகின.

கண்களில் நீர் கோத்துக் கொண்டது;

சென்ற வாரம் காலையில் ஒரு நாள் இன்னொரு நிகழ்வு—

இரவும் பகல் முழுவதும் பெரு மழை பெய்ததால் வளிமண்டலம் நிறையவே ஈரப்பதனைச் சேர்த்துக் கொண்டது.

"மாசி மாதத்திலே இப்பிடி மழை தாங்கள் அறிஞ்சவரையிலே ஒரு நாளும் பெய்திருக்காது. என்னவாக்கும்......"

வழியில் எதிர்கொண்ட காஞ்சி இவ்வாறு கூறியபடி அவளை விலத்திச் சென்றான்.

"செம்மண் நிலத்திலே குண்டும் குழியுமாக நீர் தேங்கி... நடந்து போறதுகூட நிதானம் தேவைப்படுற வேலையாயிருக்கு இப்ப! கொஞ்சம் கவனம் இல்லாமல் இருந்திட்டா வழுக்கி விழுந்திடுவன் போலை இருக்கு......"

என்று தனக்குள் சொல்லிக் கொண்டே, பெருவிரலை நன்றாக ஊன்றிக் கவனமாய் நடந்தாள் பூரணி.

அவள் வீட்டிலிருந்து கல்லூரிக்கு வந்து கொண்டிருந்தாள்!

"நான் கவனமாய் நடக்க வேண்டி இருக்கிறதுக்கு என்ரை உடம்பின்ரை நிறை கூடிவிட்டதும் ஒரு காரணமாய் இருக்கலாம்; முந்தியைப் 'போலை மெலிசாய் இருந்தால் இப்ப ஓடி ஓடி நடந்திடுவன்... "

இந்த நினைவு ஓர் இன்பம் கலந்த திருப்தியையே அவளிடம் ஏற்படுத்தியிருந்தது.

பங்கயம் மாமியின் சகோதரி சௌந்தரி வீட்டை அவள் கடந்து கொண்டிருக்கையில் 'குசுகுசுவென

மெலிதான குரலில் கேட்ட உரையாடல் அவளது கவனத்தைத் திடீரென ஈர்த்தது.

"சின்ன வயிருக்கிடக்கு... எத்தினை மாசம் இப்ப உவவுக்கு?"

"நாலைஞ்சு மாதம் இருக்க வேணும்..."

"ஏழெட்டு வருஷம் பிள்ளை குட்டி இல்லாமல் இருந்தவை. இப்ப... ஏதோ திடீரெண்டு......"

"எந்தப் புத்திலை எந்தப் பாம்பு குடியிருக்குதோ ஆர் கண்டது பாலசிங்கத்துக்கு உதிலை அவ்வளவு நம்பிக்கை இல்லையெண்டும் ஒரு கதை......"

இதற்கு மேல் தன் காதுகள் அந்த உரையாடலை வாங்கிக் கொள்ளாததும் நல்லது என்றே நினைத்தாள் அவள்.

நெஞ்சின் மேல் ஒரு பெரிய பாறுங்கல்லை வைத்து அழுத்தியது போல—

அவளால தாங்கிக் கொள்ள முடியவில்லைத்தான்.

யௌவனத்தின் கடைசிக் காலத்தில் — நாற்பது வயதுக்கும் பிறகு — பிள்ளை வாங்கிக் கொண்டவர்கள் இந்த ஊரில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? ஏன் பங்கயம் மாமி கூடத்தான் —

ஆறேழு வருஷத்துக்குப் பிறகு எங்களுக்குப் பிள்ளை வந்திருக்கும் எண்டதை இவையாலை உண்மையிலை நம்ப முடியேல்லையா? அல்லாட்டி அதை இவை நம்ப விரும்பேல்லையா?

அன்று பகல் முழுவதும் கல்லூரியில் அரித்துக் கொண்டே இருந்த உணர்வு!

*' Sticks and stones may break your bones*
*But words can never hurt you '*

(தடிகளும் கற்களும் உன் எலும்புகளை நொருக்கி விடலாம். ஆனால் சொற்கள் உன்னைப் புண்படுத்த முடியாது)

என்ற 'டேயில் கார்னேகி' யின் வார்த்தைகளை அடிக்கடி நினைவுபடுத்தி ஆறுதல்பட முயன்றாள்.

மாலையில் வீடு சென்று உடுப்புக்கூட மாற்றாமல் அப்படியே படுக்கையில் விழுந்து தன்னைத்தானே தேற்றிக்கொள்ள முயன்றாள்.

*" No one can humilate or disturb you and me either - unless we let him... "*

(நாங்கள் அனுமதித்தாலொழிய யாரும் எமது அமைதியைக் குலைத்துவிட முடியாது)

நான் இப்போது அமைதி பெறாவிட்டால் இதெல்லாம் படித்ததில் அர்த்தமில்லை என்று நினைத்தாள்.

" பூரணி பிளாஸ்கிலே தேத்தண்ணி இருக்கு. வாத்துக் குடியன்... "

வெளியில் அம்மா குரல் கொடுத்தாள்.

தேநீரோடு வெளியில் வந்தபோது அம்மா சொன்னாள்,

" கொப்பரும் தங்கச்சியும் அங்கை என்ன செய்யினமோ தெரியாது; ஒரு கறியும் சோறும் தான் வைப்பினம் "

" அவக்குப் பாலுக்குச் சீனியில்லை என்டு கவலை. எனக்குக் கூழுக்கு உப்பில்லை என்டு கவலை...... " எரிச்சலாக இருந்தது பூரணிக்கு:

"நீங்கள் வேணுமெண்டா இனிப் போங்கோவன். நான் இனித் தனியச் சரிக்கட்டுவன்..." என்ருள்.

"இல்லை; இல்லை. சும்மா சொன்னனுன்" என்று சமாளித்தாள் அம்மா. இப்போது ஆரணியும் அப்பாவும் வந்து விட்டதில் அவளுக்கு மகிழ்ச்சி!

சுழற்றியடித்த காற்றில் மேகங்கள் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தன. அதே போன்ற குழப்பத்தை மனதிலும் அனுபவித்த பின்னர்

"எனக்கும் இன்னுந்தான் விளங்கேல்லை" என்று இந்திரன் மாஸ்டரைப் பார்க்காமலே சொன்ஞள்.

"என்ன விளங்கேல்லை"

"நீங்கள் என்ன கேக்கிறியள் என்டு விளங்கேல்லை..."

PDF Reducer

வானம் இப்போது என்ன நேரம் என்று புரிந்து கொள்ள முடியாத ஒரு மப்புத் தோற்றத்தையே காட்டிக் கொண்டிருந்தது.

மனதிற்குள் வார்த்தைகளை நிதானிப்பவர் போல் சில கணப் பொழுதுகளை அமைதியாகக் கழித்த பின்னர் இந்திரன் மாஸ்டர் சொன்ஞர்,

"சரி, நான் வெளிப்படையாவே கேக்கிறன்: என்னேடை பழகினதாலை அல்லது பழகிறதாலை உங்களுக்கு பாலசிங்கத்தாலையோ அல்லது இந்தச் சமுதாயத்தாலையோ நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கா?"

யாரிடமாவது கொட்டி ஆற வேண்டும் போல மனம் நிறைந்து போயிருந்த உளைச்சல்கள்!

தன்னை அன்புடன் விசாரிக்கும் இந்திரன் மாஸ்டரை ஒரு நல்ல நண்பனுய் நினைத்து அனைத்தையும் கொட்டித் தீர்த்தாள் பூரணி! பெரியதோர் பாரம் மனதை விட்டு இறங்கியது போல் இருந்தது. இறுதியாக, கண்களை அழுத்தித் துடைத்துவிட்டு முடிவுரை போல் சொன்னுள்,

"நான் அவரை விட்டுப் பிரிய வேணும் எண்டு பலதரம் யோசிச்சிருக்கிறன்: பிறகும் எங்கடை சமுதாய வரம்பை மீறி நான் போறதாலே ஏற்படக் கூடிய பிரச்சினையளை நினைச்சுப் பாத்திட்டு அமைதி அடைஞ்சிருக்கிறன். அவற்றை பிள்ளை பிறந்தாப் பிறகு... அவர் கொஞ்சம் மாறிடுவார் எண்ட எதிர் பார்ப்பிலேயும் பொறுத்துப் பாத்தன். ஆனு... இனி மேல் அதிலை அர்த்தமில்லை எண்டு தெரிது. ஏனெண்டால் அவர்... அந்தப் பிள்ளையையும் சந்தேகத்தோடையே பாக்கப் போறுர்......"

educer Demo

அவள் எல்லாவற்றையும் சொல்லி முடிக்கட்டும் என்று மௌனமாய் இருந்த இந்திரன் மாஸ்டர்,

"என்ரை மனதிலேயும் இந்தப் பிரச்சினை கொஞ்ச காலமாவே உறுத்திக் கொண்டு வருது..." என்ருர்.

ஒரு சின்ன அதிர்வு அவரிடமிருந்து இப்போது அவளையும் தொற்றிக் கொண்டது போலிருந்தது:

"முக்கியமா இப்ப... வயிற்றிலே பிள்ளையையும் வைச்சுக்கொண்டு நீங்கள் சந்தோஷமா இருக்க வேண்டிய காலம். ஆனுல் அப்பிடி நீங்கள் இருக்கிறதாயோ அப்பிடி இருக்கிறதுக்கு ஏதும் முயற்சி செய்யிறதாயோ தெரியேல்லை......"

இப்போ தெல்லாம் 'ஸ்ரால் றூமில்' அவள் யாருடனும் கதைக்காமல் நேரத்தை மௌனமாகவே கரைத்து விடுவதையும் அவர் கவனித்திருக்கலாம்;

தான் மனதில் இருந்தது முழுவதையும் கொட்டி விட்டதுபோல் அவரும் சொல்ல வருவதைச் சொல்லி முடிக்கட்டும் என்று அவள் பார்த்திருந்தாள்.

" என்ரை கஷ்டங்கள் பலதிலையும் நீங்கள் உதவி செய்திருக்கிறியள். அதை மறந்து போற சுபாவமும் எனக்கில்லை...... "

ஒரு முறை இவருக்கு அவசரமாய்க் காசு தேவைப்பட்ட சமயத்தில் இவர் பலரிடம் கேட்டு அலுத்து இறுதியாகத் தன்னைக் கேட்டபோது தான் எந்தவிதப் பொறுப்புமின்றிக் கொடுத்து உதவியதைத் தான் அவர் நினைவு கூருவதாக அவள் நினைத்தாள்.

" என்னிலை நீங்கள் நல்ல அபிப்பிராயம் வைச்சிருக்கிறியள். நம்பிக்கையும் வைச்சிருக்கிறியள். அதைப் பாதுகாக்க வேண்டிய கடமையும் எனக்கிருக்கு...... "

PDF Reducer

தபால் கொண்டுவந்து தருகிற பையனிடம்கூட ஒரு நெருக்கத்தை உடனடியாக அடைந்து விடுகிற சுபாவம் இவருக்கிருக்கிறது. அதனாலேயே எனக்கும் நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அது மட்டுந்தான் என்று சொல்ல முடியாது. இன்னும் பல காரணங்கள் !

அவள் நினைவுப் பாதையில் நடந்து கொண்டிருக்கும்போது அவர் கேட்டார்.

" இப்ப உங்களுக்கு நான் என்ன வகையிலை உதவி செய்யலாம்? தயங்காமல் சொல்லுங்கோ... "

அவளது நெஞ்சம் சிறிதளவு புஷ்பித்தது ! மன நிறைவோடு தனக்கு உதவ வரும் ஒரு உயிர் ! துன்பத்தில் உதவ வரும் ஒரு உயிர் !

" இன்பத்திற்குத் துணையாக யாராலும் முடியும். ஈ, எறும்பாலும் முடியும். நம் உடம்பில் நல்ல உணவு கிடைக்கும்போது, ஈயும் எறும்பும் நம்மைக் கேளாமலே வந்து மொய்க்கின்றன. அதுபோல இன்பம் உள்ளபோது யார் வேண்டுமானாலும் வந்து மொய்த்துக் கொள்வார்கள். ஆகையால் இன்பத்திற்குத் துணையாக வல்லாரை நம்பாதே. துன்பத்திற்குத் துணையாக இருக்க வல்லாரைத் தேடு. உறவானாலும், நட்பானாலும், காதலானாலும் இப்படியே தேடு... "

மு. வ. அவர்களின் கருத்தொன்று திடீரென ஓடி வந்து மனதில் நின்றது.

" இவர் ஒரு நல்ல நண்பர். சமுதாயத்தில் இப்படியானவர்களைக் கண்டு பிடிப்பது அருமை. கண்டு பிடித்தால் அவர்களது நட்பை இழந்து விடக் கூடாது...... "

அவள் தொடர்ந்த சிந்தனையில் ஆழ்ந்திருக்கையில் அவர் மீண்டும் கேட்டார்:

" சொல்லுங்கோ... நான் என்ன உதவி செய்யலாம்? "

இவருடைய உதவியைப் பெற்றுக் கொள்வதில் தவறில்லை என்ற முடிவுக்கு வந்தவள்,

" நீங்கள் இப்பிடிக் கேக்கிறது என்ரை மனதுக்கு நல்ல இதமா இருக்கு: — இந்த ஆடிக் காத்தைப் போல — அவரிட்டை இருந்து எப்பிடியாவது — சட்டபூர்வமாய் அல்லது சட்டபூர்வமில்லாமல் — நான் பிரிஞ்சு தனியா வாழுறதுக்கு நீங்கள் உதவி செய்யலாம் " என்றாள்.

" அவரை விட்டுப் பிரியிறது எண்ட முடிவை நீங்கள் மறு பரிசீலனை செய்யத் தேவையில்லையா? "

" இல்லை...... "

" பிறகு வரக்கூடிய கஷ்டங்கள் — சமுதாயம் அள்ளி எறியக்கூடிய அம்புகள் — சொல்லம்புகள்..? "

" எல்லாம் யோசிச்சுப் பாத்திட்டன். எதுவும் என்னை இதைவிட வேதனைப்படுத்த முடியாது... "

" *But Nothing can bring you peace but yourself* "

(உன்னைத் தவிர வேறுயாரும் உனக்கு அமைதியைத் தரமுடியாது)

" அதுதான்... எனக்கு ஒரு வீடு வாடகைக்குப் பாத்துச் சொல்லுங்கோ; அதிலை ஒரு அறையை யாரும் ' கேள்ஸ் 'க்கு வாடகைக்கு விட்டிட்டு மிச்சத்திலை நான் அம்மாவோடை அல்லது தனிய இருக்கலாம்...... "

" பாலசிங்கம் வந்து தன்ரை வீட்டுக்கு வரச் சொல்லிக் கேக்க மாட்டாரோ? "

" கேக்க மாட்டார். கேட்டாலும் நான் போக மாட்டன்... "

" வேறை ஏதும் தீமை செய்ய முயல மாட்டாரோ? "

" அப்பிடி ஏதும் செய்ய மாட்டார் எண்டுதான் நினைக்கிறன்... "

" சரி... அப்ப உதிலை சந்தியிலை...... பொன்னம்பலத்தாற்றை வீடு சும்மா இருக்குது... அவை எல்லாரும் வெளிநாடு போயிட்டினம்; நான் கேட்டுப் பாத்திட்டு நாளைக்குச் சொல்லிறன்...... "

அன்றிரவு வெளியே மழை கோடிக்கால் பந்தலிட்டுக் கொண்டிருந்த போதும், பூரணி அடித்துப் போட்டாற் போல் தூங்கினுள் — வேதனையோடு — சந்தோஷத்தினுல் தான் !

# 13

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்.
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையினும் நமக்குளே.
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரி நிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே.

— பாரதி —

அன்றிரவு முழுதும் மழை நீரைக் குடித்த பூமி பூரித்துக் கிடந்தது. 'ஸ்ராவ் றூ'மில் இருந்தாலும் பூரணியின் கண்கள் அடிக்கடி வாசலைப் பார்த்தன:

"இந்திரன் மாஸ்டர் அந்த வீட்டை ஒழுங்கு செய்து கொண்டு வருவாரோ?"

வழமையைவிடத் தாமதித்தே அன்று அவர் கல்லூரிக்கு வந்தார்.

"நேற்றுப் பின்னேரம் ஒரு அவசரமான வேலை இருந்ததிலை அந்தச் செத்த வீட்டுக்குப் போக முடியேல்லை. காலமைதான் போட்டு வாறன். அதுதான் 'லேற்' ஆகிட்டுது" — வந்தவுடன் தாசன் மாஸ்டரைப் பார்த்துச் சொன்னார்.

அந்த அவசர வேலை தான் கொடுத்த வேலையே என்பதைப் பூரணி உணர்ந்து கொண்டாள்.

"எந்தச் செத்தவீடு?" — தாசன் மாஸ்டர் கேட்டார்.

"அதுதான் அந்த சிவசங்கரபிள்ளை — வவுனியாவிலை வைச்சு ஜீப்போடை எரிச்ச செத்தவீடு....."

"அந்தாளின்ரை மகன் ஒருதன் உங்கடை வகுப்பாக்கும்..."

"ஓம். அதுதான் கட்டாயம் போக வேண்டிய இடம் சும்மா போய்த் தலையைக் காட்டிட்டு ஓடி வாறன்......"

தனக்கு உதவி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்திராவிடில் இவர் இன்று கல்லூரிக்கு லீவு போட்டுவிட்டு அந்தச் செத்த வீட்டில் நின்றிருப்பார் என்று நினைத்த போது...... அந்த ஜீவிதப் பிணைப்பு அவளை எதுவோ செய்தது.

"பூரணி ரீச்சருக்கு இண்டைக்கு எத்தினை மணிக்கு சுப்பர்விசன்?" அவளுக்கு அருகில் வந்து கேட்டார்.

"எனக்கிண்டைக்கு சுப்பர்விசன் இல்லை"

"அப்ப ஒருக்கா லைபிரறிக்கு வாங்கோ. அந்த பத்தாம் வகுப்பு மாக்கிங் ஸ்கீமை ஒருக்காப் பாப்பம்......"

அவள் புரிந்து கொண்டாள். எழுந்து பின்னால் சென்றாள்.

நூல் நிலையத்தில் ஒரு மேசையின் இரு பக்கத்திலும் ஒருவர் ஒருவரைப் பார்த்தபடி எதிர் எதிராக அமர்ந்தனர். எடுத்த எடுப்பில் அவர் சொன்னார்.

" வீடு ஒழுங்கு படுத்திட்டன். நீங்கள் எப்பவும் வரலாம். ஹொஸ்பிட்டல்லை வேலை செய்யிற இரண்டு கேள்ஸ் முன்னறைக்கு வாறதுக்கும் ஒத்துக் கொண்டிட்டினம்......"

" தாங்க் யூ வெரி மச்..."

மிக உணர்ச்சி வசப்பட்டே தன் நன்றியறிதலை அவள் தெரிவித்துக் கொண்டாள்.

" நானும் இரவு முழுதும் நித்திரை கொள்ளேல்லை. நீங்கள் சொன்ன ஒவ்வொரு வசனமும் educer Demo திரும்பத் திரும்ப மனதில வந்துகொண்டே இருந்திது. எல்லா நன்மை தீமையளையும் நல்லா யோசிச்சு நிதானமா ஒரு முடிவுக்கு வந்தன். நீங்கள் பாலசிங்கத்திட்டையிருந்து சட்டபூர்வமா விடுதலை எடுங்கோ. உங்களுக்குச் சம்மதம் எண்டா நான் உங்களை ஏற்றுக் கொள்ளிறன்... உங்கடை குழந்தையையும் சேத்துத்தான்......"

திடீரென ஒரு குளிர்ச்சி காலை அப்பியது போல் இருந்தது பூரணிக்கு; வெளியே மழை பிசுபிசுக்கத் தொடங்கியதால் மட்டும் ஏற்பட்ட உணர்வு அது என்று தோன்றவில்லை.

அவள் இதை நிச்சயமாய் எந்தத் துகள் கணத்திலும் எதிர்பார்க்கவில்லை !

இப்போது பூரணி கதைக்க வேண்டிய நேரம் என்று சொன்னது போல இந்திரன் மாஸ்டர் வெளியே பார்த்துக் கொண்டிருந்தார்.

'ஏப்ரலின்' மலர்ச்சியைக் கிளையெல்லாம் ஏந்திக் கொண்டு பரந்திருக்கும் வாகை மரத்தைப் பார்க்கிறாரா? தெரியவில்லை.

பூரணியின் சிந்தனை அவள் பிடிமானத்திலிருந்து நழுவிப் பலதூரம் சென்று திரும்பியது.

"நான் மரக்கட்டையில்லை......"

"ஏதோ ஒரு காரணத்தாலே கணவனைப் பிரியிற பொம்பிளையள் மறுமணம் செய்யப்பிடாது என்ட பத்தாம் பசலிக் கருத்தும் என்னட்டை இல்லை..."

"சாதி பாத்துக் கலியாணம் செய்யிற எண்ணமும் இல்லை......"

அவள் ஏதோ ஒரு கோணத்திலிருந்து தொடங்கியபோது தனது பார்வையை வாகை மரத்திலிருந்து விலக்கிக்கொண்டு வந்து அவளை நேருக்கு நேராகப் பார்த்தார் அவர்.

"ஆனால்......"

அந்த வசனத்தைச் சொல்லி முடிக்க விரும்பாதவள் போலச் சிறிது சிந்தித்துவிட்டு அவள் மீண்டும் வேறொரு கோணத்திலிருந்து தொடங்கினாள்;

"நீங்கள் பிளெட்டோ படிச்சிருக்கிறியளா?"

அவர் இவளை, விஷயத்தை விட்டு வேறெங்கோ விலகிச் செல்லும் 'எக்சென்றிக்' என்று ஒரு கேலி நினைத்திருக்கலாம். ஆனாலும் அவளது கேள்விக்கு அவர் பதில் சொன்னார்.

"படிச்சிருக்கிறன். பிளேட்டோவின்ரை கல்வித் தத்துவம் ஃபேமஸ்..."

PDF Reducer

" இல்லை. 'பிளேட்டோனிக் லவ்' தெரியுமா? "

" நோ. தெரியாது...... "

அவள் மீண்டும் தயங்கினள். இவருக்கு அதை எப்படி விளங்கச் செய்வது என்று சிந்திததாள். பின்னர் திடீரென்று,

" விதெளட் ஹெசிற்றேசன்..... நானும் நேரடியாகவே சொல்லிறன். 'லவ்' இல்லாத 'செக்ஸ்' நான் போதியளவு அனுபவிச்சிட்டன். அதிலை தாங்க முடியாத வெறுப்பே வந்திட்டுது எனக்கு. இனிமேல் எனக்குத் தேவைப்படுறதெல்லாம் 'செக்ஸ்' இல்லாத 'லவ்' தான். அதைத்தான் 'பிளேட்டோனிக் லவ்' எண்டு சொன்னனன். உங்களிலை அந்த மாதிரி அன்புதான் எனக்கு இருக்கு. அதை மாத்திக் கொள்ள என்னாலை முடியாது. எனக்குக் குழந்தை பிறந்தா அதிட்டையிருந்தும் இப்பிடியொரு அன்பு எனக்குக் கிடைக்கும்...... "

educer Demo

அரைவிநாடி தயங்கி விஷயத்தைப் புரிந்து வார்த்தைகளைச் சேகரித்துக் கொண்டு இந்திரன் மாஸ்டர் சொன்னர்.

" நீங்கள் சொல்றது எனக்கு விளங்குது. அது 'தியற்றிக்கலாய்ச்' சரியுந்தான். ஆனல் 'பிறக்றிகலாய்ச்' சரிவராது. நான் உங்கடை குடும்பத்துக்கு வெளியிலை இருந்து கொண்டு உங்களுக்கு உதவி செய்யிறதை உங்களிட்டை அன்பு காட்டிறதைச் சமுதாயம் ஏற்காது. உங்களையும் என்னையும் பார்வையாலேயே கொன்று போடும்...... "

" உங்களைக் கலியாணம் செய்யிறதைச் சமுதாயம் ஏற்கும் எண்டு சொல்லிறியளா? புருஷனை விட்டுப் பிரிஞ்சு ஒரு கிழமையாகேல்லை; அதுக்கிடேலை

இன்னொருத்தனைத் தேடிப் போட்டாவெண்டு சொல்லும். உவைக்குள்ளை முந்தியே தொடர்பிருந்தது எண்டும் சொல்லும்... உவைக்குள்ளை முந்தித் தொடர்பிருந்த விஷயம் இப்ப நிரூபிச்சாச்சு எண்டு இவரும் சொல்லுவர்......''

''கலியாணம் செய்தாக் கொஞ்ச நாளைக்குக் கதைக்கும். பிறகு வாய் உழைஞ்சு போய் விட்டிடும். சரி அது போகட்டும். உங்கடை பிள்ளை .. அதுக்கு ஒரு அப்பா தேவையில்லையா? அப்பா இல்லாமல் வளருற குழந்தைக்கு உளப்பாதிப்பு ஏற்படும் எனபதையும் மறுக்கப் போறியளா?''

''அதை நான் மறுக்கேல்லை. ஆனால் அது தவிர்க்கப்பட முடியாத நிகழ்ச்சியாய்ப் போயிட்டுது......''

அந்த ஒரு கணத்தில் அவளது மனதின் மெல்லிய மூலை ஒன்று நிஜமாகவே வருந்தியது.

''நான் உங்களை இன்னும் ஒரு கேள்வி கேட்கலாம்: அதையும் கேட்டிட்டுப் போயிடுறன். அதாவது உங்களுக்குக் கணவனை இல்லாமல்...... உங்களைப் பொறுத்த வரைக்கும் ஒரு நண்பனாவே இருந்து கொண்டு... உங்கடை குழந்தைக்கு அப்பாவா இருக்கிறதுக்காக மாத்திரம் உங்களை ஏற்றுக்கொள்ளிறதெண்டால் அதுக்கும் நான் தயார் தான்......''

''ஓ......!''

உடம்பெல்லாம் விறுவிறென்று இரத்தம் பரவிச் சிலிர்ப்பூட்டியது பூரணிக்கு! அந்தக் கணத்தில் அவனுக்கு முன்னால் தான் மிகவும் குன்றிப்போய் நிற்பது போலவும் உணர்ந்தாள். மேலும் அதைப்பற்றிச் சில நிமிடங்கள் தெளிவாய்ச் சிந்தித்ததில் தனது முடிவே சரியானது என்ற முடிவுக்கு மீண்டும் வந்தவளாய்,

" உங்கடை கேள்வி என்னை ஒருக்கா உலுப்பித்தான் போட்டுது. ஆனாலும் கடைசியா நீங்கள் கேட்டது ஒரு வகையிலை தியாகம்! ஒரு சில நிமிட அனுதாபத்திலை நீங்கள் செய்ய ஒத்துக்கொள்ளிற தியாகம். ஒரு வேளை இறுதிவரையிலை உங்கடை சொல்லை நீங்கள் காப்பாத்தலாம். ஆனால் அது வலு கஷ்டம்! நீங்கள் ஏன் அப்பிடித் தியாகம் செய்ய வேணும்? நீங்கள் ஏன் அப்பிடி உங்கடை உணர்ச்சியளை மறைச்சு மறைச்சுக் கஷ்டப்பட வேணும்? *You are unmarried* (நீங்கள் திருமணம் செய்யாதவர்) உங்களுக்குச் 'செக்ஸ்' தேவை. இயல்பான தேவைதான்! நீங்கள் இன்னொரு பொம்பிளையைக் கலியாணம் செய்து கொண்டு திருப்தியாய் இருக்கலாமே? ஏன் எனக்காக இந்தத் தியாகம் செய்ய வேணும்? இந்த அசட்டு உருக்கம் ஒரு காலத்திலை கவலைப்பட வேண்டிய விசயமாயும் இருக்கும்......" என்றாள்.

" இதை இன்னொரு கோணத்திலையிருந்தும் பார்க்கலாம். அதையும் நான் சொல்லத்தான் போறன். உங்களுக்கு அன்பு துப்பரவாவே கிடைக்காததாலை தான் 'செக்ஸ்' இலை இவ்வளவு வெறுப்பு வந்திருக்கு. அன்போடை சேத்து, கொஞ்சம் அதிகப்படியான அன்போடையே சேத்து அது கிடைச்சா...... காலகதியிலை இந்த வெறுப்பு மறைஞ்சாலும் மறைஞ்சிடும்......"

வெளியே மழையின் தூறல் இப்போது பொடிப் பொடியான சாரலாய் விழுந்து கொண்டிருந்தது.

முழங்கைகளை மடித்து மேசையில் ஊன்றி முகத்தை உள்ளங்கைகளில் தாங்கிக் கசக்கியபடியே...

" நீங்கள் என்னை நல்லாக் குழப்பிப் போட்டியள் " என்றாள் பூரணி.

" இல்லை. இதிலை ஒரு குழப்பமும் இல்லை. நீங்களும் உங்கடை கருத்தைச் சொன்னியள். எனக்கும் என்ரை கருத்தை, கருத்துக்களைச் சொல்ல உரிமை இருக்கிறதாலை நானும் சொன்னன். முடிவெடுக்கிற பொறுப்பு உங்களைச் சேர்ந்தது. நீங்கள் எப்பிடிச் சொன்னாலும் அதை நான் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்றன்......"

பூரணிக்கு ஒரு வகையில் நெஞ்சு வெடிக்கிற மாதிரிச் சந்தோஷமாயும் இருந்தது. இன்னொரு வகையில் வலி தெரியாத ரணம் ஏற்பட்டதுபோலும் இருந்தது.

" நீங்களும் தாசன் மாஸ்டரும் நல்ல 'பிரண்ட்ஸ்'. அவர் உங்கடை வீட்டை வாறார். உதவி செய்யிறார். ஒரு பிரச்சினையும் இல்லை. நானும் கேதீஸ்வரன் ரீச்சரும் நல்ல சிநேகிதம். நானும் அவPDF Reducer விஷயங்களைப் பரிமாறிக் கொள்ளிறம். ஒரு பிரச்சினையும் இல்லை, ஏன் அந்த மாதிரி நீங்களும் நானும் இருக்க முடியேல்லை? ஏன் இந்த நட்பிலை இவ்வளவு பிரச்சினை வருது......?"

பூரணியின் கண்களில் இப்போதுப் நீர் கோத்துக் கொண்டது. தமிழ் இரக்கத்தின் மொழி என்பார்களே! அதன் அர்த்தம் இப்போது இந்திரன் மாஸ்டருக்குச் சரியாய்ப் புரிவது போல் இருந்தது......

" இனிமேலும் நாங்கள் கதைச்சுக் கொண்டிருந்தால் நீங்கள் அழுதிடுவீங்கள் போல இருக்கு. ஆனபடியால் நான் போப்போறன்; லைபிறறியனும் எங்களைக் கவனிச்சுப் பாக்கிறார். அதுக்கு முந்தி ஒண்டு மட்டும் சொல்லிறன். தாசன் மாஸ்டரும் நானும் பழகிற மாதிரி நீங்களும் நானும் பழக ஏலாது. அவர் ஆம்பிளை. நீங்கள் பொம்பிளை. உலகம் உள்ள வரைக்கும், மனித சமுதாயம் உள்ள வரைக்கும்,

ஆண் பெண் வேறுபாடு உள்ளவரைக்கும், மனித மனங்களிலே 'செக்ஸ்' உணர்வு உள்ள வரைக்கும், இந்தப் பிரச்சினை இருந்து கொண்டுதான் இருக்கும்.

*Do the very best you can. And then put up your old umbrella and keep the rain of criticism from running down the back of your neck.*

(உன்னால் முடிந்ததைத் திறமையாகச் செய்; பின்னால் வரும் விமர்சன மழை உன்னைத் தாக்காமல் பார்த்துக் கொள்.)

நான் உங்களுக்கு அவகாசம் தாறன். நீங்கள் யோசிச்சுத் தெளிஞ்சு ஒரு முடிவுக்கு வாங்கோ......"

educer Demo

இந்திரன் மாஸ்டர் எழுந்து விட்டார்:

பூரணி நினைத்தாள்:

"அவருக்கு என்னுடைய நிலை விளங்கும். விளங்க வேணும்......"

இந்திரன் மாஸ்டர் நினைத்தார்.

"பூரணிக்கு என்னுடைய கருத்துப் புரியும். புரியலாம். புரிய வேணும்......"

அடுத்த நாளே பூரணி புதிய வீட்டுக்குக் குடி வந்து விட்டாள்.

தனியாகத்தான்!

*"To earn the appreciation of honest critics and thus to lead a successful life...*

*( நடுநிலையான விமர்சகர்களின் பாராட்டைப் பெறுவதற்கு...... ஒரு வெற்றிகர வாழ்வை வாழ்வதற்கு...... )*

தாங்க முடியாத வெக்கை மாறி குளிர்ந்த பெருந் துளி மழை இப்போது சரமாரியாய்ப் பொழிந்து கொண்டிருக்கையில், பூரணி இவ்வாறு நினைத்துக் கொண்டாள் !

PDF Reducer

# இதுவும் ஒரு கடிதம்

அன்பான அக்கா !

அறிவு ஜீவிகளையும் மார்க்ஸியக் கருத்துக்களைக் கொண்டவர்களையும் விமர்சகர்களாக அழைத்து தமது நூலிற்கு ஓர் அந்தஸ்தைத் தேடிக்கொள்ளும் சமகாலக் கதைஞர்கள் மத்தியில், வளர்ந்து கொண்டிருக்கும் சகோதர இலக்கியவாதிக்கு ஒரு மதிப்பளிக்க முனைந்த உங்களது பெருந்தன்மை நாவலிற்கும் கதாசிரியையின் தனித்துவத்திற்கும் ஓர் சிறப்பினைச் சேர்த்து விடுகிறது !

கதைகளை எழுதுவது மட்டுமல்ல அதனை வாசகனிடம் சேர்ப்பிக்கும் பாரிய பொறுப்பும் மீண்டும் நம்மக எழுத்தாளர்களை வந்தடைந்து விட்டது. எழுபதுகளில் ஈழத்தில் இயங்கிவந்து பல சிறந்த நூல்களையும், புதிய நாவலாசிரியர்களையும் அறிமுகப்படுத்தி வந்த பிரசுர களங்கள் தமிழ் நாட்டின் மலிவுப் பதிப்புகளினால் ஆட்டங்கண்டு இயங்காதிருப்பது எமது நாட்டு எழுத்தாளர்களைப் பொறுத்தமட்டில் ஓர் பேரிழப்பான சங்கதிதான்: இதனால் எழுத்தாளனே தனது சொந்தச் செலவில் தனது படைப்புகளை அச்சுவாகனமேற்றிச் சந்தைப் படுத்தவேண்டிய ஓர் இக்கட்டான நிலைக்கு ஆளாக்கப்படுகிறான். இந்த ரீதியில்... 1982ன் இறுதிப் பகுதியில் 'மனித சொரூபங்கள்' என்ற தொகுதிமூலம் நூலாசிரியரான நீங்கள் ஈழத்தின் இன்றைய பிரச்சினைகட்கு மத்தியிலும் நான்காவது ஆண்டில் உங்கள் நான்காவது நூலினை வெளிக்கொணருமளவிற்கு அதிகமாக எழுதும் எழுத்தாளராக மட்டுமன்றி, வளமான ஓர் பதிப்பாசிரியராகவும் மிளிர்ந்து எண்பதுகளில் ஒரு குறிப்பிடத்தக்க எழுத்தாளராகத் திகழுகின்றீர்கள் என்றால் அது மிகையாகாது.

அறுபதுகளில் சமுதாயத்தில் புரையோடிப்போன சாதிப் பிரச்சினைகளையும் சமூக ஏற்றத் தாழ்வுகளினை யும் இலக்கியமாக்கி வந்த படைப்பாளிகள் எழுபதுக ளில் பிரதேச ரீதியான பிரச்சினைகளைப் பிராந்திய மண்வாசனைகளுடன் அணுகி வெற்றி கண்டனர். விளை வாக ஆரோக்கியமான பல நாவல்களை ஈழத்து இலக் கிய உலகம் ஈன்றெடுத்தது; ஆனால் எண்பதுகளில் புனைகதை இலக்கியம் ஓர் தேக்க நிலையினை அடைந்து விட்டதாகக் கருதுமளவிற்கு, இன்றைய செய்திகள் இலக்கியங்களாகப் பரிணமிக்க முடியாதளவிற்கு, எமது பிரசுரகளப் பிரச்சினை விஸ்வரூபமாகிவிட்டது!

நடந்து கொண்டிருக்கும் செய்திகள் நாவல்களாக எழுதப்பட்டாலும் அதனைத் தமது சாதனத்தில் அச் சேற்றப் பத்திரிகை நிறுவனங்கள் அச்சந் தெரிவிப்ப தும் இயங்கிவந்த ஓரிரு பிரசுர களங்களும் ஆட்டங் கண்ட நிலைகளும் இத்தகைய தேக்கநிலைகட்கு ஒப்புக் கொள்ளப்படக்கூடிய காரணங்களாகத்தான் தென் படுகின்றன. இவ்வாறான முட்டுக் கட்டைகளையெல் லாம் முறியடித்து இன்றைய செய்திகளை நாவலாக்கி அதனைச் சுயமாகவே வெளிக்கொணரும் உங்களது முன்மாதிரி ஈழத்து இலக்கிய உலகின் எண்பதுகளின் பங்களிப்பிற்கு ஓர் நம்பிக்கையைத் தந்திருக்கிறது!

எண்பதுகளில் எரியும் பிரச்சினைகட்கு மத்தியில் வாழ்ந்துகொண்டு இன்னமும் இருபதாண்டுகட்கு முன் னதான சங்கதிகளையே சரிதங்களாக்கும் கதைஞர்கள் மத்தியில் ஓர் வித்தியாசமானவராக, அறிவியல் ரீதி யில் சிந்தித்து உளவியலின் பாதிப்புக்களுடன் பாத்தி ரங்களை உலவவிட்டுக் கதைகள் படைத்த நீங்கள் உங் கள் ஆரம்ப காலங்களிலேயே இலக்கிய உலகினால் எளி தாக இனங்காணப்பட்டதே உங்கள் திறனிற்குத் தக்க சான்றென நான் கருதுகிறேன். பல பிரச்சினைகளையும் நீங்கள் தொட்டுச் சென்றிருந்தாலும் பெண்ணடிமை

பற்றி எழுதும்போது உண்மையிலேயே ஆவேசப்பட்டுத்தான் விடுகின்றீர்கள். 'உள்ளத்தால் அடிமைகள்', 'ஒரு சோகம் இறுகும்போது' போன்ற உங்களது சிறுகதைகள் அவற்றினை உறுதி செய்கின்றன. அத்தகைய படைப்புகளின் ஆழம்தான் நீங்கள் நாவலிலும் நிலைத்து நிற்கக் கூடியவர் என்ற எதிர்பார்ப்பினை எனக்கு அளித்தது. இதனுல் தான் இரண்டாண்டுகளின் முன்னதாக உங்களது 'முரண்பாடுகளின் அறுவடை' என்ற இரண்டாவது தொகுதியின் வெளியீட்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்தும்போது, 'விரைவில் ஒரு நாவலையும் நீங்கள் எழுதவேண்டும்!' என்று பகிரங்க வேண்டுகோள் விடுத்தேன். அந்த வேண்டுகோள் இந்தக் குறுகிய காலத்துள் நிறைவேற்றப்படுவது...... உங்கள் இலக்கிய ஆக்கங்களில் நேர்மையான அக்கறை செலுத்திவரும் எனக்குப் பேருவகையைத் தான் அளித்திருக்கிறது!

educer Demo

'துயிலும் ஒரு நாள் கலையும்' என்ற தலைப்பிலிருந்தே நிச்சயமாக இந்த நாவல் பெண்ணடிமையைப் பிய்த்தெறியும் பிரச்சினையாகத்தான் இருக்கும் என்ற எனது ஊகம் நாவலின் ஆரம்பத்திலேயே உண்மையைப் புலனுக்கிவிடுகிறது! மாதர்தமை இழிவு செயும் மடைமையைக் கொளுத்துவோம்! எனப் பாரதி பாடிச்சென்று ஒரு நூற்றுண்டு கடந்தாலும் நமது நாட்டில் பெண்ணடிமைத்தனம் ஓரங்குலந்தானும் குறையவில்லை என முன்னர் உங்கள் ஓர் சிறு கதையில் உரக்கச்சொன்ன கருத்தினை இங்கு உறைக்கச் சொல்லியிருக்கின்றீர்கள்! அந்தயுக முடிவாக பில்லியன் தலைகளில் ஏறி நின்று உச்ச உரப்பில் சத்தமாகத் துயிலும் ஒரு நாள் கலையும்! என்று உங்கள் வழமையான ஆவேசத்துடன் நாவலை முடித்திருக்கின்றீர்கள். முற்போக்கு ரீதியாகச் சிந்திப்பவர்களுக்கு முடிவு ஓர் மயக்கத்தை அளித்தாலும் பாத்திரப் படைப்புகளின் அடிப்படையில் பார்க்கும்போது அந்த முடிவு

டு நிலையான விமர்சகர்களின் பாராட்டைப் பெறுவ தற்கு ஒரு வெற்றிகரமான வாழ்வை வாழ்வதற்கு வழிகோலித்தான் இருக்கிறது. கதைமாந்தரின் பின்னணிக் களமாக நிம்மதியற்ற நிகழ்காலமும் நிச்சய மற்ற எதிர்காலமும் பரிச்சயமாகிப்போன இன்றைய யாழ்ப்பாணத்து மண்ணினை அப்பட்டமாக அமைத்து வெற்றிகண்டிருக்கின்றீர்கள் !

இனி... உங்களது நாவலினைச் சற்று ஆராய்வோம் !

ரவுண் பஜாரில் ஒரு பிரபல பிஸ்னஸ்மான் பால சிங்கம். அவரிற்கு வாழ்க்கைப்படும் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியை பூரணி. தனது கல்விநிலை தன் மனைவியினுடையதுக்குச் சமமில்லை என்ற தாழ்வுச் சிக்கலால் அவரது மனம் தாளுகவே அவளை அவளுக்குச் சமமான கல்வி அறிவுள்ளவர்களுடன் இணைத்துப் பார்த்து... பின்னர் அந்த நினைவையே சொல்லாக்கி இன்னும் சிறிது காலத்தில் இந்த நினைவே சொல்லுமே பெரிய சந்தேகப் பேயாகி... கல்லூரியில் பூரணியுடன் படிப்பிக்கும் இந்திரன் மாஸ்டர்மீது பால சிங்கத்தின் கவனம் திரும்புகிறது. '' ஓமோம். ஊனக்குத் துணை இல்லை எண்ட உடனை துணை வாறதுக்குக் கனபேர் இருக்கினம். புதுக் கரியைவிட ஒருக்கா எரிஞ்ச கரிதான் கெதியாப் பிடிக்கும் எண்டு இவன் இந்திரனுக்கு நல்லாத் தெரிஞ்சிருக்கு '' எனப் பொருமுகிறுர். தன் சுடு சொற்களால் அவளை அணுஅணுவாக வதைக்கிறுர்.

கல்லானுலும் கணவன் தான் ! அவன் என்ன சொன்னுலும் கேட்டுத்தான் ஆகவேண்டும் எனப் பத்தாம் பசலித் தனமாகப் பூரணி இருக்கவில்லை ! பதிலாகக் கொதித்தெழுந்தாள்! '' நீங்கள் எப்பவும் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்க நானும் எப்பவும் கேட்டுக் கொண்டிருப்பன் எண்டு நினைக்காதையுங்கோ! '' என்றவள் '' எனக்கு முந்தி வாழ்ந்த பல

PDF Reducer

பொம்பிளையளும் இப்ப என்னுடை வாழ்ந்துகொண் டிருக்கிற பல பொம்பிளையளும் இந்தக் கட்டுப்பாட் டுக்கு அடங்கி ஆசைகளை விழிகளிலே மட்டும் தேக்கி பெருமூச்சுகளிலே தங்களைக் கரைச்சுக்கொண்டு எப்பி டியோ வாழ்ந்திட்டுச் செத்துப் போயினம். இந்த நித்திரையிலிருந்து எல்லாப் பொம்பிளையளும் எழும்ப வேணும்! நான் முதலிலே எழும்பவேணும்!" எனச் சிந்தித்தவளாக முடிவில் அந்தக் கொடுமைக்காரனை விட்டெறிந்துவிட்டு புதிய வீடொன்றிற்குக் குடித் தனம் செல்கிறாள்! தனியாகத்தான்!

அன்பில்லாத தாம்பத்தியத்தை நான் போதிய ளவு அனுபவிச்சிட்டன். அதிலே தாங்கமுடியாத வெறுப்பே வந்திட்டுது எனக்கு! இனிமேல் எனக்குத் தேவைப்படுகிறதெல்லாம் 'செக்ஸ்' இல்லாத அன்பு தான். அதைத்தான் 'பிளேட்டோனிக் லவ்' எண்டு சொன்னன். உங்களிலே அந்தமாதிரி அன்புதான் எனக் கிருக்கு. அதை மாற்றிக்கொள்ள என்னாலே முடியாது. பிறக்கப்போற என்னுடைய குழந்தையிலும் இப்பிடி யொரு அன்பு எனக்குக் கிடைக்கும்! — எனச் சொல் லித் துணைக்கு வருவதாகக் கேட்கும் இந்திரனுக்குப் பூரணி விளக்கந் தருகிறாள்.

கொடுமைக்காரக் கணவனிடமிருந்து விடுதலை பெற்று அந்த இந்திரன் மாஸ்டரைக் கைப்பிடிப்ப தாயும் நாவலை வார்த்திருக்கலாம். ஆனால்...... 'அன் பின்மைக்கு ஒரே ஒரு மருந்து அன்பு தான். அது செக்ஸ் இல்லாத ஒரு தூய அன்பு' என்பதில் உங்க ளுக்குள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையை நாவலின் முடிவு வலியுறுத்தி நிற்கிறது! அது எனக்கும் மிகவும் பிடித்திருக்கிறது! முற்போக்கினை வலிந்து வரவழைத் துக் கொள்ளாது நீங்கள் சொல்ல நினைத்ததைத் திட மாகச் சொல்லி வெற்றி கண்டிருக்கின்றீர்கள்!

சில நிமிட அனுதாபத்திலே செய்யத் துணிகிற தியாகம் அந்த அசட்டு உருக்கம் வாழ்நாள் முழுவதிலும் கவலைப்படவேண்டிய விசயமாக வரும்! எனத் தன்னை ஏற்கத் துணிந்த அந்த 'அன்மரீட்' இளைஞனிற்குப் புலப்படுத்திய பூரணியின் தத்துவம் வாசகர்களையும் முடிவில் சிந்திக்க வைத்து ஓர் தெளிவிற்கு வரவழைக்க வைக்கிறது!

முடிவாக...... உண்டல், உயிர்த்தல், உடலியல் புணர்ச்சி மட்டுமல்ல வாழ்க்கை, அதிகப்படியான அன்போடை சேர்த்துக் கிடைக்கின்ற தாம்பத்தியம் தான் பூரணமான வாழ்க்கை என்பதனைப் பூரணியின் இந்தச் சரிதம் எமக்குப் புலப்படுத்தி நிற்கிறது!

இன்னும் இந்நாவலில் வரும் பூரணியின் தம்பி குமார், தங்கை ஆரணி போன்றோருக்கு ஏற்படும் சமகால நிகழ்வுகளின் பாதிப்புகளின் சித்திரிப்புக்கள் நாவலிற்கு உயிரோட்டத்தைக் கொடுத்திருக்கிறது. பாடசாலையில் பூரணியுடன் உலவும் ஆசிரியைகள் கேதீஸ்வரன், கமலா ஆசிரியர்கள் தாசன், லிங்கம், மூர்த்தி, பத்மநாதன், கல்லூரி அதிபர் போன்றோரும் இந்தச் சமூகத்தின் பிரதிநிதிகளாக விளங்கும் உயிரோட்டமிக்க பாத்திர வார்ப்புகள் தான். இவர்களுள் கேதீஸ்வரன், தாசன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தவிரவும் இன்றைய யாழ்ப்பாண மண்ணின் கல்லூரிகளின் அவலநிலைகளைத் திறம்படவே விபரித்திருக்கிறீர்கள். "ரஞ்சித்தும் தேவனும் போட்டினம், மகேசன் கொக்குவிலிலை இருந்து வாறவன் சீசன்' ரிக்கற். இண்டைக்கு பஸ் ஓடேல்லை. டீசல் இல்லையாம்; மற்றது ஈசன். அவற்றை அப்பா அனுராதபுரத்திலை சரியாம்" என்ற கூற்றுக்கள் வெறுமனே ஒப்புக்காகத் தரப்பட்டவைகளாக அன்றி இன்றைய பிரச்சினைகட்கான ஆணிவேரினைப் பற்றி ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுகின்றன!

கல்லூரிகளில் மேல்மட்டங்களில் நடைபெறும் ஊழல்கள், தில்லுமுல்லுகள் இளம் ஆசிரியர்களினது மாணவிகள் மீதான 'கொஞ்சல்'கள் மாறும் பரம்பரை இடைவெளிகளிலும் மாருத மாணவ மாணவிகளது சேஷ்டைகள் யாவற்றையும் தொட்டுச் சென்றிருக்கிறீர்கள். இதற்கு உங்களுக்குப் பழக்கமாகி விட்ட வழமையான பள்ளிக்களம் மிகவும் கைகொடுத்தே உதவியிருக்கிறது!

உங்களது அதிகமான சிறுகதைகள் பள்ளிக்கூடத்தின் பின்னணியில்தான் பின்னப்பட்டவைகள். இது ஒரு சலிப்பைத் தரவைக்கும் முயற்சி எனப் பல தடவைகளில் நானும் சுட்டிக் காட்டியிருக்கிறேன். ஆனாலும் உங்களது நாவலிற்கும் நீங்கள் அதே களத்தைத் தேர்ந்து கொண்டது உங்களது கல்லூரி அனுபவங்களை,, அதன் பாதிப்புக்களைப் பெரிதுபடுத்திக் காட்டவாக இருக்கலாம். என்றாலும் இந்தக் கதைமாந்தர் களம் உங்களது சிறு கதைகளில் அழகாக விழுந்தளவிற்கு நாவலில் சுவைதரவில்லை என்றே சொல்லத் தோன்றுகிறது!

ஆனாலும் உங்களது படைப்புக்கள் மூலம் அறிவியலை வாசகர்களுக்குப் புகுத்தி வழமையான முத்திரையைப் பெற்றுக்கொள்ள நீங்கள் இங்கும் தவறிவிடவில்லை! நியூட்டனின் மூன்றும் விதியையும் நிர்ப்பீடனத்தினையும் வைத்து சமூகத்தைப் பார்க்க எத்தனிக்கும் இடம் வர்த்தக, கணக்கியல் துறைகளுடன் சம்பந்தப்பட்ட என்னால்கூட நன்றாகவே ரசிக்க முடிகிறது!

சமகால நிகழ்வுகளையும் சூழல் தாக்கங்களையும் கதையின் குறியீடுகளாக்கியிருக்கும் இடமும் சுவையாகவே அமைந்திருக்கிறது! நேரம் நடுநிசி என்பதைப் பன்னிரண்டு அலாரச் சத்தங்கள் உறுதி செய்

தன. எங்கிருந்தோ பெருத்த ஓசையுடன் வெடித்த குண்டு ஒன்றினுல் கண்ணுடி யன்னல்கள் ஒருமுறை குலுங்கி அதிர்ந்தன. 'எந்தப் பாலம் உடைந்ததோ?' —என அவள் சிந்திப்பதாக அமைந்த சந்தர்ப்பம் அவள் வாழ்க்கையின் தொடர்புப் பாலமாகப் பிணைந்திருக்கும்போது நன்ருகத்தான் அமைந்திருக்கிறது.

சிலேடைத்தனமானதாய் அமைந்து விட்ட சில பகுதிகளும் நாவலிற்கு நயத்தைச் சேர்க்கத் தவற வில்லை! பூரணி ரீச்சர் இண்டைக்குப் போகேலையோ? என இந்திரன் மாஸ்டர் கேட்டபோது, அந்தக் குழைவுத் தன்மை தன் மணவாளனில் இல்லையே என்ற ஆதங்கத்துடன் இரண்டிற்குமாகச் சேர்த்து "இல்லை" என்று அவள் சொல்வதும்.... பாலசிங்கம் பூரணியுடன் சண்டைப்பட்டுக் கொண்டே வீட்டினுள் நுழைந்தபோது... ஆட்டுக் குட்டிகள் இரண்டும் முற்றத்தில் நின்று பூங்கன்றுகளைத் தின்றுகொண்டிருந்தன; வாகனத்தை விட்டு இறங்கியதும் இறங்காததுமாக எவர் எவரையோ மனதுள் வைத்து "சனியனுகள்" என ஆட்டுக்குட்டிகள் மீது பாலசிங்கம் எரிந்துவிழும் இடங்களும் இத்தகைய நயத்தை அமைத்துத் தந்திருக்கின்றன!

வீதிகளில் அமைதியாக நடக்க முடியாத நிலைகளும், ரவுணில் திடீரென்று ஏற்படும் சம்பவங்களால் நிகழும் பாதிப்புக்களும், தாழப்பறந்து பயமுறுத்திச் செல்லும் ஹெலிகோப்டர்களும், பீரங்கி வெடிகளும், தேடுதல் வேட்டைகளும், சமகால நிகழ்வுகளாகி நாவலைத் தன் காலத்தைக் கூறும் கண்ணுடியாக்கியிருக்கின்றன!

அத்தியாயங்களுக்கு அத்தியாயம் மு. வ. அவர்களின் பாதிப்புக்கள் தென்படுவதும், நாவல் வார்ப்பில் ஓர் இளமை புலப்படுவதும் இந்நாவலினை அதி

ருப்தியாக்கும் விடயங்களாக நான் கருதினாலும் சமூகப் பார்வை இன்னும் உங்களிடத்தில் விரிவடையும் போது இத்தகைய குறைபாடுகள் அற்றுப்போகவே செய்யும் எனவே எதிர்பார்க்கிறேன்.

சொல்லவந்த விடயத்தைத் துணிவாகச் சொல்லிவிடுந் தன்மை, நுண்மையான காட்சித் திறமை, அறிவியலை வாசகர்கட்கு ஊட்டும் வழமையாவும் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களுக்குரிய முத்திரைகளாகி நாவலிற்கு நயத்தைச் சேர்த்து நிற்பதனாலும்; சமகாலப் பிரச்சினைகட்கு மத்தியிலும் சளைக்காது தன் இலக்கிய முயற்சிகளை மேற்கொண்டு வருவதனாலும்; தனது மூன்றாவது இலக்கிய அறுவடையில் என் சிறுகதைகளையும் சேர்த்து ஓர் ஊக்கத்தைத் தந்ததோடு மட்டுமன்றி தனது நாவலிற்கும் ஓர் பின்னுரை தருமாறு அன்புடன் கேட்டுக்கொண்ட பெருந்தன்மைகளாலும் ஈழத்து நாவலாசிரியர்கள் educer Demo மத்தியில் மதிப்பிற்குரிய கோகிலா அக்கா அவர்களுக்கும் ஓர் தனியான இடம் இருக்கும் என்பதே என் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்!

மற்றும்.........

மகேந்திரன் அண்ணாவிற்கும், மருகன் பிரவீணனிற்கும் எனது அன்பைத் தெரிவித்துக் கொள்ளுங்கள்!

மீண்டும் சந்திப்போம்!

அன்புடன்
தம்பி
புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

விநியோகபகுதி,
வீரகேசரி,
கொழும்பு.
17-4-86

PDF Reducer

educer Demo

கோகிலா மகேந்திரனின் கதைகள் அனைத்தும் அநேகமாக உளவியல் ரீதியில் சிந்தித்து உருவாக்கப்பட்டவையாகவே இருக்கும். இது இவரது கதைகளில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு விசேட மான அம்சமாகும்.........

சந்திரா தியாகராஜா—13-7-85 தினகரன்

Among the Women writers in this country writing in Tamil, Kohila Mahendran is 'my favourite because there is freshness and genuineness in her attempts.........

*K. S. Sivakumaran—The Island, 12th May 1985*

பெரும்பான்மை வாசகர்களுக்குப் பிடிக்காத அல்லது பெரும் பான்மை வாசகர்கள் ஏற்க மறுக்கும் விஷயங்களைக் கூடத் தன்னு டைய எழுத்தின் ஆளுமை மூலமாக ஏற்றுக்கொள்ளச் செய்யும் சக்தி கோகிலா மகேந்திரனுக்கு வந்து கொண்டிருக்கிறது.

தெளிவத்தை ஜோசப்—28-4-85 வீரகேசரி

கோகிலாவின் படைப்புகள் மூலம் யாழ்ப்பா[illegible] ம[illegible] மணத்தை நுகர முடிகின்றது.

PDF Reducer

ராதாரமணன்—21-4-85 தினகரன்

'துயிலும் ஒரு நாள் கலையும்' நாவலில் ஒரு பெண்ணின் இதய தாகத்தை மன எழுச்சிகளை வெகு அற்புதமாக, யதார்த்த பூர்வமாக வெளிப்படுத்தியிருக்கும் பக்குவம் நாம் பாராட்ட வேண்டியதொன்று.

ஜனூபா ரஹீமா சாஹுல் ஹமீட்—14-10-84 மித்திரன்

கோகிலா மகேந்திரனின் கதைகள் சமுதாயப் பிரக்ஞை உள் ளனவாகவும் எதிர்காலத்தில் நல்ல தகைமையுள்ள எழுத்தாளராக மிளிர்வதற்குக் கட்டியம் கூறுபவையாகவும் அமைந்துள்ளன

ரஸஞானி—4-3-84 வீரகேசரி

பெண்ணாக இருப்பதால் மட்டுமே சிந்திக்கக் கூடிய விடயங் களை ஆண்கள் தவற விட்டுவிடுகிறார்கள். ஒரு பிரச்சினையை ஒரு பெண் பார்ப்பதற்கும் ஒரு ஆண் பார்ப்பதற்கும் இடையில் நிச்சய மாக வேறுபாடு உண்டு. கோகிலாவினால் இந்த இடைவெளி நிரப் பப்படுகிறது.

சித்திரலேகா மௌனகுரு—1-3-84 ஈழநாடு